825

C

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
அலுவல் வெளியீடு

தொகுதி – 19 எண் – 3

மார்ச் – 1992

D
V211,31'N92
N92.19.3
164970.

வெளியீடு 22-10-1992

Issued 22-10-1992

825/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 23, 1992 - தொகுதி 19 எண். 3
Monday the 23rd March, 1992 - Volume 19 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00]

[Price Rs. 3 00

## உள்ளடக்கம்

23—03—1992


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து. | 539 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள். | 540—563 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள். | 583—607 |
| **3. சிறப்புக் குறிப்பு—** | |
| நாகைப்பட்டினத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் காணாமற் போனது குறித்தும், கச்சத்தீவு பிரச்சினை குறித்து முதலமைச்சருக்குப் பிரதமர் எழுதிய கடிதம் குறித்தும் .. .. .. | 608—612 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| (அ) உப்பு வியாபாரிகள் மீது சுகாதார அதிகாரிகள் கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வது குறித்து .. .. .. | 612—616 |
| (ஆ) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்திலுள்ள சந்தன எண்ணெய் ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து. | 617—620 |
| **5. அறிக்கை அளித்தல்—** | |
| சட்டவிதிகள் ஆய்வுக் குழு .. .. | 620—621 |
| 6. மானியக் கோரிக்கைகள், 1992—93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி) | 621—646 |
| கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன். | 649—701 |
| *மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் .. | 621, 622, 632 675—700 |
| *திரு. உ. பலராமன் .. .. .. | 622—638 |

பக்கங்கள்

*திரு. வே. தம்புசாமி .. .. ... 636—639

திருமதி ரமணி நல்லதம்பி .. .. 639—646

*டாக்டர் ச. ஆரோக்கியசாமி .. 649—652

திரு. கே. தவசி .. .. .. .. 656—658

திரு. கி. தர்மலிங்கம் .. .. .. 658—664

*திரு. ச. இராமச்சந்திரன் .. .. 664—673

*திரு. கே. கே. சின்னப்பன் .. ..

7. விதி 110-இன்கீழ் வருவாய்த்துறை அமைச்சரின் அறிக்கை—

குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்கும் பணிகள் மற்றும் வறட்சி நிவாரண நடவடிக்கைகள் குறித்து. .. .. 646—648

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 101

164970
600 008
D
V211,31(N92
N92.13.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 10, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு—2023**
**1992 மார்ச் 23, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 9-30 மணியளவில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு."

தம் குடியை உயர்த்துவதற்குப் பெரு முயற்சி செய்பவர்க மேற்கொள்ளும் செயல்கள் விரைவில் அவையே நல்லமுறையில் முடியும் என்பது உறுதி.

### 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. இ. சந்திரசேகர நாயகர் அவர்கள் 15—8—1991 அன்றும், திரு. டி. இருசப்பன் அவர்கள் 16—12—1991 அன்றும் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. இ. சந்திரசேகர நாயகர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. இருசப்பன் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ஆத்தூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 299, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

299—

### கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைத்தல்

* 4404 டாக்டர் வெ. சரோஜா :
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறையில் இருக்கும் கைதிகளுக்கு அவர்களின் நன்னடத்தையின் காரணமாக மதிப்பெண் கொடுத்து தண்டனையைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிறையிலிருக்கும் கைதிகளுக்கு அவர்களின் நன்னடத்தையின் காரணமாக தண்டனையைக் குறைப்பது பற்றிய விதிகள் ஏற்கனவே சிறை நடைமுறை நூலில் (Jail Manual) குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் பயனடைந்த பெண் கைதிகள் பற்றிய முழு விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா . என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அண்மையில் போற்றுதலுக்குரிய நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிறந்த தினத்தின்போது பெண் ஆயுள் கைதிகளுக்கு விடுதலை அளிக்கப்பட்டது. இதுவரையில் 10 ஆண்டுகள் முழுமையாக சிறைத் தண்டனை கழித்த அனைத்துப் பெண் கைதிகளையும் கடந்த 24—2—1992 அன்று போற்றுதலுக்குரிய நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த



நாளை ஒட்டியும், இந்த அரசு உருவானதை ஒட்டியும், மனித நேய அடிப்படையில் 10 ஆண்டுகள் முழுமையாக சிறைத் தண்டனை அனுபவித்த பெண் ஆயுள் கைதிகள் அனைவருமே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ஆர். முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்பெண்கள் நன்னடத்தையின் அடிப்படையில் போடப்படுகிறபோது, அங்கே யார், யார் இருந்து எப்படி இந்த மதிப்பெண்கள் எந்தவகை நன்னடத்தையிலே கணக்கெடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறை நடைமுறை நூல், ஜெயில் மேனுவலில் தொகுதி-2, விதி எண் 317-இன்படி 3 மாதங்கள் அல்லது 90 நாட்களும் அதற்கு மேலும் தண்டனை அடைந்த ஒவ்வொரு சிறைவாசிக்கும், சிறையுள் அவர்களுடைய நன்னடத்தைக்காக மாதம் இரண்டு நாட்கள் வீதம் குறைக்கப்படுகிறது. சிறையில் அவர்கள் செய்யும் பணிக்கென இரண்டு நாட்களும் ஆக மொத்தம் மாதத்திற்கு 4 நாட்கள் வீதம் தண்டனை குறைப்பு வழங்கப்படுகிறது. சிறையில் சமையல், பெருக்குதல் போன்ற பணிகளில் ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் பணிபுரியும் சிறைவாசிகளுக்குக் கூடுதலாக காலாண்டுக்கு 3 நாட்கள் வீதம் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டு முழுவதும் சிறைக் குற்றம் எதுவும் புரியாமல் ஒழுங்காக இருப்பவர்களுக்கு ஆண்டுக்கு 15 நாட்கள் கூடுதலான தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. மேற்படி சிறை நடைமுறை விதி நூல் தொகுதி-2, விதி எண் 317-இன்படி சிறைவாசிக் காவலர்களுக்கு, கான்விக்ட் வார்டன்—ஸுக்கு மாதத்திற்கு 8 நாட்கள் வீதமும், சிறைவாசி மேற்பார்வையாளர்களுக்கு, கான்விக்ட் ஓவர்சீயர்ஸ்-க்கு 6 நாட்கள் வீதமும், சிறைவாசி இரவுக் காவலர்களுக்கு, கான்விக்ட் நைட் வாட்ச்மேன்களுக்கு, 5 நாட்கள் வீதமும் பிரதி மாதம் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. இவை தவிர மேற்படி சிறை நடைமுறை நூல் விதி எண் 325-இன்படி மேற்குறிப்பிட்டுள்ள தண்டனைக் குறைப்பைத் தவிர, ஆண்டுக்கு ஒரு முறை கீழே குறிப்பிட்டுள்ள 7 சிறப்புக் காரணங்களுக்காக சிறை கண்காணிப்பாளரால் 30 நாட்கள் சிறப்புத் தண்டனைக் குறைப்பும் சிறைத் தலைவர் அல்லது அரசால் 60 நட்களுக்கு மேற்படாமல் சிறைத் தண்டனை குறைக்கப்படுகிறது.

(1) சிறையில் ஒழுங்கு மற்றும் விதிமுறைகளைப் பேணுவதற்கு சிறை நிர்வாகத்திற்கு உறுதுணை புரிதல்.

(2) கைவினை கற்பதில் தேர்ச்சி.

(3) உற்பத்தியில் அதிக முன்னேற்றம்.

(4) சிறை அலுவலர்கள் தாக்கப்படாமல் பாதுகாத்தல்.

(5) சிறையில் தீ பிடித்தல் போன்ற அவசர காலங்களில் உதவி புரிதல்.

(6) கல்விப் பட்டங்கள் அல்லது அரசினால் அங்கீகரிக்கப் பெற்ற தொழில் கல்விகளில் தேர்ச்சி பெறுதல்.

(7) துணிகள் அணிவது போன்றவற்றில் சிக்கனம்.

மேற்கண்டவாறு வழங்கப்படும் மொத்த தண்டனைக் குறைப்பு சிறைவாசிகளின் மொத்த தண்டனையில் கால் பகுதிக்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டுமென்பது சட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலைக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள் தமிழகத்திலே 14 ஆண்டுக்காலம் சிறையில் இருந்தால் தான் அது ஆயுள் தண்டனையாகக் கணக்கிடப்படுகிறது. அப்படி இருக்கிறபொழுது நாளுக்கு நாள் குற்றங்கள் பெருகி வருகிற இந்தச் சமுதாயத்தில் 14 ஆண்டுக்காலம் சிறையிலே இருக்க வேண்டியவர்களை 10 ஆண்டுக் காலம் முடிந்த பிறகு விட்டு விடுவது என்பதை விட முதலமைச்சர் போன்ற நல்லவர்களுடைய பிறந்த நாள் விழாக்களில் ஓராண்டு மட்டுமே குறைப்பு செய்வதற்காக அரசு வழிவகை செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேசவத் தலைவர் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர், அவர்களுக்குத் தெரியும். அண்மையிலே, சுப்ரிம் கோர்ட்டிலே மனுராம் என்ற ஒருவர் வழக்குப் போட்டு 14 ஆண்டுகள் அவர்கள் இருந்தே ஆகவேண்டும். குறிப்பாக இரண்டு குற்றங்களுக்காக அதாவது டெத் சென்டன்ஸ் கொடுத்து அவைகளில் ஆயுள்சிறைவாசிகளாக ஆகின்ற குற்றவாளிகளை 14 ஆண்டுக்காலம் நிச்சயமாக வைத்திருக்க வேண்டுமென்று ஜஸ்டிஸ் வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் சுப்ரிம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு அளித்ததன் காரணமாக, 14 ஆண்டுகள் அந்த



ஆயுள் சிறைவாசிகளை, டெத் சென்டன்ஸ் கொடுத்து அவைகளில் லைப் சென்டன்ஸ்ஸாக மாறியவர்கள்; அதே போல் வேறு காரணத்திற்காக டெத் சென்டன்ஸ், பெற்றவர்கள் இந்த இரண்டு வகையினரைத் தவிர மற்றவர்களுக்கு அரசியல் சட்டத்திலே கவர்னரும் முதலமைச்சரும் சேர்ந்து மன்னிப்பு கொடுக்கலாம் என்று விதி இருக்கிறது. அதன்படிதான் போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த தினத்தின்போது 12 ஆண்டுகள் முடிந்த ஆண்கள்; 10 ஆண்டுகள் முடிந்த பெண்கள் கைதிகளுக்கு அன்றைக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னடத்தை காரணமாக விடுதலையாகும் கைதிகளுக்கு நம்முடைய அரசின் சார்பாக தொழில் தொடங்குவதற்கு, அரசிடம் எதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலிருந்து வெளியே வருபவர்களுக்கு அவர்கள் தொழில் செய்ய உதவ போதுமான பாதுகாப்புகளெல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 300, திரு டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வினா எண். 301, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

301—

## பூம்புகார் தொகுதியில் தொழில் நுட்பக் கல்லூரி.

*3295 திரு. எம். பூராசாமி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பூம்புகார் தொகுதியில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம், எனில், விரைவில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; தற்போது இயலாது.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 302.—திரு. ஆ. சுப்புரத்தினம்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

302

## தமிழகத்தில் மத்திய பல்கலைக் கழகம்

*4102 திரு. ஆ. சுப்புரத்தினம் :— மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழகத்தில் மத்திய பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துமாறு மைய அரசைக் கோரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்தை சில நிபந்தனைகளுக்குட்பட்டு மத்தியப் பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கான இவ்வரசின் இசைவினை மைய அரசு கோரியிருந்தது. மைய அரசின் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவையல்ல என்பதால் அவ்வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இருப்பினும் இம்மாநிலத்தில் மத்தியப் பல்கலைக் கழகத்தை நடுவண் அரசு புதிதாக தொடங்குவதற்கு இவ்வரசு மறுப்பேதும் தெரிவிக்கவில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மத்திய பல்கலைக் கழகங்கள் இன்றைக்கு டெல்லியில் ஜவஹர்லால் நேரு யுனிவர்சிட்டி என்று, பாண்டிச்சேரியிலும், ஹைதராபாத்திலும் சிறப்புற இயங்கி வருகின்றன. வெள்ளையர்கள் கல்விக்காக இந்த நாட்டிலே அடிக்கல் நாட்டிய காலக்கட்டங்களில் இந்தியாவில் மூன்றே மூன்று பல்கலைக் கழகங்கள்தான் துவங்கினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அப்படிப்பட்ட பழம் பெருமை வாய்ந்த இந்தத் தமிழகத்தில் மைய பல்கலைக் கழகம் இல்லாதது மிகக் குறையாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், இதய



தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய காலக்கட்டத்திலே இணக்கமாக மைய அரசு இருக்கக் கூடிய இந்த நிலையில் இந்த மைய பல்கலைக் கழகம் அமைக்கக் கூடிய கோரிக்கையை வலியுறுத்தி, அதை விரைவுபடுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மைய அரசு சென்னைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது நாம் அதற்கு மறுப்பு தெரிவித்தோமே தவிர, மைய அரசு தமிழகத்திலே ஒரு பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதை நாம் வரவேற்கின்றோம். அதற்கான முறையில் மத்திய அரசை அணுகுகின்றபொழுது நாங்கள் இந்த நிலையை வலியுறுத்திக்கூற இருக்கின்றோம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் இதுபோன்ற மைய பல்லகலைக் கழகங்கள் வேறு எந்தெந்த மாநிலங்களில் இருக்கின்றன ? இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் மாணவர்களுடைய தேர்ச்சி எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள். மைய பல்கலைக் கழகத்தைப் பொறுத்த மட்டில்,, ஆராய்ச்சிப் படிப்புக்கும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர்நிலைப் படிப்புகளில், உயர் பதவி எய்துவதற்கும் உரிய நல்ல பயிற்சி மையங்களாக அவை அமைந்திருக்கக் கூடிய கால கட்டத்தினால், இப்படிப்பட்ட பலன்களை அடையக் கூடிய வகையிலே தமிழகத்தில் இந்த மைய பல்கலைக் கழகத்தைத் துவக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல உரிய நடவடிக்கைகளை விரைந்து புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மைய அரசு எத்தனைப் பல்கலைக் கழகங்களை நடத்திக் கொண்டு வருகின்றது என்கின்ற விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. ஆனால் அவர்கள் அவ்வப்பொழுது தேவையான மாநிலங்களில் தேவைப்பட்ட இடங்களிலே ஆரம்பித்துக் கொண்டும் வருகிறார்கள். ஒரு மைய பல்கலைக் கழகம் தமிழ்நாட்டில் நடப்பது என்பது வரவேற்கக் கூடிய ஒன்றுதான். உதாரணமாக, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகமானது இன்றைக்கு நம்முடைய நாட்டில் ஒரு உயர்ந்த நிலையிலே வைத்து எண்ணப்படக்கூடிய அளவிற்குச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்தப் பல்கலைக் கழகத்திலே இருக்கின்ற பாடத் திட்டங்கள் தரத்திலே உயர்ந்தவையாக இருக்கின்றன. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வு எழுதுகிற மாணவர்கள், குறிப்பாக அந்தப் பல்கலைக் கழகத்திலே

படித்திருக்கின்ற மாணவர்கள்தான் அதிகம் பேர் தேறி வருகின்றார்கள். தமிழ் நாட்டைச் சார்ந்த ஓரிருவர் ஐ.ஏ.எஸ்,. ஐ.பி.எஸ், தேர்விலே வெற்றி பெறுகிறார்கள் என்றால் அவர்கள் பெரும்பாலும் அந்தப் பல்கலைக் கழகத்திலே படித்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இன்னும் பக்கத்திலே இருக்கின்ற பீஹார், உத்திரப்பிரதேசம் அல்லது வேறு மாநிலங்களிலே இருக்கின்ற மாணவர்கள்கூட பட்டப் பிற்படிப்பு படிக்கின்ற அந்த வகுப்புகளிலே டெல்லியிலே போய்ச் சேர்ந்து கூட படிக்கின்ற நிலைமைகள் இன்றைக்கு உருவாகியிருக்கின்றன. ஆகவே, நம்முடைய பல்கலைக் கழகங்களிலே அந்தப் பல்கலைக் கழகத்திற்கு இணையாகப் பாடத்திட்டங்கள் உயர்த்தப்படவில்லை என்ற குறைபாட்டை நாம் அவ்வப்பொழுது சுட்டிக்காட்டி வருகிறோம். தன்னாட்சி உரிமை என்கிற காரணத்தினாலே நம்முடைய பல்கலைக் கழகங்கள் நம்முடைய கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தினால் அவைகள் உதாசீனப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் நான் இங்கே குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலையில் ஒரு மத்திய பல்கலைக் கழகம் இங்கே ஆரம்பிக்கப்பட்டு, தரம் உயர்ந்த கல்வியை அவர்கள் தர முற்படுகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று நாமும் எதிர்பார்க்கின்றோம். அப்படி மத்திய அரசு ஒரு பல்கலைக் கழகம் அமைக்க முன் வருமேயானால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வேண்டிய உதவிகளை, ஆதரவுகளை நிச்சயமாகச் செய்வார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

முற்பகல் 9.45,

டாக்டர் மு, சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மத்தியப் பல்கலைக் கழகம் இங்கு அமைவதற்கு ஏதேனும் நிபந்தனைகள் உள்ளதா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க வேண்டும் என்கிற எண்ணம் மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆனால், அவர்கள் தனியாக ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைப்பதற்குப் பதிலாக. சென்னைப் பல்கலைக் கழகத்தை நம்முடைய கட்டுப்பாட்டிலே இருக்கிற பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்ன காரணத்தினால், அதை நாங்கள் தரமுடியாது; அது எப்படி இருக்கிறதோ, அதுபோலவே, தமிழக அரசின் கட்டுப்பாட்



டிலே இருக்கட்டும் என்றுதான் நாம் சொல்கிறோம், ஆனால் மத்திய அரசுக்கு ஒரு பல்கலைக் கழகம் இங்கு ஆரம்பிக்க வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணத்தை நிறைவேற்றுகிற விதத்திலே, தனியாகவே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அவர்கள் செய்யலாம், அப்படிச் செய்ய முன்வருகிற போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, மா. சா. மா இராமச்சந்திரன்,

திரு. மா. சா. மா இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் இங்கே ஆரம்பிக்கப்படுவதற்குச் சில விதி முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று நான் அறிகிறேன், அந்த வகையிலே, இங்கே நடைமுறையிலே இருக்கிற ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தைத்தான் மத்தியப் பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கு, மத்திய அரசு முன்வருமென்று அறிகிறேன். அதைத் தவிர அந்தப் பல்கலைக் கழகத்தோடு எந்த ஒரு கல்லூரியையும். Attach செய்யக் கூடாது என்றும் அறிகிறேன். ஆனால், பல்கலைக் கழகத்திற்குப் போதுமான கட்டிட வசதி இருக்க வேண்டுமென்றும் நான் அறிகிறேன். ஆக. இத்தனைக் காரணங்களும் ஒருங்கே அமையப் பெற்றுள்ள, காரைக் குடியிலேயுள்ள அழகப்பா பல்கலைக் கழகத்தை. மத்திய பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, தமிழ்நாட்டில் ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவது பற்றி. இந்தக் கேள்வி, ஆகவே. அவர்கள் அதை ஏற்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு செய்யும் என்று நான் கூறினேன், நம்மிடத்திலே இருக்கிற ஒரு பல்கலைக் கழகத்தை அவர்கள் கேட்பது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, எஸ், எஸ், ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது, பல்கலைக் கழகம், அதாவது மத்திய சர்க்கார் ஏற்படுத்துகிற பல்கலைக்கழகமானது, பல்வேறு விதங்களிலே இன்றைக்கு ஐ. ஏ எஸ். தேர்வுகளுக்கு பயிற்சி வைப்பதிலும் சரி, அதைப் போல Standard of Education என்று சொல்லக்கூடிய

அளவிலே கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதிலும் சரி. சிறப்பாக அவற்றைச் செய்யக்கூடியதாக இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். அதைப்போல், நம்முடைய தமிழகத்திலே உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களையும், அதற்கு இணையாக ஐ,ஏ,எஸ், பயிற்சி கொடுப்பதிலும், பல்வேறு வகையில் Sandard of Education-ஐ உயர்த்துவதிலும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், மாணவர்களுக்கு உரிய முறையிலே பல்வேறு பயிற்சிகளை அளிப்பது, போன்ற எல்லா அம்சங்களையும் வைத்து, உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு திட்டங்கள் வைத்திருக்கிறதா; அதைப் போன்ற திட்டங்களை அரசு நிறைவேற்றுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., பரீட்சைக்கு என்று எந்தப் பயிற்சியும் கிடையாது, ஆனால். ஐ,ஏ, எஸ்., ஐ,பி,எஸ்., பரீட்சை எழுதுகிற மாணவர்களுக்கு. எம்,ஏ,. எம்,எஸ்ஸி., பாடத் திட்டத்திலே கேட்கப்படுகிற கேள்விகளைத்தான் கேட்கிறார்கள், ஆகவே. எம்,ஏ,. எம்,எஸ்ஸி., பாடத் திட்டம் — ஐ,ஏ,எஸ்,. ஐ,பி,எஸ், தேர்வு எழுதுகிற மாணவர்களுக்கு வைக்கப்படுகிற தேர்வில் எந்தத் தரத்திலே கேள்வி கேட்கப்படுகிறதோ, அந்தத் தரத்திலே எம்,ஏ,. எம், எஸ்ஸி., பாடத் திட்டம் இருந்தால். அந்த மாணவர்கள் எளிதாக அதிலே தேற முடிகிறது, இப்போதுள்ள நிலைமை, ஜவஹர்லால் நேரு அவர்கள் பெயரிலே அமைந்திருக்கிற டெல்லி பல்கலைக் கழகத்திலே அந்த அளவுக்கு தரமுயர்ந்த கல்வியைத் தருகிறார்கள், அதேபோன்று தர வேண்டுமென்று கடந்த 10 ஆண்டுக் காலமாக, நம் தமிழ் நாட்டில் பேசிக் கொண்டுதான் வருகிறோம், இது குறித்து பல்கலைக் கழககங்களுக்கு நாம் யோசனை சொல்லலாமே தவிர, அவர்களை வற்புறுத்த முடியாது, காரணம். அவை தன்னாட்சி நிறுவனங்கள், ஆகவே, இன்றைக்குக்கூட இந்த சட்டமன்றத்திலே நீங்கள் கேட்கிறீர்கள்; நானும் சொல்கிறேன், இவைகள் நாளைக்கு பத்திரிக்கையிலே வர வேண்டும் அதை, பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர்கள், சிண்டிகேட் உறுப்பினர்கள் பார்க்க வேண்டும்; அந்தந்தப் பல்கலைக் கழகங்களிலே இருக்கிற பாடத் திட்டங்களின் தரத்தைப் பற்றி கவலைக் கொள்ள வேண்டும்; அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும், அதை உயர்த்துவதற்கு அவர்கள் முயற்சிகளை எடுப்பார்களேயானால். அந்தப் பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்கள். சிண்டிகேட் உறுப்பினர்கள் அத்தனைப் பேரும் இந்த அவையினுடைய உணர்வுகளை மதித்ததாகவும். தமிழ்நாட்டு மக்களுடைய நன்மைக்கு உதவியாகவும் நாம் எடுத்துக் கொள்ளலாம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 303,—திரு ம. தனபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



303—

## ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்

*410 திரு. ம. தனபால்:
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலைநகர் நகரியத்தில் ஆரம்பச் சுகாதார நிலையமாக செயல்படும் மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மறைமலை நகரில் ஆரம்பச் சுகாதார நிலையமாக செயல்பட்டுவரும் மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலைநகர் நகரியம் என்று சொல்வது, மிகவும் அபிவிருத்தியான ஒரு பகுதி. அங்கே என். எச்.—1, என். எச்.-2, என். எச்.-3 என்ற 3 வகையான குடியிருப்புகளும், கிட்டத்தட்ட 60, 70 கிராமங்களுக்கு மேலாக சுற்றுவட்டாரத்திலும், அதேபோன்று, அந்தப் பகுதியில் பல தொழிற்துறைகள், தொழில் நிறுவனங்கள் உள்ளதால், அந்தப் பகுதியை ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை உயர்த்தித் தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.50

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்லிய அனைத்துக் கருத்துக்களும் நியாயமானவை என்றாலும்கூட, அரசினுடைய நிதிப் பற்றாக்குறை காரணமாக அதையெல்லாம் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, நிதிநிலைமை சரியான பிறகு இதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 304. திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

[1992 மார்ச் 23

304—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம்.

*1530 திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, கொருக்கை, ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும். (ஆ) இல்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொருக்கை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடம் வாங்கப்பட்டது. அநேகமாக அது ஒரு போக்குவரத்து வசதி இல்லாத கிராமம். டாக்டர்கள் போய்வரவேண்டுமென்றால் கூட சரியான பாதை வசதி இல்லை. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு கீற்றுக் கொட்டகையில் இயங்கி வருகிறது. பெரும்பாலான கிராம மக்கள் வரக்கூடிய பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, அதற்குச் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இது போன்ற பின்தங்கிய பகுதிகளில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் அவசியம் கட்டவேண்டும். அது சம்பந்தமாக அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை முதல் கேள்வியாக இப்போதுதான் கேட்கிறார்கள். இதற்கு முன்னாலே கேட்டிருக்கிறாரா என்று தெரியாது. ஆனால் இந்த ஆண்டு அரசினுடைய நிதிப் பற்றாக்குறை எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். எனவே, நிதிப் பற்றாக்குறை சூழ்நிலைமைகளைப் பற்றி நாம் ஏற்கனவே சொன்னபடி அவை சரியாகின்றபோது இது பற்றி ஆலோசனை செய்யமுடியும். இருந்தாலும் தற்காலிகமாக அங்கே கூடுதலான வசதிகளை, செலவினம் அதிகம் இல்லாமல் செய்யமுடியுமா என்பதைமட்டும் பார்க்கலாம். எனவே, கட்டிடம் கட்டுவது என்பது உடனே எடுத்துக் கொள்ளப்



1992 மார்ச் 23]

படுமா என்பதிலே நிதிப்பிரச்சினையின் காரணமாக சந்தேகம் இருக்கிற காரணத்தால், அது உரிய நேரத்திலே கவனிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்று யோசனை ஏதாவது ஆலோசிக்கலாம் என்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே ஓட்டு வீடுகளே கிடையாது. அப்படிப்பட்ட ஒரு கிராமம் அது. ஆக, அங்கு கட்டிடம் கட்டுவது மிகவும் அவசியமான ஒன்று. நான் ஏற்கெனவே இருந்த அரசிடத்திலும் வலியுறுத்தி இருக்கிறேன். இப்போதும் நமது அரசிடம் வலியுறுத்துகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் துரிதமாகச் செய்ய, மீண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, நடப்பு ஆண்டில் எடுக்கக்கூடிய திட்டத்திலேயாவது இதைச் சேர்த்துக் கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கேள்வி போட்டதாக ஒத்துக் கொண்டார்கள். எனவே அப்போதெல்லாம் நடக்காது என்ற முடிவோடு அவர்கள் அதை விட்டுவிட்டார்கள். அப்படித்தான் நான் கருதுகிறேன். இப்போது நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுக்கு இந்த ஆண்டு இருக்கின்ற நிதிப் பிரச்சினை பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, நிதிப் பிரச்சினை தீருகிற நேரத்திலே இதைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 305. திரு. எஸ். எம். துரை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

305—

தருமத்துப்பட்டி—பன்றிமலை மலைப்பாதையில் போக்குவரத்து

*3499— திரு. எஸ். எம். துரை:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமத்துப்பட்டி—பன்றிமலை மலைப்பாதை அமைக்கப்பட்டும் இன்னும் போக்குவரத்து தொடங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பன்றிமலை மற்றும் ஆடலூர் மலைவாழ் மக்களுக்கு ராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் மூலம் மினி பஸ் விடப்படுமா?

[1992 மார்ச் 23

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கை வழித்தடம் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாகஇல்லை.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமத்துப்பட்டி—பன்றிமலை மலைப்பாதை அமைக்கப்பட்டும் மக்கள் இன்னும் சுமார் 20 கி.மீ.சுற்றளவில் உள்ளவர்கள் சுற்றிக் கொண்டுதான் வருகிறார்கள். அந்தப் பாதை போட்டு 10 வருடங்களுக்குமேல் ஆகின்றன. அதை உடனடியாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும், தருமத்துப் பட்டி—பன்றிமலை மலைப்பாதை வழியாக 'இல்லிஸிட்' ஆக வண்டிகள் ஓட்டப்படுவதால் நமது அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கும் பொருட்டும், மற்றும் பொது மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியிலிருந்து மூன்று கி.மீட்டர் தொலைவில் இருக்கிற பன்றிமலை வரையிலும் தடுப்புச் சுவர் இல்லை. அதைப்போல சரிவுள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தால், பன்றிமலை மலைப்பாதை பயன் உள்ளதாக மாற்றியதற்குப் பிறகு பேருந்துகள் இயக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் தடுப்புச் சுவர் இல்லை என்ற தகவல் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தவறுதலாகத் தரப்பட்டுள்ளது. மினி பஸ்கள், மினி லாரிகள் அந்த வழியாகச் சென்று கொண்டிருக்கின்றன. எனவே தனியார் மூலமாக மினி பஸ் விட அரசு உரிமம் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லாரிகள் போகின்ற இடத்திலே பேருந்துகள் செல்லமுடியாது. மினி பஸ்கள் போகின்ற இடத்திலே பேருந்துகள் செல்வதற்கான சாத்திய மும் இல்லை. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பில், பன்றிமலைப் பகுதியில் தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தால் அங்கே பேருந்துகளை இயக்க முடியாது என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். அதேபோல சரிவான பகுதியாக இருக்கிறது. எனவே பெரிய பேருந்துகளை அங்கே இயக்குவது கடினமாக



1992 மார்ச் 23]

இருக்கிறது. ஆகவேதான் பன்றிமலையை பயனுள்ள பாதை யாக மாற்றியதற்குப் பிறகு பேருந்து இயக்கப்படும் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 306 திரு கே. முனிவெங்கடப்பன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

306—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளை அலுவலகத்தை மாற்றல்.

*4230 திரு. கே. முனிவெங்கட்டப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருட்டிணகிரி நகரில் இயங்கி வருகின்ற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளை அலுவலகம் இடவசதியின்மை யால் புது இடத்தில் மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிருட்டிணகிரியில் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத் திற்கு சொந்தமான கிருட்டிணகிரி புறவழிச் சாலையில் 1.69 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம் ஒதுக்கப்பட்டு அதற்கான பணமும் செலுத்தப்பட்டுள்ளது. பணிமனை கட்டிடங்கள் அமைக்க சுமார் ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப் பட்டு வருகிறது. திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டதும் கட்டிடப்பணி துவங்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவி அவர் களின் ஆட்சியில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்டு என்று சொன்னதற்காக எனது தொகுதிவாழ் மக்கள் சார்பாக வும், மாவட்ட மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொண்டு மாவட்டத்தின் பெரிய நகரமான கிருஷ்ணகிரியில் தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் பயணம் செய்கிறார்கள், எனவே

அவர்களுடைய வசதிக்காக இந்தக் கிளையை எவ்வளவு வேகமாக அமைத்துக் கொடுக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கேட்காமல் கொடுக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள். ஆகவேதான் நமது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவுடனே இந்த இடத்தை நாங்கள் தேர்வுசெய்திருக்கிறோம் என்று சொன்னோம். ஓரிரு மாத காலத்தில் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவாக முடித்துக் கொடுப்போம் என்று சொன்னதற்காக மாண்புமிகு நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன். இது தொடர்பான கேள்வி கேட்கவேண்டும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கேட்காமல் கொடுப்பார்கள் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடர்பில்லாத துணைக் கேள்வி இது. இந்த மாதிரிக் கேட்டு அவையின் நேரத்தைத் தயவுசெய்து வீணாக்காதீர்கள்.

வினா எண் 307. டாக்டர் வெ. புருஷோத்தமன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

307—

## பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறி தொழிற்சாலை.

*1052 டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

**(அ) பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறிகள் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?**





(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

(அ) பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறிகள் பாக்டரி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஏற்கனவே எதைக்கேட்டாலும் இந்தத் தொகுதிக்கு இல்லை என்ற பதில்தான் கிடைக்கிறது. இருப்பினும் தமிழ்நாட்டிலே பெண்ணாகரம் தொகுதியில் பாப்பாரப்பட்டி பகுதியில்தான் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக உள்ளார்கள். இது மிகவும் பின்தங்கிய பகுதி. இந்த நிதிநிலை அறிக்கையில் கூட 5,000 விசைத்தறிகள் அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பகுதியில் ?-க்கு 60 பாலிஸ்டர் நூலைக் கொண்டு ஏற்றுமதி செய்யக்கூடிய துணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் .........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். துணி நெய்வது பற்றியெல்லாம் அவருக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிக்கு குறைந்தபட்சம் 100 விசைத்தறிகளைத் தொழில் கூட்டுறவு நெசவாளர் சங்கம் மூலமாக ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கொண்டுவர இருக்கிற இந்தத் திட்டமானது 5,000 கைத்தறிகளை விசைத்தறிகளாக ஆக்குகிற திட்டம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி விசைத்தறி பேக்டரி உருவாக்க வேண்டும் என்பது. ஆதலால் விசைத்தறி பேக்டரி உருவாக்குவதற்கு இயலாது. காரணம் ஏற்கெனவே கைத்தறி இயக்குநரால் இயக்கப்பட்டு வந்த 45 விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் 20 பேக்டரிகளாகவும், எஞ்சியவை பிரதம விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களாகவும் இயங்கி வருகின்றன. இவைகளில் இரண்டு மட்டுமே இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது. ஆதலால் இது இயலாது. கைத்தறிகளாக இருப்பவைகளை விசைத்தறிகளாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. குறைந்த பட்சம் 100 தறிகளை விசைத்தறிகளாக தற்போது மாற்றிக் கொடுத்தால் குறைந்தபட்சம் 100 பெண்களுக்கு நேரடியாகவும், 100 பெண்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக்கு வசதி இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியில் 100 தறிகளை விசைத்தறிகளாக மாற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களாக உள்ளவர்கள் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் மனு தாக்கல் செய்வார்களேயானால், அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 308. டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

308—

பரம்பிக்குளம்-ஆழியார் அணையிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்குதல்.

*817 டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரம்பிக்குளம—ஆழியார் அணையிலிருந்து Special water Release— என்ற அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்தி விவசாயத்திற்கு மட்டும் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆழியாறு திட்ட அணைகளிலிருந்து சிறப்பு நீர்விடுப்பு அதாவது Special water Release— என்ற அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கோ, சர்க்கரை ஆலைகளுக்கோ தண்ணீர் திறந்துவிடுவதில்லை. விவசாயத்திற்கு மட்டுமே தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன். இருக்கையில் இல்லை. திரு. வி. பி. சந்திரசேகர்.



திரு. வி, பி, சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்பெஷல் வாட்டர் ரிலீஸ் என்ற அடிப்படையிலே பயிர்களுக்கு உயிர் தண்ணீர் விடுகின்ற நேரத்திலே அப்படி விடுகின்ற தண்ணீர் ஆயக்கட்டுக்குட்பட்ட பகுதிகளிலே உள்ள பயிர்களுக்கு மட்டுமே பாய்ச்ச வேண்டும், அப்படியில்லாமல் அவர்களுடைய பலாத்காரத்தின் காரணமாக அதிகாரிகளை மிரட்டிவிட்டு ஆயக்கட்டிலே சேராத பயிர்களுக்குப் பாய்ச்சுகின்ற காரணத்தினாலே பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது, அப்படிப்பட்டவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே நம்முடைய அரசு இந்த நீர் விநியோகத்திலே எவ்வளவு முறையாக நடந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர் அவர்கள் நன்றாக அறிவார்கள், அதற்குப் பின்னாலே முறையான நடவடிக்கை எடுத்து தண்ணீரை சிக்கனப்படுத்தியதன் காரணமாகத்தான் இன்றைக்கு அவருடைய தொகுதிக்குக்கூட தென்னை மரத்திற்கு உயிர் தண்ணீர் விடுகின்ற ஒரு நடவடிக்கையை பொதுப்பணித்துறை மேற்கொண்டு இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது கடமை என்று கருதுகிறேன், ஆகவே நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலே முறையற்ற செயல்களிலே ஈடுபட்டு பாசன பரப்புள்ள நிலங்களை விட்டு வேறு நிலங்களுக்குப் பாய்ச்சுவதை இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது. அப்படி யாராவது நடவடிக்கையில் ஈடுபடுவார்களோயானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி,

திரு, நா, சா, பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பரம்பிக்குளம்—ஆழியாறு புராஜெக்ட் பாசன திட்டத்தில் குறிப்பாக திருப்பூர் நகருக்கு தெற்கே கொங்குர் பகுதியிலிருந்து பாசனத்திற்கு விடப்பட்ட தண்ணீரை சிலர் விவசாயம் செய்வதைவிட அதை விற்றுவிடுவதிலே லாபம் எனக்கருதி அதை லாரிகள் மூலமாக வியாபாரப் பொருளாக விற்றுவருகிறார்கள், அதனாலே பல விவசாயிகள் நேரடியாக விவசாயம் செய்கின்றவர்கள் பாதிக்கப் படுகிறார்கள், நிலத்தடி நீர் வளம் பாதிக்கப்படுகிறது, எனவே அப்படி முறையற்ற முறையிலே தண்ணீர் வியாபாரம் செய்யும் தனிப்

பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்குப் பதிலாக அரசே நேரடியாக திருப்பூரிலே ஒரு குளத்தைக் கட்டித் தேக்கி நேரடியாக விற்பதற்காவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட ஏற்கெனவே கேட்டிருக்கின்றார்கள், இது சம்பந்தமாக பிரச்சினை வருகின்ற நேரத்திலே தனியார்கள் நிலங்களிலே இருக்கின்ற கிணறுகள் மூலம் அந்தத் தண்ணீரை சில இடங்களில் லாரிகளில் எடுத்துச்செல்வதாக எங்களுக்கு தகவல் தரப்பட்டுள்ளது, அதற்குப் பின்னாலே நம்முடைய அதிகாரிகள் வந்து பார்க்கின்ற நேரத்திலே அவர்கள் சொந்த நிலங்களிலே இருக்கின்ற கிணறுகளில் இருந்து எடுக்கின்றதை அரசால் தடுக்க இயலாது, ஆனால் நம்முடைய பாசன வாய்க்காலிலேயிருந்து தண்ணீர் எடுப்பார்களேயானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது, ஆகவே முறைகேடாக யார் பயன்படுத்தினாலும் அரசு நடவடிக்கை எடுக்கும், திருப்பூர் நகரத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய அந்நிய செலாவணி ஈட்டுகின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த நகருக்கும் நம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 309, திரு. கா, சின்னசாமி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

309—

கொல்லிமலையிலுள்ள கிராமங்களுக்கு மின்வசதி,

*4181 திரு, கா, சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், கொல்லிமலையில் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி செய்யப் படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?





மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); சேலம் மாவட்டம் கொல்லிமலையில் இராசிபுரம் வட்டப்பகுதியில் மொத்தம் உள்ள எட்டு (8) பெரிய கிராமங்களில். ஏழு (7) பெரிய கிராமங்களுக்கு ஏற்கனவே மின்சார வசதி செய்யப்பட்டுவிட்டது, மீதமுள்ள ஒரு (1) பெரிய கிராமமாகிய அடக்கம்புத்தூர் கொம்பை கிராமத்திற்கு சூரிய ஒளிமூலம் இவ்வாண்டு (1991—92)க்குள் மின்வசதி செய்யப்படவுள்ளது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, கா, சின்னசாமி, இருக்கையில் இல்லை, திரு, எஸ். அன்பழகன்,

முற்பகல் 10—05

திரு, எஸ், அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையின் ஒரு பகுதி ராசிபுரம் வட்டத்திலும் இன்னொரு பகுதி நாமக்கல் வட்டத்திலும் வருகின்றன. நாமக்கல் வட்டத்தில் வருகிற கொல்லிமலைப் பகுதிக்கு மின்சாரம் முழுமையாகக் கொடுப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்போது சேலம் மாவட்டம், கொல்லிமலையில், நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த மின் வசதி இல்லாத 19 கிராமங்களுக்கு இவ்வாண்டு 31—3—1992-க்குள் மின்வசதி அளிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டு, மின் இலாகா இன்றைக்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறது, அங்கே வனப் பகுதியிலே சாலைகள் சரியில்லாத காரணத்தினாலே சரியான முறையிலே உடனடியாக மின் இணைப்பு கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, நாமக்கல் பகுதியிலுள்ள கிராமங்களுக்கும் மின் வசதி அளிப்பதற்கான உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி க, பழனியம்மாள்.

திருமதி க, பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் மலைப்பகுதி சரியாக இல்லாத காரணத்தினால் மின் வசதி செய்து கொடுக்க முடியவில்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், பாதை

வசதி இருக்கின்ற சில கிராமங்களில்கூட இன்னும் மின்வசதி செய்து தரப்படாத நிலைமை இருக்கிறது, அங்கு மலைவாழ் மக்கள் மின்சாரம் இல்லாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள், அதற்கான விரிவான நடவடிக்கை எடுத்து, வருகின்ற ஓராண்டுக் காலத்திற்குள்ளாவது அங்குள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார வசதி கிடைக்குமாறு ஏற்பாடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கருத்தான ராசிபுரம் பகுதியிலே ஏறத்தாழ 61 கிராமங்களுக்கு அந்த கொல்லிமலைப் பகுதியிலே மின் இணைப்பு வழங்க வேண்டுமென்ற ஒரு இலக்கை நாங்கள் நிர்ணயித்திருக்கிறோம், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, சாலை பகுதி மட்டு மல்லாமல். வன இலாகாவினுடைய அனுமதியையும் நாங்கள் பெறவேண்டியிருக்கிறது, அதாவது மின் பாதையை அமைப் பதற்கு வன இலாகாவினுடைய அனுமதி வேண்டியிருக்கிறது, அதற்கான அனுமதியை கோரியிருக்கிறோம், வன இலாகா வினுடைய அனுமதி கிடைத்த உடனேயே ராசிபுரம் பகுதியி லுள்ள 61 கிராமங்களுக்கும் மின் இணைப்பு வசதி செய்து தரப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 310. திரு, வெ. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

310—

திருப்பூர் இரயில்வே மேம்பாலம்,

*9320 திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் இரயில்வே மேம்பாலம் (குன்றத்தூர்-திருப் பூர் பாலம்) கட்டும் பணிகள் எந்த நிலையில் உள்ளன?

(ஆ) பணிகள் எப்போது துவங்க உள்ளன?

(இ) பாலத்திற்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு?

(ஈ) இரயில்வே பகுதியில் பணிகள் துவங்க அரசால் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?





மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) முதல் (ஈ): உலக வங்கித் திட்டத்தின் கீழ் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்த மேம்பாலம் மற்றும் இணைப்புச் சாலைக்காக ஏறத்தாழ 5 கோடியே 61 லட்சம் ரூபாய்க்கு இன்றைக்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தகுந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 'Pre—Qualification Tenders' என்று சொல்லப் படுகின்ற தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து போடப் படுகின்ற டெண்டர் 27–3–1992 என்று நிர்ணயிக்கப்பட்டு அந்த டெண்டர் கோரப்பட்டிருக்கிறது, பாலத்திற்கான மொத்த மதிப்பீடு தொகை 124 லட்சம் ரூபாய், மொத்த மதிப்பீட்டில் ரெயில்வே இலாகாவுக்காக 50 சதவிகிதம் வேறு கட்டியிருக்கிறோம். ஆகவே. 1992–93 ஆம் ஆண்டில் இந்தப் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு, வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த 15 ஆண்டுக் காலமாக திருப்பூர் நகரத்திலே இருந்து வந்த கோரிக்கையான திருப்பூர்-குன்றத்தூர் என்று சொல்லப்படுகின்ற மேம்பாலத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே கட்டுகிற வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, ரெயில்வே் பகுதியில் கட்டுகிற பணிக்கு டெண்டர் போடப்பட்டு. ரெயில்வே பகுதியினுடைய பணிகள் எப்போது துவங்கப்பட உள்ளது என்பதையும் அதைப்போல நமது பகுதியில் உள்ள பணிகள் எப்போது துவங்கும் என்பதை யும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே நான் தெரிவித் திருக்கிறேன், 'P:—qualification Tender' என்று சொல்லப்படுகிற அந்த நிலை 27 ஆம் தேதியன்று நாங்கள் ஒப்பந்தப்புள்ளி கோர இருக்கிறோம், அதிலே தகுதிபடைத்த ஒப்பந்தக்காரர்கள் கிடைத்த உடனேயே அந்த டெண்டர் விடப்பட்டு இந்த ஆண்டே அந்தப் பணிகள் உடனடியாக தொடங்கப்பட இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது, அதைப்போல ரெயில்வே துறைக்கு வேண்டிய பணத்தையும் நாங்கள் கட்டியிருக்கிறோம், அவர்களிடத்திலேயும் உடனடி யாக பணியைத் தொடங்க வேண்டுமென்று நாங்கள் கேட்

டிருக்கிறோம், ஆகவே. இந்த ஆண்டு, வெகு விரைவிலே திட்டத்திற்கான பணம் வந்துவிட்ட காரணத்தினாலே நடவடிக்கை எடுத்து, எந்த செயலையுமே முனைப்பாக செயல்படுத்துகின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதையும் உடனடியாக செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

முற்பகல் 10-10

திரு, வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ரெயில்வே பகுதியில் பணிகளை ரெயில்வே இலாக்காதான் செய்ய வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தோடு, நாம் கொடுக்கும் நிதியைக் கொண்டு ரெயில்வே இலாக்கா பணிகளைச் செய்ய வேண்டும். ஆனால் ரெயில்வே இலாக்காவினால் பணிகள் தாமதப்படுத்தப்பட்டு வருகின்ற காரணத்தால். நம்முடைய பணிகளும் தாமதப்படுத்தப்பட்டு. எஸ்டிமேட் தொகை அதிகமாகும் வாய்ப்பு பல நேரங்களில் உருவாகியிருக்கிறது, ஆகவே ரெயில்வே இலாக்கா செய்யும் பணிகளை மிக வேகமாகச் செய்வதற்கு உண்டான முறையில் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெரிய வேலைகளுக்கு ஒப்பந்தம் விடுகின்ற நேரத்திலே. நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்னாலே காலக்கெடுவை நாம் நிர்ணயித்திருக்கிறோம், எந்த வேலை எடுத்தாலும் உடனடியாக காலக் கெடு நிர்ணயித்து, அந்த வேலைகளை உடனடியாக முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது, இந்த வேலையைப் பொறுத்தமட்டிலே 24 மாதங்கள். அதாவது 2 ஆண்டுகளுக்குள் திருப்பூர் மேம்பாலத்தைக் கட்ட வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்து இருக்கிறோம். 24 மாதத்திற்குள் நம்முடைய அரசு அந்த வேலையை முடிக்கும் நேரத்தில். ரெயில்வே துறையும் பால வேலைகளை முடித்தாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம், ஆகவே ரெயில்வே துறை பணிகளும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய பணிகளும் ஒரே நேரத்தில் சீராக எடுக்கப்பட்டு, 24 மாத காலத்திற்குள் முடிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 311 திரு, சி, ஞானசேகரன். மாண்புமிகு உணவு மற்றுப் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





311—

விவசாயிகள் கடன் தள்ளுபடி

*426 திரு, சி, ஞானசேகரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகள் கடன் முழுமையும் அரசு தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி, விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

விவசாயிகள் கடன் முழுவதையும் அரசு தள்ளுபடி செய்ய நடவடிக்கைகள் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலே கடந்த 15 ஆண்டு காலமாக இயங்கி வந்த மண் வகையீடு அலுவலகத்தை மூடுவதைத் தவிர்த்து தொடர்ந்து இயங்குவதற்கு உத்தரவு பிறப்பித்த.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் வினாக்கள்—விடைகள் நேரத்தில் இருக்கிறோம். விவசாயிகள் கடன் தள்ளுபடி பற்றிய வினா. அந்த வினாவிலே கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய இயலாதென்ற பதிலை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். உழுபவனுக்கு உழவுக்கோல்கூட மிஞ்சுவது கிடையாது என்பது பழமொழியாக இருக்கிற இந்தக் காலகட்டத்தில் கடனிலே பிறந்து, கடனிலே. வாழ்ந்து, கடனிலே இறந்துகொண்டிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு நல்லது செய்கிற வகையில் வட்டியையாவது அரசு தள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை, 90ஆம் ஆண்டு கடன் நிவாரணத்தை நாம் செய்தோம், அப்போது 10 லட்சத்து 89 ஆயிரம் பேர்கள், கடன் பெற்ற விவசாயிகள், பயனடைந்தார்கள். அப்படி வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 289 கோடியே 43 இலட்சமாகும். அதிலே நமக்கு மத்திய அரசு இன்னும் கொடுக்க வேண்டிய தொகையே 71 கோடி ரூபாய் இருக்கிறது. இப்போது அதைக் கொடுக்கின்ற சூழ்

நிலையில் மத்திய அரசு இல்லை என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் போன முறை நிவாரணத் திட்டத்தை அறிவிக்கும்போது, மத்திய அரசு தெளிவாக, இது ஒரு கட்ட நடவடிக்கைதான், இனிமேல் கடன் ரத்து கிடையாது என்று சொல்லிவிட்டது. ஆகவே இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் நமக்கும் கடனைத் தள்ளிவிட வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. புரட்சித் தலைவிக்கும் நல்ல பெயர் கிடைக்கும் என்பது தெரியும். ஆனால் இருக்கின்ற நிதி நிலையை வைத்துக் கொண்டு, இப்படிப்பட்ட நிலைமைகளை இப்போது செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உழவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்கின்ற வகையில் 10,000 ரூபாய் வரையில் இருக்கும் கடனை எல்லாம் தள்ளுபடி செய்ததாக அறிவித்த போது விவசாயிகளுடைய அடிவெட்டு கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்ட அந்தக் கடனை தள்ளுபடி செய்யவில்லை, இன்னும் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தடை செய்ய அரசு முன்வருமா? அந்தச் சலுகையை விவசாயிகளுக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்பட்ட கடன் பற்றிய தகவல்கள் இல்லை. அப்படி ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்ட கடன்கள் மறுபடியும் வசூல் செய்யப்படுகிறது என்று புகார்கள் இருக்குமானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம்,

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசுக்கு நிதி பற்றாக்குறை இருந்த போதிலும், தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி நமது இதய தெய்வம் ஜப்தி நடவடிக்கை வேண்டாமென்று அறிவித்திருந்தபோதும், சமீபகாலத்தில் என்னுடைய தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் அவர்களுடைய வீட்டை ஜப்தி செய்வதற்காக அதிகாரிகள் சென்று உள்ளார்கள். அதன்பேரில் அந்த செயலாளர் ஒரு வாரம் பொறுத்திருந்து இந்த ஜப்தி நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கோரியுள்ளார்கள். எங்களுடைய பயிர் சாகுபடி இன்னும் ஒரு மாதத்தில் ஆகி வருவாய் வந்துவிடும், எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜப்தி நடவடிக்கையை நிறுத்தி இந்த தானியங்கள் வருவதற்கு இன்னும் சிறிது காலமே இருப்பதால், கடன்



தவணை செலுத்த ஒரு மாதம் அவகாசம் கொடுத்து. அதன் பிறகு இப்படி வசூல் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தது நில வரி பற்றியது மட்டும் தான். அது கடனைப் பற்றியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு முறை முதல்முறையாக பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு குறுகிய காலக் கடனை, அதாவது மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம் என்று அதை மத்திய காலக் கடனாக மாற்றியிருக்கிறோம். இரண்டாவது முறையிலும் பாதிக்கப்பட்டால் அந்தக் கடனையே மத்தியக் காலக் கடன் என்று மாற்றியமைத்து 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம் என்று கொடுத்திருக்கிறோம். அப்படி விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு வங்கிகளின் மூலமாக நாம் உதவிகள் செய்துகொண்டிருக்கிறோம். இங்கே குறிப்பிட்ட யார் யார் நிலத்தை அடகு வைத்து, விற்று இருக்கிறார்கள், அதாவது நம்மிடத்தில் கடன் வாங்கி டிராக்டர் போன்றவைகளை வாங்கி, வெளியில் விற்றுவிட்டவர்கள், மற்றும் ரூ. 10,000–க்கு மேல் வைத்துக் கொண்டு வசதியாக இருந்து பணத்தைத் திருப்பிக் கொடுக்காதவர்கள், இவர்கள் மீதுதான் இப்போது வசூல். செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மற்ற விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர், கருணைக்கடல், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசிலிருந்து ஏதாவது கடன் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்று ஏராளமான விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு, புரட்சித் தலைவரின் காலத்தில் பின்பற்றிய நடைமுறைப்படியாவது எல்லா விவசாயிகளுக்கும் வட்டியைத் தள்ளுபடி செய்து, அசலுக்கு தவணை கொடுத்து வசூலிக்கிற வாய்ப்பையாவது ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கிற நிலையில் மாவட்ட கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நிலவள வங்கிகள், இவைகளுக்கு மட்டு

சுமார் 1,200 கோடி ரூபாய் கடன் பாக்கியிருக்கிறது. இன்றைக்கு பல இலட்சக்கணக்கான விவசாயிகள் கடன் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏற்கெனவே வாங்கியவர்கள் கடனை திருப்பிச் செலுத்தினால்தான் புதிதாகக் கடன் கொடுக்க முடியும். ஆகவே இப்போது கேட்கிற விவசாயிகளுக்கு கொடுப்பதற்காகவாவது புதிய பயிர்க் கடன் கொடுப்பதற்காவது ஏற்கெனவே வாங்கிய விவசாயிகள் கொஞ்சம் வசதியாக இருப்பவர்கள் இப்போது அறுவடை வந்து கொண்டிருக்கும் போதாவது கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அசல் இல்லையென்று சொன்னாலும் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதுவரையில் அதுபற்றி அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. ஆர். சிங்காரம்.

<u>திரு. ஆர். சிங்காரம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு மிகப் பெரிய நிதி நெருக்கடி இருக்கிறது என்பதை நான் பொறுப்போடு உணருகிறேன். ஆனால் அதே நேரத்தில் விவசாயிகள் கடன் பிரச்சினை என்பதில், இப்போதுள்ள பிரச்சினையை நான் சொல்லவில்லை. கடந்த காலத்தில் கடுமையான வறட்சியாலும், வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருந்தபோது, அதை 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்று 'கன்வெர்ஷன்' செய்யப்பட்டது. அந்தத் தொகை அசல் 5,000 ரூபாய் என்று சொன்னால், வட்டி ரூ. 8,000, ரூ. 9,000 என்று வந்திருக்கிறது. ஆகவே மிகப் பெரிய நெருக்கடிக்குள்ளான சாதாரண விவசாயிகள் கடன் கட்ட முடியாத தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வின் தேர்தல் அறிக்கையில், கடன் தள்ளுபடி செய்வதாக நம்முடைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த வகையில் ஏதாவது ஒரு முடிவைச் செய்ய வேண்டுமென்று விவசாயிகள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு நல்ல முடிவு வரும் என்று காத்திருக்கிறார்கள். வட்டி, அபராத வட்டி ஆகிய இந்த இரண்டையாவது தள்ளுபடி செய்துவிட்டு, மீதத் தொகையை 5 ஆண்டுகளுக்கு 'கன்வெர்ஷன்' கொடுத்தாலும் இந்தப் பிரச்சினைக்கு முடிவேற்படும். நாங்களும் அந்தத் தொகையைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வோம். அதை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும் பரிசீலிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு நாம் தள்ளுபடி செய்த அந்தத் தொகையில் பாதியை மத்திய





அரசு கொடுக்கிறது. மீதியை நாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாம் அதை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதுவும் மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதைக் கடனாக வைத்துக் கொண்டு ஆண்டுதோறும் கடனைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நல்ல கோரிக்கைதான் என்றாலும், இப்போது அது அரசின் பரிசீலனையில் இல்லாமல் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. கே. பி. ராஜு.

<u>திரு. கே. பி. ராஜு:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய கடன்களை மத்திய சர்க்கார் தள்ளுபடி செய்யச் சொல்லுகிறதா அல்லது வசூலிக்கச் சொல்லுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான பதிலைத்தான் இப்போது சொல்லி முடித்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கடனைப் பொறுத்த வரையில் முன்னால் பத்தாயிரம் ரூபாய் வரை தள்ளுபடி அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்டக் காலத்தில் தள்ளுபடி செய்யப்பட்டக் கடனுக்குப் பதிலாக அரசு அந்தக் கடனை ஈடு செய்யாத காரணத்தால் தள்ளுபடி செய்த அந்தக் கடனையும் சேர்த்து ஜப்தி நடவடிக்கை செய்வதற்காக இப்போது எல்லா கூட்டுறவு வங்கிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை அரசு அறியுமா? அப்படியென்றால் பத்தாயிரம் ரூபாய் வரை தள்ளுபடி செய்வதற்கு மத்திய அரசைக் கோருகிற வகையில் தமிழக அரசு முயற்சி எடுத்து அந்தக் கடனை தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்.:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன்கள் நிவாரணம் செய்தபோது கடன் பெற்றவர்கள் இதனாலே பயனடைந்து விட்டார்கள். வங்கிகள் பாதிக்கப்பட்டுவிட்டன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களை மீண்டும் எங்கேயாவது வசூல் செய்கிறார்கள் என்ற புகார் இருந்தால் உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகளைக் காப்பாற்றுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு மத்தியில் வி.பி. சிங் அவர்கள் தலைமையில் மத்திய ஆட்சி இருந்தபோது பத்தாயிரம் ரூபாய் வரையில் விவசாயிகள் கடன் தள்ளுபடி என்று அறிவித்ததே ஒரு கண் துடைப்பு நாடகம் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). காரணம் அப்போது அவர்கள் ஏதோ ஏழை விவசாயிகளுக்காக ஆபத்பாந்தவன் போல வேடத்தைப் போட்டுக் கொண்டு பத்தாயிரம் ரூபாய் வரை கடன் தள்ளுபடி என்று அறிவித்தார்களே தவிர உண்மையில் அதிலே பாதி தொகையை மாநில அரசு ஏற்றுக் கொண்டு விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்ய வேண்டும். மீதித் தொகையை மத்திய அரசு மானியமாக இல்லாமல் கடனாகத்தான் மாநில அரசுக்குக் கொடுத்திருக்கிறது. எனவே அந்த நேரத்தில் அந்த பாதி தொகையை அவர்கள் கடன் என்று சொல்லி, இன்று வரை மத்திய அரசாங்கம் நம்மிடமிருந்து அந்தத் தொகையைப் தவணை முறையில் வசூலித்துக் கொண்டிருக்கிறது. எனவே அந்த நேரத்தில் மத்திய அரசாங்கம் பத்தாயிரம் ரூபாய் வரை கடன் தள்ளுபடி என்று அறிவித்ததே உண்மையல்ல என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனவே விவசாயிகள் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இங்கே கோரிக்கையை எழுப்புகின்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அனைவரும் அவர்கள் எந்தெந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பாராளுமன்றத்தில் இதைப் பற்றி பேசச் சொல்லி ஏற்கெனவே இந்த மாதிரி அறிவித்ததை மானியமாக மாநிலங்களுக்கு வழங்க வேண்டும்; அதைக் கடனாக 'ட்ரீட்' செய்யக்கூடாது: மாநில அரசுகளிடமிருந்து திரும்ப அதை வசூல் செய்யக்கூடாது என்று அங்கே வலியுறுத்திப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் அதே நேரத்தில் இப்போதுள்ள பிரச்சினைக்கு வருகிறேன். இப்போது பெரும்பாலான உறுப்பினர்கள் இங்கே எழுப்பியிருக்கின்ற கோரிக்கை, வட்டியைத் தள்ளுபடி செய்து அசலையாவது தவணை முறையில் மீண்டும் வசூல் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். வட்டியைத் தள்ளுபடி செய்வது குறித்து இந்த அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 312. திரு. எஸ். சண்முகநாதன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1992 மார்ச் 23]

312—

## விவசாயிகளுக்கு கூட்டுறவு முறையில் தொழில் தொடங்க உதவி.

*4334 திரு. எஸ். சண்முகநாதன்:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஆலங்குடி தொகுதி வறட்சிப் பகுதியாக இருப்பதால் விவசாயிகளுக்கு வேலை கொடுக்கும் வகையில் கடன் வழங்கி கூட்டுறவு முறையில் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 313. திரு. மெ. ஆண்டி அம்பலம். இருக்கையில் இல்லை. (திரு. சி.ஞானசேகரன் கேட்கிறீர்களா திரு. சி. ஞானசேகரன் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

313—

## தொழிலாளர் நீதிமன்றம்

*7720 திரு. மெ. ஆண்டி அம்பலம்:
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையைத் தவிர எங்கெங்கு தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன?

(ஆ) மாவட்டந்தோறும் இத்தகு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னையைத் தவிர மதுரையில் இரண்டு தொழிலாளர் நீதிமன்றங்களும், கோயம்புத்தூரில் ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்படுகின்றன.

(ஆ) மாவட்டம் தோறும் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசிடம் உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலே இரண்டாண்டுகளுக்கு முன்னாலேயே அந்த லேபர் டிரிபியூனல் கோர்ட்டைக் கொண்டுவர அரசு ஆணை பிறப்பித்திருந்தும், சென்ற ஆண்டு இதே மாமன்றத்தில் உடனடியாக இந்தத் தொழிலாளர் நல நீதிமன்றம் துவங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தும், இன்னும் வேலூரில் துவங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிற ஜூன் மாதத்தில் தொழிலாளர் நல கோர்ட்டை வேலூரில் துவங்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் புதிய தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அரசு ஆணை இடப்பட்டு இருந்த போதிலும், தலைமை உயர்நீதி மன்றத்திலிருந்து நீதிபதிகள் நியமிக்கப்படாத காரணத்தினாலேதான் இன்னும் அங்கே தொழிலாளர் நீதிமன்றங்கள் துவக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அந்த உறுப்பினருக்குத்தான் உண்டு. திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்கள், ஆர்கனைஸ்டு லேபருக்காக அமைக்கப்பட்டதா அல்லது அன்-ஆர்கனைஸ்டு லேபர்களுக்காக அமைக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்கள், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பணியாற்றுகிற அனைத்து தொழிலாளர்களுக்கும் அமைக்கப்பட்டு இருக்கிறது. அன்-ஆர்கனைஸ்டு தொழிலாளர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்பட்டு இருந்தால் அவர்கள் அங்கே வழக்குத் தொடரலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டமாகிய காமராசர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் சாத்தூர் போன்ற இடங்களில் தொழிலாளர்கள் ஏராளமாக உள்ளனர். அங்கே அடிக்கடி தொழிலாளர் பிரச்சினை எழுந்து வருகிறது. அங்கே தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் மதுரையிலே இருக்கும் லேபர் கோர்ட்டுக்கு தான் வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், அதிகமான வழக்குகள் மதுரை லேபர் கோர்ட்டில் தேங்கி உள்ளதால், ஒரு பிரச்சினை முடிய வேண்டுமென்றால் 3 ஆண்டுக் காலம், 4 ஆண்டுக் காலம் நீடித்து வருகிறது. அதனால், எங்கள் காமராசர் மாவட்டத்திலே தொழிலாளர் நீதிமன்றம் சிவகாசியில் அமைய அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டம் சிவகாசியிலோ அல்லது வேறு எந்தப் பகுதியிலோ புதிதாக தொழிலாளர் நீதிமன்றம் எதுவும் அமைக்கிற உத்தேசம் தற்பொழுது அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இராணிப்பேட்டையிலே நீதிமன்றம் துவக்கும் போது நீதிபதி மாண்புமிகு திரு. ஏ. எஸ். ஆனந்தன் அவர்கள் அங்கே வந்து, தொழிலாளர் நீதிமன்றம் உடனடியாகத் துவக்கப்படும் என்ற உறுதிமொழியினை அளித்து இருந்தார்கள். அப்படி இருந்தும், தொழிலாளர் நீதிமன்றம் அமைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதனால், தொழிலாளர்களுடைய எண்ணற்ற வழக்குகள் தேக்கம் அடைந்து இருக்கின்றன. இது குறித்து உடனடியாக நமது அரசு மீண்டும் வற்புறுத்தி தொழிலாளர் நீதிமன்றத்தை அங்கே அமைக்க முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைப்பதற்காக நீதிபதிகளை உயர்நீதிமன்றத்திலே இருந்து நியமித்த

[1992 மார்ச் 23

வுடன், புதிதாக அறிவிக்கப்பட்டு இருக்கிற இடங்களுக்கும் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 314. டாக்டர் ஜி. ஆர். மாலா. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

314—

வாய்க்கால்களின் கரைகளைச்சீர்படுத்த விவசாயிகளுக்கு மானியம்.

* 2464 டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேளாண்மைப் பொறியியல் துறையின் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வாய்க்கால்களில் சுலபமாக தண்ணீர் செல்வதற்கு கரைகள் கட்ட விவசாயிகளுக்கு நூறு சதவிகித மானியம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் உள்ள விதிமுறைகளின்படி 100 சதவீதம் மானியம் வழங்க இயலாது.

டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்ற கூற்றுக்கு இணங்க, வருங்காலத்தில் உலகப் பொருளாதார அரங்கில் உணவு உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளை வல்லரசு நாடுகளே தங்கள் உணவுத் தேவைக்காகச் சார்ந்து இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகும் நிலையில், நில வளம் உள்ள நம் தமிழ்த் திருநாட்டின் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க நீர்வளத்தைப் பெருக்கும் இப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வாய்க்கால்கள், கரைகள் கட்ட விவசாயிகளுக்கு 100 சதவீதம் அளிக்க வேண்டு மென்ற என் கோரிக்கையை நமது அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள விதிமுறைகளின்படியும், அரசிடம் உள்ள நிதியைப் பொருத்தும் 50 சதவீத மானியம் தான் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிதி நிலைமை சீரான வுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நல்லதொரு முடிவு எடுப்பார்கள்.



1992 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315. திரு. வே. பெரியசாமி. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

315—

குழந்தைகள் நல மையம் அமைத்தல்.

*6396 திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியார் மாவட்டம், பெஜரிபாளையம், ஊசி மலை, தட்டக்கரை, சோழகணை, பெஜலட்டி, தேவர்மலை, ஒந்தனை, கோயில்நத்தம், பள்ளபாளையம், நஞ்சுண்டாபுரம், இந்திராநகர் (கீழ்பவானி) போன்ற இடங்களில் குழந்தைகள் நல மையங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மையம் தொடங்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அவசியம் இல்லை.

(ஆ) ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 316. திரு. ச. காந்திராஜன். இருக்கையில் இல்லை. திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

316—

பன்றி வளர்ப்புக்கு மானியத்துடன் கூடிய கடன்.

*2382 திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பன்றி வளர்ப்புக்காக அளிக்கப்படும் மானியத்துடன் கூடிய கடனை அதிக அளவில் ஆடு, மாடுகள் வாங்க வழிவகை செய்ய வேண்டு மென்று மதிப்பீட்டுக் குழு 1985-86-ல் பரிந்துரை செய்துள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

## அறிக்கை

**மதிப்பீட்டுக்** குழு (1985-86) (எட்டாவது பேரவை)-**யின்** இரண்டாவது அறிக்கையில் உள்ள பரிந்துரை எண், 32 கீழ் வருமாறு :—

''பன்றி வளர்ப்பதினால் சுகாதாரத்தில் ஏற்படுகின்ற சீர் கேட்டையும். மூளைக் காய்ச்சல் போன்ற வியாதிகள் அதிகமாகப் பரவுவதையும் தடுக்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு அதிக அளவில் ஆடு. மாடுகள் வாங்க வழிவகை செய்ய வேண்டு மென்று குழு பரிந்துரை செய்கிறது '',

2, மேற்கண்ட பரிந்துரைக்கு துறையில் எடுக்கப்பட்ட நட வடிக்கை குறித்து கீழ்க்கண்டவாறு சட்டப் பேரவைச் செயலகத் திற்குப் பதில் அனுப்பப்பட்டது,

'' பன்றி வளர்க்க நிதி உதவி வழங்கும் திட்டம் கால் நடை பராமரிப்பு துறையில் செயல்படுத்தப்படுகிறது, ஆத லால் ஆடு மற்றும் மாடு வாங்க அதிக அளவில் நிதி வழங்குமாறு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் அவர்களை ஆதி திரா விடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார், மேலும், ஆதிதிராவிடரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கறவை மாடு. வண்டி மாடு. உழவு மாடு வாங்கவும் ஆடுகள் வளர்க்கவும் கீழ்க்கண்ட அளவில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது :—

| விவரங்கள், | 1987-88 ஆம் ஆண்டு பயனாளிகள் எண்ணிக்கை, | வழங்கப்பட்ட மொத்தத் தொகை, (ரூபாய் இலட்சத்தில்.) | 1988-89 ஆம் ஆண்டு பயனாளிகள், | வழங்கப்பட்ட மொத்தத் தொகை, (ரூபாய் இலட்சத்தில்,) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1, பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கறவை மாடு வாங்க நிதி யுதவி, | 19.396 | 165,94 | 29.081 | 322,17 |
| 2, நியுமாட்டிக் டயர் வண்டி மற்றும் இரண்டு காளைகள் வாங்க நிதியுதவி, | 114 | 9,12 | 630 | 56,40 |
| 3, உழவு மாடுகள் வாங்க நிதியுதவி, | 193 | 4,83 | 1,440 | 36,00 |
| 4, மாட்டு வண்டி இரண்டு காளைகள் வாங்க நிதியுதவி, | 1,150 | 63,25 | 1,650 | 90,75 |
| 5, ஆடு வளர்க்க நிதி யுதவி, | 2,300 | 147,59 | 3,968 | 133,66 |



மேற்கண்ட திட்டங்கள் 1989-90 ஆம் ஆண்டிலும், 1990-91 மற்றும் 1991-92 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத் தப்பட்டுள்ளன,

3, 14—8—1991 அன்று நடைபெற்ற மதிப்பீட்டுக் குழு இப்பரிந்துரை குறித்து விவாதித்தது, இக்கூட்டத்தில், பன்றி வளர்ப்பதன் மூலம்தான் மூளைக் காய்ச்சல் பரவுகிறது என்பது ஒரு வரையறுக்கப்பட்ட உண்மையா என்றும் அறிவியல் பூர்வ மாக சரியா என்றும் இதுபற்றி மருத்துவ ரீதியாகப் பரிசீலனை செய்தீர்களா என்றும் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் வினவினார், அதற்கு அவ்வாறு பரிசீலனை செய்யவில்லை என்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் பதில் அளி தார். மூளைக்காய்ச்சல் பன்றிகளின் மூலம் தான் பரவுகிறதா என் பதை அறிவியல் பூர்வமாகப் பரிசீலனை செய்து தெரிவிக்குமாறு மருத்துவ துறையைக் கேட்குமாறு குழுத் தலைவர் கூறினார்கள், வெள்ளைப் பன்றி, கறுப்புப் பன்றி ஆகிய இரண்டு வகை பன்றி கள் மூலமாகவும் நோய் பரவக் கூடும் என்றும், மூளைக் காய்ச்சல் பற்றி மருத்துவத் துறையின் ஆராய்ச்சி என்ன சொல்கிறது என்று அறிக்கை பெற்றுக் குழுவிற்குப் பதில் தர வேண்டுமென்றும். பன்றிகள் மூலம் தான் பரவுகிறது என்று தெரிந்தால் பன்றி வளர்ப்பைத் தடை செய்து விடலாம் என்றும், பன்றிகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும் மலேரியா, பெரியம்மை போன்ற நோய்களை ஒழிப்பதற்கு எப்படி ஒரு திட்டப் உள்ளதோ, அதைப் போல மூளைக் காய்ச்சலை ஒழிப் பதற்கும் ஒரு திட்டம் கொண்டு வரலாம் என்றும் குழுத் தலைவர் ஆலோசனை கூறினார்கள்,

4, மதிப்பீட்டுக் குழுவின் மேற்கண்ட கருத்துக்களுக்கு இணங்க இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நல்வொழ்வுப் பணித்துறை, இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர்,

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது, இத்துறைகள் தெரிவித்துள்ள கருத்து கீழ்வருமாறு :—

இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை அவர்கள் தெரிவித்துள்ள கருத்து.

மூளைக் காய்ச்சல் (Japanese Encephalitis) பன்றிகள் மூலம் பரவுவதில்லை. ஆனால், மறைமுகமாக நோய்க் கிருமிகளைக் கொண்டு செல்லும் விலங்காகப் பன்றிகள் விளங்குகின்றன. இந்த நோய், பன்றிகளிடமிருந்து நேரடியாக மனிதனுக்குப் பரவுவதில்லை. ஆனால், குளிசின் ( Culicine ) கொசு கடிப்பதன் மூலம் மனிதனிடமிருந்து பன்றிகளுக்கும், பின்னர் பன்றிகளிடமிருந்து மனிதனுக்கும் தொற்றிக் கொள்கிறது. பன்றிகள் மூலம் மட்டுமல்லாது, வீடுகளில் வளர்க்கப்படும் விலங்குகள்' பறவைகள் ஆகியவற்றின் மூலமும் குறிப்பாக நாரை இனப் பறவைகள் மூலமும் நோய்க் கிருமிகள் பரவுகின்றன. பன்றிகளை முற்றிலுமாக அழிக்கத் தொடங்கினால், அவற்றின் மூலம் கிடைக்கும் அன்னியச்செலாவணியை இழப்பதோடு மட்டுமின்றி, பன்றிகளிடமிருந்து கிடைக்கும் விலங்குப் புரதத்தையும் இழக்க நேரிடும். கொசுக்கள் பெருகுவதை முற்றிலுமாக அழிப்பதே மூளைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழியாகும். தொற்றுநோய்க் கிருமிகள் உள்ள பன்றிகளை கண்டு அறிந்து அவற்றைஅழித்துவிடுவதும்மூளைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றொரு வழியாகும். தொற்று நோயுள்ளபன்றிகளைக் கண்டறிவதன் மூலம் மூளைக் காய்ச்சல் நோயை கட்டுப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தலாம். இதன் மூலம் அத்தகைய பன்றிகளைக் கண்டறிந்து அவற்றை அழிப்பதன் மூலம் மூளைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்த இயலும். இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, நோய்த்தடுப்பூசி மருந்து ஒன்றுள்ளது. இதன் மூலம் நோய் தாக்காதவாறு பன்றிகளைப் பாதுகாக்கலாம். எனவே, கொசுக்களை ஒழிப்பதற்கான திட்டத்தைச் செயற்படுத்துகையில், பன்றிகளை ஒழிக்க வேண்டியது அவசியமில்லை.

இயக்குநர், பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை அவர்கள் தெரிவித்துள்ள கருத்து.

சில வகை கொசுக்கள் கடிப்பதன் மூலம் மூளைக் காய்ச்சல் நோய் பன்றிகளிடமிருந்து மனிதனுக்குப் பரவுகிறது என்பது அறிவியல் பூர்வமாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நோய் பரவுவதற்கும் பன்றி வளர்ப்பதற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பன்றி வளர்ப்பதற்குப் பதிலாகக் கால்நடைகளை வளர்ப்பதன் மூலம், மூளைக் காய்ச்சல் நோயால் விளையும் ஆபத்துக்கள் குறைக்கப்படும். எனினும், இந்நோய் தாக்காமல் இருப்பதற்கு சமூகநிலையும் மக்களின் பொருளாதார நிலையையும், சத்துணவு முறையையும் கூட கருத்திற் கொள்ள வேண்டும். மூளைக் காய்ச்சல் நோய் பன்றிகளிடமிருந்து மனிதனுக்குப் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக, பின்வரும் கருத்துக்கள் குறித்து கால்நடை பராமரிப்பு இயக்குநரைக் கலந்தாலோசிக்கலாம் :—





(அ) மக்கள் குடியிருக்குமிடங்களிலிருந்து குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவில் கொசுக்கள் புகாத அறிவியல் முறைப்படி அமைந்த பன்றிப் பட்டிகள் கட்டுதல் ;

(ஆ) மூளைக் காய்ச்சல் நோய்க் கிருமிகளுக்கு எதிராகப் பன்றிகளுக்கு நோய்த் தடுப்பூசிபோடும் திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

கடந்த மூன்றாண்டுகளில் இம்மாநிலத்தில் மூளைக் காய்ச்சல் நோயால் தாக்கப்பட்டவர்கள் பற்றிய விவரங்களும் அதனால் ஏற்பட்ட இறப்புகள் பற்றிய விவரங்களும் பின்வருமாறு :—

| ஆண்டு. | நோயால் தாக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை. | இறந்தவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1988 .. .. | 247 | 122 |
| 1989 .. .. | 321 | 194 |
| 1990 .. .. | 243 | 170 |

<u>மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுப் பணித்துறை இயக்குநர் அவர்களின் கருத்து :</u>

பன்றி வளர்ப்பு சுகாதாரக் கேடு விளைவிப்பதாக இருப்பதாலும், மூளைக்காய்ச்சல் நோய்க்கிருமிகளைப் பரவச் செய்வதாலும் மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை செயற்படுத்தப்படலாம். பன்றிகள் மூளைக் காய்ச்சலை ஏற்படுத்தும் நோய்க் கிருமிகளை பரப்புகின்றன.

மூளைக் காய்ச்சல் நோய் தொடர்பானவற்றைப் பொதுச் சுகாதாரம் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கவனித்து வருவதால், பொதுச் சுகாதாரம்-நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரின் குறிப்புரைகளைப் பெறலாம்.

5. மேற்கண்ட கருத்துக்கள் மீது கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளர்ச்சித் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

[1992 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

முற்பகல் 10-30,

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குளிசின்'' என்ற கொசு மனிதர்களைக் கடித்து, பின் பன்றியைக் கடித்து அதன்பின் பன்றியிலிருந்து நேரடியாக மனிதர்களுக்கு மூளைக் காய்ச்சல் நோய் வருகிறது என்றும், அதை மருத்துவ ரீதியில் ஆய்வு செய்ததில் உண்மை என்றும் தெரிகிறது. ஆகவே, பன்றிகள் மூலம் மூளைக்காய்ச்சல் நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்காக பன்றிகளை ஒழிக்கலாம் என்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா பன்றி வளர்ப்புக்குரியது, நீங்கள் பன்றிகளை ஒழிக்கக்கூடிய திட்டத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள்,

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த விவரம் இருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவர அறிக்கையில் அந்த விவரம் இருக்கிறது என்பது வேறு, நீங்கள் அதை வற்புறுத்துகிறீர்கள், பன்றிகள் மூலம் மூளைக்காய்ச்சல் வருகிறது என்பது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய பதில், இந்த அமைச்சர் பன்றி வளர்ப்புக்குரிய பணிகளைக் குறித்து அறிக்கையில் சொல்லியிருக்கிறார், அதிலே உங்கள் துணைக் கேள்வி இருக்கட்டும், நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்,

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் இங்கே கொடுத்திருக்கிறார்கள், பன்றி வளர்ப்பதற்கு தற்போது கடன் வழங்கப்படுகிறதா. வழங்கப்படவில்லையா என்ற தகவல் கொடுக்கப்படவில்லை, ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தற்போது நீங்கள் பன்றிகள் வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கடன் வழங்குகிறீர்களா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு கால்நடை பராமரிப்பு பொறுத்த வரையில் ஏழையெளிய மக்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு ஆடு வளர்த்தல், கோழி



1992 மார்ச் 23]

வளர்த்தல், பன்றி வளர்த்தல் போன்ற அனைத்து கால்நடைத் துறை சம்பந்தப்பட்ட பணிகளுக்கும் கடன் வழங்கிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 317 — திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்,

317—

ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்ட பட்டா வழங்கல்,

*2792, திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம். பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்ட (32 பேருக்கு) நில ஆர்ஜிதம் செய்ததை துரிதப்படுத்தி பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது,

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வட்டி தள்ளுபடி செய்வது குறித்து பரிசீலிப்பதாகச் சொல்லியதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டுதல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் கரவொலி எழுப்பி நன்றியைத் தெரிவித்து இருக்கிறார்கள்,

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே. ஆகவேதான் எப்போதும் புரட்சித் தலைவி என்றால் புரட்சித்தலைவிதான், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகச் சொல்ல வந்தேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள், இந்த மழவேனிற்காடு கிராமத்தில் 32 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டுமென்று தனி நபருடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்து பணம் இன்னும் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று அறிகிறேன், அவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்பட

வில்லை, அப்படி பட்டா வழங்கினால்தான் தொகுப்பு வீடுகள் வழங்க முடியும், ஆகவே. 2, 3 ஆண்டுக் காலமாக இது நிலுவையில் இருக்கிறது, இதைத் துரிதப்படுத்த ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சாவூர் மாவட்டம். பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு கிராமத்துக்கு பட்டா வழங்குவது சம்பந்தப்பட்ட 4/1 செயற்குறிப்பை பட்டுக்கோட்டை தனி வட்டாட்சியர் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள், அதை அரசுக்கு அனுப்பி வைப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், வந்தவுடன் அதுபற்றி நடவடிக்கை துரிதப்படுத்தப்படும்,

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்று நிலத்தை ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்குவதில் 2. 3 ஆண்டுகள் காலதாமதம் ஆகிறது, இதற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அல்லது ஒரு குறிப்பிட்ட மாதங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு நிர்ணயம் செய்ய முன்வருமா ? அவர்களுக்கு உடனடியாக தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனைப்பட்டா வழங்கிய பிறகு தான் தொகுப்பு வீடுகள் கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும், மனைப் பட்டா சம்பந்தப்பட்ட கோப்புகள் துரிதப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, ஜி, பழனிசாமி, மழவேனிற்காடு கிராமத்தில் பட்டா வழங்குவது பற்றியது. அதற்கான துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்,

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆதிதிராவிடர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்டுவதற்கு இடம் கையகப்படுத்தும் போது கோர்ட்டுக்குப் போவதைக் குறித்து அரசு தடை விதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது சட்ட சம்பந்தமான விவகாரம், சட்டத் துறையின் மூலம் கலந்து ஆலோசித்து. நடவடிக்கை எடுக்கப்படும்-

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 318, திரு. ஆர், பி. பரமசிவம் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்,



318—

## குளுக்கோஸ் தொழிற்சாலை

*760 திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் பகுதியில் அதிகமாகப் பயிராகும் மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்தி குளுக்கோஸ் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

முற்பகல் 10,35

மாண்புமிகு திரு. எஸ், நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சின்னசேலம் பகுதியில். மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி, குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலை, நலிந்த ஆலையாக மாறுவது, சிக் யூனிட்டாக மாறுவது, பொதுவாக அந்த ஆலைக்குத் தேவையான ரா-மெட்டிரியல்ஸ், மூலப் பொருட்கள், கிடைப்பது சிரமமாக இருப்பதும், அவைகள் கிடைக்கும் இடம் ஆலைக்கு வெகு தூரத்தில் இருந்து வருவதும்தான் காரணங்களாக இருக்கின்றன. ஆனால் என்னுடைய சின்னசேலம் பகுதியில், விவசாய மக்கள் மிகப் பெரிய பயிராகவும், பிரதானப் பயிராகவும் தயாரிக்கும் மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி, குழந்தைகள், நோயாளிகள், வயோதிகர்கள். விளையாட்டு வீரர்கள் ஆகியோர்களுக்கு வெகு விரைவில் சத்தும், சக்தியும் தரும் இந்த குளுக்கோஸ் தொழிற்சாலையை ஏற்படுத்தினால், விவசாயிகளுக்கு மிகப் பெரிய விலை பொருளான மரவள்ளிக்கிழங்கிற்கு. தனியார் கிடுக்குப் பிடியிலிருந்து தப்பித்து, நல்ல விலை கிடைக்கும் என்பதால், இதை அரசு பரிசீலனை செய்து, அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மர வள்ளிக்கிழங்கிலிருந்து நிர்மம் போதுமான அளவிற்கு தயாரிப்பதற்கு உரிமங்கள் தமிழ்நாட்டிலே ஏற்கனவே, வழங்கப்பட்டுவிட்டன. மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து பெரிய அளவில் குளுக்கோஸ் மாவு மற்றுப் திரவ குளுக்கோஸ் தயாரிக்கப்படுவதற்கு அவை பயன்படுத்

வதால். மரவள்ளிக்கிழங்கு மாவு குளுக்கோஸ் தயாரிப்பதற்கு மட்டும் என உபரியாகக் கிடைப்பதில்லை, எனவே, மாவுப் பொருட்கள் ஜவுளித் தொழிலில் அதிக அளவில் பயன்படுத்தப் படுகிறது, எனவே, தற்போதைக்கு தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஸ்டார்ச் (மாவு) சாகோ (ஜவ்வரிசி) போன்ற பொருட்களுக்கு சரியான விலையை நிர்ணயிப்பது யார், அதேசமயத்தில். இந்த உற்பத்தி அதிகமாகும் நேரத்தில், அதன் விலையைக் குறைத்து விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரிடம் விலை நிர்ணயம் எல்லாம் வராது, தனிக் கேள்வி போடவும், வினா எண் 300, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கு இணங்க திரும்ப எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

300—

## பூந்தமல்லியை புதிய வட்டமாக்குதல்

*5193—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், ஸ்ரீபெருத்புதூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பூந்தமல்லியைம் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்கப் படுமா?

(ஆ). ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தச் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது, ஆய்வு முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்





திரு. டி. சுதர்சனம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வட்டம் 13 குறு வட்டங்களையும், அரக்கோணத்திலிருந்து சென்னையை ஒட்டியும் மிகப் பெரிய வட்டமாக உள்ள 8 லட்சம் மக்களைக் கொண்டிருக்கிற அந்த வட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் பிரிப்பதற்கு ஆலோசனையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக, இந்த நிதி ஆண்டிலேயே இந்த வட்டத்தைப் பிரிப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெரிய வட்டம் என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது, ஆகையினாலேதான், ஆய்வுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவிலே முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்,

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்,

1—

வினா எண் 615—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரியக்கத்திக்கோட்டை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

திட்டம் ஏதும் இல்லை, பெரியக்கத்திக்கோட்டை கிராமம், ஊமத்தாகாடு ஊராட்சி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இக் கிராமத்தின் தற்போதைய மக்கட்தொகை 500 ஆகும். தற்போதைய மறுஆய்வின்படி இக் கிராமம் பகுதியாக செயலாக்கப்பட்ட கிராமம் ஆகும். எதிர்வரும் நிதியாண்டில் கொரட்டூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து தரப்படும்.

[1992 மார்ச் 23]

2—

வினா எண் 648—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துரை ஊராட்சியில், மேல்நிலைத்தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

திட்டம் ஏதும் இல்லை. திருப்பந்துரை கிராமம், திருப்பந்துரை ஊராட்சி, திருவிடைமருதூர் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இக்கிராமத்தின் மக்கட்தொகை 750 ஆகும், தற்போதைய மறுஆய்வின்படி. பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட கிராமம். எட்டு குறைந்த அளவு ஆழமுள்ள கையிறைப்பான்கள் உள்ளன, இது போதுமானதாக இல்லை, எதிர்வரும் நிதியாண்டில் இத்திட்டம் பற்றி கருத்தில் கொள்ளப்படும்,

3—

வினா எண் 687—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு ஊராட்சி, வேலாகுடிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை, சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு ஊராட்சி, வேலாக்குடி குடியிருப்பு சுமார் 800 மக்கட்தொகை கொண்டதாகும். மறுஆய்வின்படி இக் குடியிருப்பு, பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட குடியிருப்பாகும். இரண்டாம்புளிக்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் 4 பொதுக் குழாய்கள் மேடைமூலம் குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது, இது போதுமானதாக இல்லை. எனவே, வரும் நிதியாண்டுகளில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர திட்டம் மேற்கொள்ளப்படும்.



1992 மார்ச் 23]

4—

வினா எண் 692—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கில் ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை, திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஊராட்சி, காயாவூர் குடியிருப்புக்கு (எம்.என்.பி.) குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் ஒரு மின்விசைப் பம்பு திட்டம் அமைக்கப் பட்டுள்ளது, காயாவூர் மேற்கு இதன் ஒரு பகுதியாகும். மறுஆய்வின்படி இது ஒரு தனி குடியிருப்பாகக் கருதப்படவில்லை. இப்பகுதிக்கு காயாவூர் குடிநீர்த் திட்டத்தின் மூலம் இரண்டு பொதுக்குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன,

5—

வினா எண் 701—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை கரூர் ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக்காட்டிற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. நடுவிக்காடு கிராமம்—புதுக்கோட்டை கரூர் ஊராட்சி பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்ததாகும், இங்கு 1,000 மக்கள்தொகை உள்ளது, இந்த குடியிருப்புக்கு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் இரண்டு ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பாக உள்ளது, இது போதுமானதாக இல்லை, வரும் நிதியாண்டுகளில் இத்திட்டம் பற்றி கருத்தில் கொள்ளப்படும்,

6—

வினா எண் 722—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி, நாணத்திடல் ஆதிதிராவிடர் தெருவிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. நாணத்திடல் குடியிருப்பு, ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி சேதுபாவாசத்திரத்தைச் சார்ந்தது ஆகும், இதன் மக்கள் தொகை 3,150. கூட்டுக்குடிநீர்த்திட்டம் 1-ன் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது, நாணத்திடல் ஆதி திராவிடர் தெரு என்ற தனி ஒரு குடியிருப்பு கிடையாது. மறுஆய்வின்படி முழுவதுமாக குடிநீர் நிறைவேற்றப்பட்ட குடியிருப்பாகும். புதியதாக மேல்நிலை தொட்டி கட்டிதர செயற் குறிப்பு இல்லை.

7—

## சுற்றுலாத் துறையால் உணவு மற்றும் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

வினா எண் 755—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் தொகுதியில் தென்னாற்காடு மாவட்டமும், சேலம் மாவட்டமும் இணையும் வி. கூட்டு ரோட்டில் சுற்றுலாத் துறையால் உணவு மற்றும் தங்கும் விடுதி கட்டும் திட்டம் உண்டா ?

விடை—

இல்லை.

8—

## தொழில் முனைவோருக்கு நில ஒதுக்கீடு.

வினா எண் 759— திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம், ஆட்டுப்பண்ணை கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 1,800 ஏக்கர் நிலத்தில் ஒரு பகுதியை தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.



9—

## சாலைப் பராமரிப்பு.

வினா எண் 824— திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியில் தாசப்பகவுண்டன்புதூரிலிருந்து கே. என். பாளையம் வரை உள்ள நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை சாலை பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எவ்வித நடவடிக்கை எடுக்கும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

சட்டமன்ற வினாவில் குறிப்பிடும் தாசப்பகவுண்டன் புதூரிலிருந்து கே. என். பாளையம் வரையுள்ள சாலையின் சரியான பெயர் பெரிய கொடிவேரி— கெம்பநாயக்கன் பாளையம் சாலையாகும். இதன் மொத்த நீளம் 6.40 கி.மீ. ஆகும். இச்சாலையில் கி. மீ. 0/0-2/4 வரை இதர மாவட்ட சாலையாகும். மற்றும் கி. மீ. 2/4— 6/4 வரையுள்ள பகுதி பெரிய மாவட்ட சாலையாகவும் உள்ளது. இச்சாலையில் பழுதடைந்த பகுதியானது கி.மீ. 4/0— 6/4 வரையிலானது மட்டுமேயாகும். இப்பகுதியில் தற்பொழுது தார் சாலையின் மேற்பரப்பு பழுதடைந்துள்ளது. இப்பகுதிக்கு தார் தளம் புதுப்பிக்க நடப்பாண்டிலேயே பராமரிப்பு நிதியைக் கொண்டு கூடிய சீக்கிரத்தில் சாலை மேம்பாடு செய்ய ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது.

10—

## ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுவசதி.

வினா எண் 869— திரு. ஆர். சிங்காரம் :—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

[1992 மார்ச் 23

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

11—

வினா எண் 870—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவ சத்திரம் ஒன்றியம், சொரட்டூர் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

12—

வினா எண் 873—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெண்டாம்புளிக்காடு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம்



1992 மார்ச் 23]

அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

13—

வினா எண், 875—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சின்னமனை வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே. இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

14—

வினா எண், 881—திரு: ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

தஞ்சாவூர் மாவட்டம். சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சொக்கனாதபுரம் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவகர் வேவைாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை,

[1992 மார்ச் 23

15—

வினா எண், 883—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் நல்லமான் புஞ்சை வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

16—

வினா எண், 902—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாடிக்காடு கிராமம், வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

17—

வினா எண், 904—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஈச்சவிடுதி வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



164970

1992 மார்ச் 23]

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை,

18—

வினா எண் 908—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டியில் உள்ள ஆதிதிராவிட காலனியை பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

19—

வினா எண் 927—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணத்தில் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

D
V211,31'N92 M12.1S.2

[1992 மார்ச் 23

20—

வினா எண் 933—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பொன்னாங்கண்ணிக்காடு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

21—

வினா எண் 935—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

22—

வினா எண் 953—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?



1992 மார்ச் 23]

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

23—

வினா எண் 955—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கார்க்காவயல் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

24—

வினா எண் 957—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1992 மார்ச் 23

25—

வினா எண் 958—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காளிக்காடு வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

26—

வினா எண் 960—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

27—

வினா எண் 964—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடி வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு புதிய காலனி வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?



1992 மார்ச் 23]

வளர்த்தல், பன்றி வளர்த்தல் போன்ற அனைத்து கால்நடைத் துறை சம்பந்தப்பட்ட பணிகளுக்கும் கடன் வழங்கிக் கொண்டு தான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 317 — திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்,

317—

ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்ட பட்டா வழங்கல்.

*2792. திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்ட (32 பேருக்கு) நில ஆர்ஜிதம் செய்ததை துரிதப்படுத்தி பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெட்டி தள்ளுபடி செய்வது குறித்து பரிசீலிப்பதாகச் சொல்லியதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டுதல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களும் கரவொலி எழுப்பி நன்றியைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே. ஆகவேதான் எப்போதும் புரட்சித் தலைவி என்றால் புரட்சித்தலைவிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகச் சொல்ல வந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த மழவேனிற்காடு கிராமத்தில் 32 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டுமென்று தனி நபருடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்து பணம் இன்னும் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று அறிகிறேன். அவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்பட

வில்லை, அப்படி பட்டா வழங்கினால்தான் தொகுப்பு வீடுகள் வழங்க முடியும், ஆகவே. 2, 3 ஆண்டுக் காலமாக இது நிலுவையில் இருக்கிறது, இதைத் துரிதப்படுத்த ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சாவூர் மாவட்டம். பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு கிராமத்துக்கு பட்டா வழங்குவது சம்பந்தப்பட்ட 4/1 செயற்குறிப்பை பட்டுக்கோட்டை தனி வட்டாட்சியர் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள், அதை அரசுக்கு அனுப்பி வைப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், வந்தவுடன் அதுபற்றி நடவடிக்கை துரிதப்படுத்தப்படும்,

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்று நிலத்தை ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்குவதில் 2. 3 ஆண்டுகள் காலதாமதம் ஆகிறது, இதற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அல்லது ஒரு குறிப்பிட்ட மாதங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு நிர்ணயம் செய்ய முன்வருமா ? அவர்களுக்கு உடனடியாக தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனைப்பட்டா வழங்கிய பிறகு தான் தொகுப்பு வீடுகள் கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும், மனைப் பட்டா சம்பந்தப்பட்ட கோப்புகள் துரிதப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, ஜி, பழனிசாமி, மழவேனிற்காடு கிராமத்தில் பட்டா வழங்குவது பற்றியது. அதற்கான துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்,

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆதிதிராவிடர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்டுவதற்கு இடம் கையகப்படுத்தும் போது கோர்ட்டுக்குப் போவதைக் குறித்து அரசு தடை விதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது சட்ட சம்பந்தமான விவகாரம், சட்டத் துறையின் மூலம் கலந்து ஆலோசித்து. நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா என் 318, திரு. ஆர், பி. பரமசிவம் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்,





318—

குளுக்கோஸ் தொழிற்சாலை

*760 திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் பகுதியில் அதிகமாகப் பயிராகும் மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்தி குளுக்கோஸ் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

முற்பகல் 10,35

மாண்புமிகு திரு. எஸ், நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சின்னசேலம் பகுதியில். மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி, குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலை, நலிந்த ஆலையாக மாறுவது, சிக் யூனிட்டாக மாறுவது, பொதுவாக அந்த ஆலைக்குத் தேவையான ரா-மெட்டிரியல்ஸ், மூலப் பொருட்கள், கிடைப்பது சிரமமாக இருப்பதும், அவைகள் கிடைக்கும் இடம் ஆலைக்கு வெகு தூரத்தில் இருந்து வருவதும்தான் காரணங்களாக இருக்கின்றன. ஆனால் என்னுடைய சின்னசேலம் பகுதியில், விவசாய மக்கள் மிகப் பெரிய பயிராகவும், பிரதானப் பயிராகவும் தயாரிக்கும் மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி, குழந்தைகள், நோயாளிகள், வயோதிகர்கள். விளையாட்டு வீரர்கள் ஆகியோர்களுக்கு வெகு விரைவில் சத்தும், சக்தியும் தரும் இந்த குளுக்கோஸ் தொழிற்சாலையை ஏற்படுத்தினால், விவசாயிகளுக்கு மிகப் பெரிய விலை பொருளான மரவள்ளிக்கிழங்கிற்கு. தனியார் கிடுக்குப் பிடியிலிருந்து தப்பித்து, நல்ல விலை கிடைக்கும் என்பதால், இதை அரசு பரிசீலனை செய்து, அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக்கிழங்கிலிருந்து நிர்மம் போதுமான அளவிற்கு தயாரிப்பதற்கு உரிமங்கள் தமிழ்நாட்டிலே ஏற்கனவே, வழங்கப்பட்டுவிட்டன. மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து பெரிய அளவில் குளுக்கோஸ் மாவு மற்றும் திரவ குளுக்கோஸ் தயாரிக்கப்படுவதற்கு அவை பயன்படுத்

வதால். மரவள்ளிக்கிழங்கு மாவு குளுக்கோஸ் தயாரிப்பதற்கு மட்டும் என உபரியாகக் கிடைப்பதில்லை, எனவே, மாவுப் பொருட்கள் ஜவுளித் தொழிலில் அதிக அளவில் பயன்படுத்தப் படுகிறது, எனவே, தற்போதைக்கு தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஸ்டார்ச் (மாவு) சாகோ (ஜவ்வரிசி) போன்ற பொருட்களுக்கு சரியான விலையை நிர்ணயிப்பது யார், அதேசமயத்தில். இந்த உற்பத்தி அதிகமாகும் நேரத்தில், அதன் விலையைக் குறைத்து விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரிடம் விலை நிர்ணயம் எல்லாம் வராது, தனிக் கேள்வி போடவும், வினா எண் 300, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கு இணங்க திரும்ப எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

300—

## பூந்தமல்லியை புதிய வட்டமாக்குதல்

*5193—திரு. டி. சுதர்சனம் :
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், ஸ்ரீபெருத்புதூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பூந்தமல்லியைம் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்கப் படுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தச் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது, ஆய்வு முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்



திரு. டி. சுதர்சனம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வட்டம் 13 குறு வட்டங்களையும், அரக்கோணத்திலிருந்து சென்னையை ஒட்டியும் மிகப் பெரிய வட்டமாக உள்ள 8 லட்சம் மக்களைக் கொண்டிருக்கிற அந்த வட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் பிரிப்பதற்கு ஆலோசனையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக, இந்த நிதி ஆண்டிலேயே இந்த வட்டத்தைப் பிரிப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெரிய வட்டம் என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது, ஆகையினாலேதான், ஆய்வுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவிலே முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

## (ஆ) உடுக்குறிபிடாத வினாக்கள்,

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்,

1—

வினா எண் 615—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரியக்கத்திக்கோட்டை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

திட்டம் ஏதும் இல்லை, பெரியக்கத்திக்கோட்டை கிராமம், ஊமத்தாகாடு ஊராட்சி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இக் கிராமத்தின் தற்போதைய மக்கட்தொகை 500 ஆகும். தற்போதைய மறுஆய்வின்படி இக் கிராமம் பகுதியாக செயலாக்கப்பட்ட கிராமம் ஆகும். எதிர்வரும் நிதியாண்டில் கொரட்டூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து தரப்படும்,

2—

வினா எண் 648—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துரை ஊராட்சியில், மேல்நிலைத்தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

திட்டம் ஏதும் இல்லை. திருப்பந்துரை கிராமம், திருப்பந்துரை ஊராட்சி, திருவிடைமருதூர் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இக்கிராமத்தின் மக்கட்தொகை 750 ஆகும், தற்போதைய மறுஆய்வின்படி. பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட கிராமம். எட்டு குறைந்த அளவு ஆழமுள்ள கையிறைப்பான்கள் உள்ளன, இது போதுமானதாக இல்லை, எதிர்வரும் நிதியாண்டில் இத்திட்டம் பற்றி கருத்தில் கொள்ளப்படும்,

3—

வினா எண் 687—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு ஊராட்சி, வேலாகுடிக்கு மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை, சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு ஊராட்சி, வேலாக்குடி குடியிருப்பு சுமார் 800 மக்கட்தொகை கொண்டதாகும். மறுஆய்வின்படி இக் குடியிருப்பு, பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட குடியிருப்பாகும். இரண்டாம்புளிக்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் 4 பொதுக் குழாய்கள் மேடைமூலம் குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது, இது போதுமானதாக இல்லை. எனவே, வரும் நிதியாண்டுகளில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர திட்டம் மேற்கொள்ளப்படும்,



4—

வினா எண் 692—திரு, ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையிளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கில் ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை, திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஊராட்சி, காயாவூர் குடியிருப்புக்கு (எம்.என்.பி.) குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் ஒரு மின்விசைப் பம்பு திட்டம் அமைக்கப்பட்டுள்ளது, காயாவூர் மேற்கு இதன் ஒரு பகுதியாகும். மறுஆய்வின்படி இது ஒரு தனி குடியிருப்பாகக் கருதப்படவில்லை. இப்பகுதிக்கு காயாவூர் குடிநீர்த் திட்டத்தின் மூலம் இரண்டு பொதுக்குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன,

5—

வினா எண் 701—திரு. ஆர். சிங்காரம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை கருர் ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக்காட்டிற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. நடுவிக்காடு கிராமம்—புதுக்கோட்டை கருர் ஊராட்சி பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்ததாகும், இங்கு 1,000 மக்கள்தொகை உள்ளது, இந்த குடியிருப்புக்கு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் இரண்டு ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பாக உள்ளது, இது போதுமானதாக இல்லை, வரும் நிதியாண்டுகளில் இத்திட்டம் பற்றி கருத்தில் கொள்ளப்படும்,

6—

வினா எண் 722—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி, நாணத்திடல் ஆதிதிராவிடர் தெருவிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. நாணத்திடல் குடியிருப்பு, ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி சேதுபாவாசத்திரத்தைச் சார்ந்தது ஆகும். இதன் மக்கள் தொகை 3,150. கூட்டுக்குடிநீர்த்திட்டம் 1-ன் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. நாணத்திடல் ஆதி திராவிடர் தெரு என்ற தனி ஒரு குடியிருப்பு கிடையாது. மறுஆய்வின்படி முழுவதுமாக குடிநீர் நிறைவேற்றப்பட்ட குடியிருப்பாகும். புதியதாக மேல்நிலை தொட்டி கட்டிதர செயற் குறிப்பு இல்லை.

7—

**சுற்றுலாத் துறையால் உணவு மற்றும் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.**

வினா எண் 755—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சின்னசேலம் தொகுதியில் தென்னாற்காடு மாவட்டமும், சேலம் மாவட்டமும் இணையும் வி. கூட்டு ரோட்டில் சுற்றுலாத் துறையால் உணவு மற்றும் தங்கும் விடுதி கட்டும் திட்டம் உண்டா?

விடை—

இல்லை.

8—

**தொழில் முனைவோருக்கு நில ஒதுக்கீடு.**

வினா எண் 759—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சின்னசேலம், ஆட்டுப்பண்ணை கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 1,800 ஏக்கர் நிலத்தில் ஒரு பகுதியை தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.



விடை—

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசியிலுள்ள கூட்டப்பள்ளி, வஞ்சிப்பாளையம், ஒட்டர்பாளையம் ஆகிய இடங்களில் கூட்டுறவு பண்டகசாலை ஏதுமில்லை.

ஆனால் கூட்டுறவு சங்கங்கள் அங்கு நியாய விலைக் கடைகள் நடத்தி வருகின்றன. அவற்றுள் ஒட்டக்பாளையம் நியாயவிலைக் கடைகள் நீங்கலாக மற்ற நியாயவிலைக் கடைகளில் இருப்புக் குறைவு நடந்துள்ளதைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து இரட்டிப்பு அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. தவிரவும் புதுப்பாளையம் நியாய விலைக் கடையின் பணியாளர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

42—

**இராஜபாளையம் மீனாட்சிபுரம் நடுநிலைப் பள்ளிக்கு அரசு அங்கீகாரம்.**

வினா எண் 3777—திரு. தி. சாத்தையா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராஜபாளையம் தொகுதியில் மீனாட்சிபுரம் நடுநிலைப் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் அளிக்குமா?

விடை—

விருதுநகர், காமராசர் மாவட்டம், மீனாட்சிபுரத்தில் 1989-90-ல் பெருந்தலைவர் காமராசர் ஆரம்பப் பள்ளி ஆரம்பிப்பது குறித்து பள்ளி நிர்வாகத்தின் சீராய்வு மனு அரசால் ஆய்வு செய்யப்பட்டு புதிய பள்ளிகள் ஆரம்பிப்பது பற்றி தற்பொழுது நடைமுறையிலிருக்கும் அரசின் கொள்கைப்படி பள்ளி சார்பாக எப்போதும் நிதியுதவி கேட்கமாட்டோம் என்ற உறுதிமொழியினை பள்ளி நிர்வாகத்திடமிருந்து பெற்று 1989-90 முதல் பள்ளிக்கு அனுமதி வழங்கும்படி அரசு கடிதம் நிலை எண் 1149, கல்வி, நாள் 12-12-1991-ல் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

43—

**நெல் கொள்முதல் விலை உயர்வு.**

வினா எண் 3942—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நெல் உற்பத்திக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து விலை உயர்த்தப்பட்டதனால் விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதல் விலை உயர்த்தப்படுமா?

விடை—

ஆண்டுதோறும் மத்திய அரசு விவசாய விளை பொருட்களின் உற்பத்தி மற்றும் விலை ஆணையகம் பரிந்துரையின் அடிப்படையில் கொள்முதல் விலை நிர்ணயம் செய்கிறது. அவ்வாறு நெல்லின் விலை நிர்ணயம் செய்யும் பொழுது உரம், பூச்சி மருந்து இவைகளின் விலையையும் கணக்கில் கொள்ளுகிறது. மாநில அரசும் மத்திய அரசும் நிர்ணயித்த விலையிலேயே விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூ. 35 கொடுத்து வருகிறது.

44—

## சிறு சேமிப்புக் கடன் பத்திரங்கள்.

வினா எண். 3994—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிறு சேமிப்புக் கடன் பத்திரங்கள் மூலம் வருடா வருடம் தமிழகத்தில் திரட்டப்படும் (சுமார் 5 ஆண்டுகள்) நிதியில் இருந்து மாநில அரசுக்கு வழங்கப்படும் நிதி பங்கீடு எவ்வளவு?

விடை—

1-4-1987-க்குப் பிறகு ஒவ்வொரு நிதியாண்டில் வசூலிக்கப்படும் நிகர வசூலில் 75 சதவிகிதத் தொகையினை மத்திய அரசு மாநில அரசுக்கு ஆண்டுதோறும் நீண்டகாலக் கடனாக வழங்கி வருகிறது. 1-4-1987-க்கு முன் 66-2/3 சதவீதத் தொகை கடனாக வழங்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மைய அரசிடமிருந்து கீழ்க்கண்டவாறு சிறு சேமிப்புக் கடன் பெற்றுள்ளது:—

| நிதி ஆண்டு. | மாநிலத்திற்கான பங்கு சதவிகிதம். | பெறப்பட்ட கடன் தொகை. | வட்டி வீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்). | |
| 1986—87 | 66-2/3 | 121.00 | 12% |
| 1987—88 | 75 | 99.03 | 13% |
| 1988—89 | 75 | 116.08 | 13% |
| 1989—90 | 75 | 203.25 | 13% |
| 1990—91 | 75 | 272.98 | 13% |



45—

## ஆயிபுரம் காலனிக்கு குடிநீர் வசதி.

வினா எண். 4045—செல்வி. கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் ஆயிபுரம் காலனிக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த ஆயிபுரம் காலனியில் மக்கட் தொகை 268 ஆகும். இதன் மக்கட் தொகைக்கு ஏற்ப, இங்கு 1988-89 மற்றும் 1989-90 ஆண்டுகளில் இரண்டு (இந்தியா மார்க் 2) கையிறைப்பான்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டு, பராமரிப்பதற்காக ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிதியாண்டில் அறவே குடிநீர் வசதியற்ற மற்றும் மிகக் குறைந்த அளவு குடிநீர் வசதியுள்ள குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதால், பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ள இக் குடியிருப்பிற்கு திட்டம் ஏதும் தற்போது இல்லை. வரும் நிதி ஆண்டுகளில் முன்னுரிமைப்படியும், வாரிய விதிகளின்படியும் குடிநீர் திட்டம் செயலாக்கப்படும்.

46—

## தேர்வுமுன் பயிற்சி மையத்தில் சேர விண்ணப்பித்தவர்கள்.

வினா எண் 4097—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் உள்ள அகில இந்திய பணிகளுக்கான "தேர்வு முன் பயிற்சி மையத்தில் (Pre-Examination Training Centre) இவ்வாண்டு சேர விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேர்கள் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்?

விடை—

(அ) 497 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

(ஆ) 60 பேர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

47—

## வாய்க்கால் தூர் எடுக்கும் திட்டம்.

வினா எண். 4200—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குத்தாலம் தொகுதி, வானாதிராஜபுரம் கிராம விவசாயிகள் பயன்பெறும் வகையில் இவ்வூர் பாசன கால்வாய்களான சாலைக்கரை வாய்க்கால், சோழக்கரை வாய்க்கால் ஆகிய இரண்டும் தூர்ந்து போயுள்ளதால் இவைகளை தூர் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீல்னையில் உள்ளதா ?

விடை—

சாலைக்கரை என்கிற புதிய வானாதிராஜபுரம் வாய்க்காலை குடிமராமத்து திட்டத்தின்கீழ் தூர் அகற்ற 1990—91 ஆம் ஆண்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஆனால், இந்த வாய்க்காலில் தூர் அகற்ற பாசனதாரர்கள் முன்வராததால் குடிமராமத்துப் பணி செய்ய இயலவில்லை. புல்டோசர் கொண்டு வரும் கோடையில் பணி செய்து கொடுக்கப்படும். சோழகரை வாய்க்கால் குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் எடுத்து 1991 ஆம் ஆண்டின் கோடையில் தூர் அகற்றப்பட்டது.

48—

## ஆதிதிராவிடர் காலனிக்கு டி.வி. வழங்கல்.

வினா எண். 4257— டாக்டர். மு. சினியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அவிநாசி தாலுக்கா கனியாம்பூண்டி ஆதிதிராவிடர் காலனி மக்கள் அரசால் கொடுக்கப்பட்டுள்ள டி.வி. யினால் பயன் பெறாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், டி.வி, -யை முறையாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) கொடுக்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டியினால் ஆதிதிராவிட மக்கள் பயன்பெற்று வருவதாகவே அரசுக்குத் தெரியவந்துள்ளது.

(ஆ) கனியாம்பூண்டி ஊராட்சிக்கு வாங்கப்பட்ட இரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஒன்று கனியாம்பூண்டி ஊராட்சி மன்றக் கட்டிடத்திலும் மற்றொன்று முருகம்பாளையம் கிராமப் படிப்பகக் கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன. இத்தொலைக் காட்சிப் பெட்டிகளினால் ஆதிதிராவிட மக்களும் பிற வகுப்பினரும் பயன் பெற்று வருகின்றனர்.



49—

## சோழன் போக்குவரத்துக் கழக அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கார் திருவுருவப்படம்.

வினா எண் 4315—திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சோழன் போக்குவரத்துக் கழக அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கார் திருவுருவப்படத்தை வைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வைக்கப்படும் ?

விடை—

(அ) சோழன் போக்குவரத்துக் கழக அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்காரின் திருவுருவப் படத்தை அவரது நினைவு நாளன்று திறந்து வைப்பதென போக்குவரத்துக் கழகத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) தீர்மானிக்கப்பட்டபடி டாக்டர் அம்பேத்காரின் நினைவு நாளான 6—12—91 அன்று அன்னாரது திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

50—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண் 5850—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 1989-90, 1990-91-ம் ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

அரசு எடுத்த முடிவின்படி 1989–90, 1990–91 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம் எதுவும் செயலில் இல்லை. இத்திட்டம், தற்பொழுது ஊரக வளர்ச்சித் துறையில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் மத்திய, மாநில நிதியைக் கொண்டு பஞ்சாயத்துக்கள் மூலம் நிறைவேற்றப் படுகின்றன.

---

[*குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சிறப்புக் குறிப்பு.

**நாகைப்பட்டினத்திலிருந்து மீன் பிடிக்கச்சென்ற மீனவர்கள் காணாமல்போனது குறித்தும், கச்சத்தீவு பிரச்சினை குறித்தும் முதலமைச்சருக்குப் பிரதமர் எழுதிய கடிதம் குறித்தும்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாகைப்பட்டினம் பகுதியில் மீனவர்கள் காணாமல் போனது பற்றிய பிரச்சினை இந்த அவையில் எழுப்பப்பட்டு, மேற்கொண்டு சில விவரங்கள் கிடைத்திருப்பதாகவும், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் திரு. ஆர். கோடிமாரி மற்றும் ஆர். சிங்காரம் ஆகியோர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், இந்தப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். கோடிமாரி,

முற்பகல் 10–40

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16—3—1992 திங்கட்கிழமை அதிகாலை நாகைத் துறைமுகத்திலிருந்து மீன் பிடிப்பதற்குச் சென்ற டி.ஜே.சி. 302 என்ற விசைப்படகும், அதில் சென்ற 7 மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் அன்று இரவு 9 மணிக்குத் தாக்கப்பட்டு விசைப் படகும் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. பிறகு 18 ஆம் தேதி தொழிலுக்கு நாகைத் துறைமுகத்தில் இருந்து சென்ற மற்றொரு விசைப்படகும் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு, டி.ஜே.சி. 302 என்ற விசைப்படகில் உள்ள குளிர்சாதனப் பெட்டி. இரண்டும், இன்ஜின் மேல் மூடி அதாவது கேபினட் ஒன்றும் மற்றும் சில தளவாடச் சாமான்கள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டும் துப்பாக்கி ரவைகளோடு மிதந்து கண்டு எடுத்து கரைக்குச் சேர்த்து உள்ளார்கள். எஞ்சின் மூடி மிதந்து கண்டெடுத்து நிலையில் டி.ஜே.சி. 302 என்ற விசைப் படகு தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டு விட்டதாகக் கருதியதால், இதில் சென்ற 7 மீனவர்கள் உயிருக்கு என்ன நேர்ந்தது என்று அஞ்சுகின்ற வகையில் உள்ளது. அதுமட்டுமல்லாமல் 2 நாட்களுக்கு முன்பாக இலங்கை வானொலியில் இலங்கையின் தென் கிழக்குப் பகுதியில் அடையாளம் தெரியாத 4 பிணங்கள் மிதப்பதாக செய்தியில் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் மீனவர்கள் மத்தியில் மிகவும் பதட்ட நிலை இருக்கிறது. இன்றைய செய்தித்தாளில் கோடியக்கரை கலங்கரை விளக்கு அருகே ஒரு வாலிபரின் பிணம் ஒதுங்கி இருப்பதாகவும் அந்த வாலிபரின் உடலில் நான்கு குண்டுக் காயங்கள் இருப்பதாகவும் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே தவித்து அழுது புலம்பிக்கொண்டிருக்கும் அந்தக் குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டிய மீனவர்களின் காவல் தெய்வமாக



விளங்கும் எங்கள் இதய தெய்வமான மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த 7 ஏழை மீனவர்களைக் காப்பாற்ற உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாழ்மையோடு வேண்டி கேட்டுக் கொள்கின்ற வகையில் இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்புகின்றேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் கடற்கரை கிராமங்களான அக்கரைப்பேட்டை. கீச்சாங்குப்பம் மற்றும் கல்லாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 7 மீனவர்கள் 16—3—1992 அன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றார்கள் என்றும், அவர்கள் 23—3—1992 அன்று காலை வரை கரை திரும்பவில்லை என்றும் அரசுக்கு தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிகிறது. இதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த 320 படகுகள் வைத்திருக்கும் சுமார் 1,500 மீனவர்கள் 21—3—1992 முதல் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லவில்லை, நாகப்பட்டினம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கடலோரக் கிராமங்களைச் சேர்ந்த அனைத்து கட்சியினர் மற்றும் மீனவர்கள் இச்சம்பவம் குறித்து மிகுந்த கொதிப்படைந்து இருப்பதாகவும், இதனால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இச்சம்பவத்திற்கு முன்பு 28—2—1992 அன்று சிந்தாமணி என்ற படகில் கோடியக்கரைக்கு தென் கிழக்காக சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மயில்வாகனன் என்பவரை இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் அவர் காலில் காயம் ஏற்பட்டதோடு, அவரது மீன்பிடி வலைகள், சமையல் பாத்திரங்கள் ஆகியவைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டன என்ற புகாரும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது, இது குறித்து வேதாரண்யம் காவல் நிலையத்தில் குற்ற எண் 143/92 இந்திய தண்டனைச் சட்டம் 307, 329 மற்றும் 323 பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 16—3—1992 அன்று மீன் பிடிக்கச் சென்ற 7 மீனவர்கள் காணாமற் போனார்கள் என்ற செய்தி கிடைத்தவுடனே தமிழக அரசு இச்சம்பவத்திற்கு இலங்கைப் படையினர்தான் காரணமாக இருப்பார்கள் என்று அறிந்து இந்திய அரசின் வெளிநாட்டு அமைச்சகத்திற்கும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கும் இது தொடர்பாகத் தகவல் அனுப்பி, காணமாற்போன மீனவர்களை மீட்டுவர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது, மேலும் இந்தியக் கடற்படையினருக்கும் மீட்புப் பணியில் உடனடியாக ஈடுபடுமாறு ஏற்கெனவே வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது,

[மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 23

Naval Officer In-charge, Fort Complex, Madras Naval Headquarters, New Delhi, Flag Officer Commanding in Chief, Eastern Naval Command Vizagapattinam அவர்களுக்கு அனுப்பிய டெலக்ஸ் செய்தியின் விவரம் வருமாறு:

"It has been brought to the notice of the Government that a mechanized Boat TJC 302 which went for fishing on 16th March 1992 with 7 Fishermen is missing. It was last seen near Akkaraipettai area. Kindly arrange for an aerial search of the missing boat and the 7 Fishermen of Akkaraipettai. The result of the search may please be intimated urgently."

பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும் இச்சம்பவத்தைக் குறிப்பிட்டு இதனால் தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளும், இதனால் தமிழ்நாட்டில் கடற்கரைப் பகுதிகளில் எழக்கூடிய சட்ட ஒழுங்கு பிரச்சினை குறித்துக் குறிப்பிட்டும், உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு காணாமற்போன இந்திய மீனவர்களை இலங்கை அரசின் மூலம் மீட்டுத் தரவேண்டுமென்றும், இதுபோன்ற சம்பவங்களில் இலங்கை கடற்படையினர் ஈடுபடாது இருக்குமாறு கட்டுப்படுத்த வேண்டும் என்றும், ஏற்பட்ட இழப்பிற்கு ஈடுசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி—தொலை அச்சு—டெலக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளேன்.

முற்பகல் 10.45

"On 16th March 1992, 7 Fishermen of Akkaraipettai village of Nagapattinam District in Tamil Nadu who set sail in TJC302 mechanized Boat are believed to have been taken into custody by Sri Lankan Naval personnel. It is feared that the lives of these 7 fishermen are in danger. Protesting against this about 1500 fishermen owning 320 boats did not go for fishing from 21st March 1992 onwards. This incident is likely to infuriate our Fishermen in this area. Serious law and order situation is developing in the coastal areas of Tamil Nadu. In the above circumstances I urge you to kindly take up the matter with the Government of Sri Lanka and prevail upon them to set the Fishermen free immediately and return them to India safely. Kindly ensure that the Sri Lankan Navy do not indulge in such activities in future, which cause danger to the lives of the Fishermen engaged in fishing in this area and also cause damage to the properties of the Fishermen. I would like to request you to make an appeal to the Government of Sri Lanka to compensate adequately for the loss of properties caused in this incident as well as in the earlier incidents of this nature." மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு நன்றாகவே தெரியும், இது ஒரு தனித்த சம்பவம் அல்ல. இதுவரை 50க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் தங்கள் இன்னுயிரை இது போன்ற நிகழ்ச்சிகளில்



1992 மார்ச் 23] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இழந்துள்ளார்கள். 200க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் காயமுற்றுள்ளார்கள். சுமார் 70 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட உடைமைகளை இழந்துள்ளார்கள். இத்தகைய கொடுமைகளிலிருந்து தமிழக மீனவர்களை நிரந்தரமாகக் காப்பாற்ற வேண்டும் என்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டு 15—2—1992 அன்று ஒரு விரிவான கடிதம் எழுதியிருந்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்கள் எனக்கு மார்ச் 4, 1992 தேதியிட்ட பதில் கடிதம் அனுப்பியுள்ளார்கள். பிரதமர் அவர்களின் கடிதம்—

"My dear Jayalalithaji,

I have received your letter of February 15th and also your earlier letter of August 11th 1991 concerning Katchatheevu Island. The question of Katchatheevu Island has important policy implications and must therefore be examined with considerable care and attention. I have asked the Ministry of External Affairs to make a thorough and detailed study of this subject. We have already taken up with theSrilankan Government,the cases of harassment of our fishermen who may have strayed across the International boundary, so that they are treated fairly and in accordance with humanitarian principles. I had raised this issue specifically with President Premadasa when I met him in Colombo during the SAARC summit in December last year. The incident that you have mentioned in your letter is being taken up strongly with the Srilankan Government. I shall keep in touch with you concerning these matters. With regards,

Yours sincerely,
P. V. NARASIMHA RAO."

பிரதமர் அவர்கள் எனக்கு எழுதியுள்ள 1992 மார்ச் 4 ஆம் தேதியிட்ட பதில் கடிதத்தில் இப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும், பன்னாட்டு கடல் எல்லையை தவறுதலாகக் கடந்து விடும் இந்திய மீனவர்களை இலங்கை அரசு மனிதாபிமான அடிப்படையில் பரிவுடன் நடத்த வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். மேலும் பாரதப் பிரதமர் அவர்கள் கடந்த டிசம்பரில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட சமயத்தில் இலங்கைக் குடியரசுத் தலைவர் திரு. பிரேமதாஸா அவர்களிடம் இப்பிரச்சினை குறித்து விளக்கி இருப்பதாகவும், தெரிவித்துள்ளார்கள். இலங்கை அரசிடம் இப்பிரச்சினை சம்பந்தமாக சற்றுக்கடுமையாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் எனக்கு எழுதியுள்ள பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்

என்பதை மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. கோடிமாரி அவர்கள் பேசுகிறபோது சில பிணங்கள் மிதப்பதாக, கடலில் மிதப்பதாகச் செய்திகள் வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இத்தகைய செய்திகள் எல்லாம் அனுமானத்தின் பெயரிலே வெளி வந்துள்ள செய்திகள் தான் என்றும் இதுவரையில் அரசுக்குக் கிடைத்துள்ள தகவலின் படி, இந்த 7 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வைத்திருக்கக்கூடும் என்று தான் வந்த தகவல்கள் கூறுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவத்தில் காணாமல் போன 7 மீனவர்களைக் கண்டு பிடித்து மீட்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. தமிழக மீனவர்களுக்கு நிரந்தரமாகப் பாதுகாப்புக் கிடைக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு உள்ளது. தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10–50

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) உப்பு வியாபாரிகள் மீது சுகாதார அதிகாரிகள் கலப்பட தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். டேனியல்ராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிகளில் பணியாற்றும் சுகாதார அதிகாரிகள் உப்பு விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது உணவுப் பொருள் கலப்படச் சட்டத்தின்கீழ் வழக்குகள் போடுவதால் சிறு உப்பு உற்பத்தியாளர், உப்பு விற்பனை செய்யும் வியாபாரிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவல நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுஉள்ளது.



### அறிக்கை.

மக்கள் உட்கொள்வதற்காக விற்கப்படும் உணவுப் பொருட்கள் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் 1954 மற்றும் உணவுக் கலப்படத் தடுப்பு சட்டவிதிகள் 1955 ஆகியவைகளில் கண்டுள்ள விதிமுறைகளுக்கிணங்க இருக்க வேண்டும். மக்கள் உட்கொள்ளும் உணவு உப்பும் இதில் அடங்கும். உணவுக்கலப்படத் தடை சட்ட விதிகளின்படி சாதாரண உணவு உப்பானது, கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு இருக்கவேண்டும்.

''உட்கொள்ளத் தக்க உப்பு என்பது படிக வடிவில் உள்ள திடப்பொருள், வெள்ளையாக அல்லது மங்கல ஒளி உள்ளதாக, இளஞ் சிவப்பு நிறமாக அல்லது வெளிர் பழுப்பு நிறமாக உள்ளதாக இருக்கும். களிமண் கட்டிகள், அன்னிய பொருட்கள், அசுத்தப் பொருட்கள் அதில் கலந்திருக்கக்கூடாது. உலர்ந்திராத மாதிரி உப்பின் எடையில் 6 சதவீதத்திற்கு மேற்பட்டு ஈரம் இருக்கக் கூடாது. உலர்ந்த நிலையில் அதன் எடையின் அடிப்படையில் கீழ்க்கண்டவை அதில் கண்டிருக்க வேண்டும்.

(அ) குறைந்தது 96.0 சதவீதம் எடைக்கு சோடியம் குளோரைட்.

(ஆ) 1.00 சதவீதத்திற்கு மேற்படாமல் எடையில் நீரில் கரைய இயலாத பொருள்.

(இ) 3.00 சதவீதத்திற்கு மேற்படாமல் எடையில் நீரில் கரையத்தக்க பொருள் (சோடியம் குளோரைட் நீங்கலாக).

மேலே கூறியவாறு நிர்ணயம் செய்யப்பட்ட தரத்திற்குள்தான் சாதாரண உணவு உப்பானது கட்டாயமாக இருக்க வேண்டும். உப்பு உற்பத்தியாளரோ விற்பனையாளரோ நல்ல தரமான முறையில் மக்களுக்கு இந்த உணவு உப்பை விற்பனை செய்வது தான் முறையான செயல். இதைத் தவிர்த்து, உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தை மீறி உணவு உப்பு விற்கப்படுமாயின் கண்டிப்பாக தண்டிக்கப்படுவர். விற்கப்படும் உணவு உப்பு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குள் இல்லை என்று சுகாதார உணவு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டவுடன்தான் உணவுக் கலப்படச் சட்டத்தின்கீழ் வழக்குகள் போடப்பட்டு அபராதமும் சிறைத் தண்டனையும் சட்டத்தை மீறுபவர்களுக்கு விதிக்கப்படுகிறது. தரமான உணவு உப்பு உற்பத்தியாளர், விற்பனையாளர் இச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்படுவதில்லை சட்டத்தை மீறுபவர்களை இச்சட்டத்தின்கீழ் கண்காணிக்காமல் இருக்கக் கோருவது ஏற்க இயலாது என்பதாகும். சிறு உப்பு உற்பத்தியாளர், விற்பனையாளர் இந்த உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் சொல்லொணா துயரங்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்யும் அதிகாரிகளால் அனுபவிப்பதாகக் கூறுவது முறையல்ல.

சுகாதார உணவு அதிகாரிகளால் உணவு மாதிரிகள் பல்வேறு இடங்களில் எடுக்கப்பட்டு, அவைகள் நிர்ணயிக்கப்பட்ட அளவில் இருக்கின்றனவா என்று ஆய்வுக் கூடங்களில் சரிபார்க்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் சாதாரண உணவு உப்பை பரிசோதனை செய்யப்பட்ட விவரங்களும் அதன் முடிவுகளும் கீழ் வருமாறு :—

| வருடம். | மொத்த உணவு உப்பு பரிசோதனைக்கு உள்ளாக்கியது. | கலப்படமான உணவு உப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1988–89 .. .. | 43 | 14 |
| 1989–90 .. .. | 24 | 6 |
| 1990–91 .. .. | 30 | 9 |

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ருசிக்கு சேர்க்கும் உப்பிலே 96 சதவிகிதம் சோடியம் இருக்க வேண்டுமென்று கூறி ஃபுட் இன்ஸ்பெக்டர்ஸ், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் ஒரு குற்றமும் செய்யாத சிறு உப்பு வியாபாரிகள் மீது உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு போட்டு அதன் மூலம் 6 மாத கால சிறைத்தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கின்ற அளவுக்கு இன்றைய நீதிமன்றங்களிலே அவர்கள் மீது தண்டனை வழங்கப்படுகிறது. சாதாரணமாக 25 கிலோ உப்பை தலையிலே வைத்து வியாபாரம் செய்கின்றவர்கள் மீது கூட இப்படிப்பட்ட தண்டனை வழங்கப்படுகிறது. உப்பை பொறுத்தமட்டிலே நெல், கோதுமை எப்படி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, பிரச்சினைக்கு வரவேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் எல்லாம் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : உப்பைப் பொறுத்தமட்டிலே நெல், கோதுமை எப்படி நிலத்திலே இயற்கையாக உற்பத்தி செய்யப்படுகின்றதோ அதேபோன்று உப்பும் நிலத்திலே நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, சூரிய ஒளி மூலமாகத்தான் உப்பு இயற்கையாக உற்பத்தி செய்யப்படுகிறது. அதே போன்று உப்புதான் உலகத்திலேயே மிகக் குறைந்த விலையுள்ள பொருள். ஆகவே. . . .



மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். உப்பு விலை குறைந்த பொருள் என்பது நீங்கள் இங்கே சட்டமன்றத்தில் சொல்லித்தானா தெரியும். கேள்வியாகக் கேளுங்கள். அவர் அறிக்கை வைத்திருக்கிறார். அறிக்கையிலே எல்லா விவரமும் இருக்கிறது. அதிலே உங்களுடைய கேள்வி இருக்க வேண்டும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, எக்ஸ்பிளெயின் பண்ண வேண்டும் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்பிளெயின் பண்ணுவதற்கு வாய்ப்பு இல்லை. கேள்வி கேட்பதற்குத்தான் வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. இதை நீங்கள் மானியக் கோரிக்கையிலே பேசும்போதே பேசியிருக்கலாம்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : உப்பு கலப்படத்திலே சேர்ந்தது இல்லை என்பதற்காகத்தான். ஆகவே உப்பைப் பொறுத்தமட்டிலே உப்பு அதிகமாக சாப்பிட்டால்தான் வியாதிகள் எல்லாம் வருகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, உப்பை. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதுவும் கேள்வி கேட்க விரும்பவில்லையா ? நான் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டு இருக்கிறேன். உப்பை அதிகமாகச் சாப்பிட்டால் தான் நோய்கள் வருகின்றன என்று சொல்லி இம்மாதிரி நேரத்தை வீணடிக்கக் கூடாது. வினாவைக் கேளுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : ஆகவே, உப்பை கலப்பட பொருளிலிருந்து விலக்கு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு வியாபாரத்திலே சில பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகின்ற சின்ன சின்ன இடையூறுகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் கோடிக் கணக்கான பேர் உப்பை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஆபத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களோடு ஒத்துபோவார்கள் என்று கருதுகிறேன். எங்கேயாவது இப்படி போய் உப்பு வியாபாரிகளைத் தேவையில்லாமல் அவசியம் இல்லாமல் வேண்டுமென்றே தொந்தரவு செய்தால் அதை கவனித்து நடவடிக்கை எடுக்கலாமே ஒழிய, இதிலிருந்து விதிவிலக்கு அளித்துவிட்டால், இதிலே கலப்படத்தின் மூலமாக நாளையதினம் ஒரு பெரும் பிரச்சினை வருகின்றபோது அரசாங்கத்தின்மீது அத்தனை பழிகளையும் நீங்களேகூட பேசக் கூடும், என்ற காரணத்தால் இதிலே ஒத்துக்கொள்ள முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு இதே போன்று உப்பை சாம்பிள் எடுத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது உப்பு உற்பத்தியாளர்கள் வியாபாரிகள் அன்றைய முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களிடத்திலே முறையிட்டதன் காரணமாக இந்த உணவுப் பொருள் கலப்பட தடைச் சட்டத்திலிருந்து உப்பை விலக்கு அளித்திருக்கிறார்கள் 1958–லே. அதே போன்று தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும் இந்த உணவுப்பொருள் கலப்படச் சட்டத்தின் கீழிருந்து உப்பை விலக்கு அளிப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் அவர்கள் பெரிய மனத்தோடு அதைச் செய்திருக்கக்கூடும். அதற்குப் பின்னாலே இந்த உப்பிலே கலப்படம் ஏற்பட்டு அதாவது பிரச்சினை ஏற்பட்டு உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மீண்டும் வேண்டுகோள் வைத்து அதிலே சேர்க்கப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். எனவே இப்போது இருக்கின்ற முறையே தொடர்ந்து இருப்பது நல்லது, பொது மக்களுக்குப் பாதுகாப்பு என்று கருதுகிறேன். தவறு நடக்காமல் பார்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அத்தனையும் எடுக்கலாம். தவறுகள் நடக்கிறது என்பதற்காக ஒவ்வொன்றையும் விலக்கு அளித்துக் கொண்டே போனால் மிகப்பெரிய ஆபத்துக்கு மக்கள் ஆளாக்கப் பட்டுவிடுவார்கள்.

முற்பகல் 10-55

### 3. சிறப்புக் குறிப்பு—தொடர்ச்சி.

**நாகைப்பட்டினத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் காணாமல் போனது குறித்தும், கச்சத் தீவு பிரச்சனை குறித்தும் முதலமைச்சருக்குப் பிரதமர் எழுதிய கடிதம் குறித்தும்—தொடர்ச்சி.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் சுடப்படுவது குறித்தும் அவர்களுக்கு இலங்கை கடற்படையினரால் கொடுக்கப்படுகிற தொந்தரவுகள் குறித்தும் இங்கே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு அறிக்கை தந்தார்கள். அந்த அறிக்கையை வாசிக்கின்றபோது சில கடிதங்களின் விவரங்களையும் படித்தார்கள். அதில் மிக முக்கியமான ஒரு கடிதம் பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் எழுதியிருக்கிற கடிதம் ஆகும். அதில் ஒரு செய்தி குறிப்பிடப்



பட்டிருந்தது. அது ஒருவேளை சபையின் கவனத்தையும் அல்லது மக்களுடைய கவனத்தையும் கவராமல் போய்விடுமோ என்ற காரணத்தால் அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆகஸ்ட் திங்களில் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைக்கின்றபோது நான் எப்படியும் க்ச்சத்தீவை மீட்டுத் தருவேன் என்று நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியிருந்தார்கள். அதைப்பற்றியும் பாரதப் பிரதமருக்கு எழுதியிருக்கிறார்கள். அதுகுறித்தும் அந்தக் கடிதத்திலே பாரதப் பிரதமர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை குறித்து நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலிக்கிறோம் என்று சொன்னதேகூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற முயற்சிக்கு கிடைத்து இருக்கிற வெற்றியாக நான் இங்கே (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### 4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

**(ஆ) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்திலுள்ள சந்தன எண்ணெய் ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, திரு. சி, ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் உள்ள அரசு சந்தன எண்ணெய் ஆலை மூடப்பட்டது குறித்து" மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு, செ, ரகுபதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதுபற்றி விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது,

### அறிக்கை

வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம், தெக்குப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை 1—10—1984 முதல் வணிக ரீதியில் இயக்க

தமிழ்நாடு வனத் தோட்டக் கழக நிறுவனத்திற்கு அரசு அனுமதியளித்திருந்தது. இந்த தொழிற்சாலையில் சந்தன மர எண்ணெயும் அதன் துணைப் பொருட்களும் தயாரிக்கப்பட்டு வந்தன. தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட சந்தன எண்ணெய் மற்றும் அதன் துணைப் பொருட்கள் உரிய விலைக்கு விற்பனையாகாததால், தயாரிக்கப்பட்ட பொருட்களின் இருப்பு அதிகரித்தது. ரூபாய் 45 இலட்சத்திற்கு பெறுமான பொருட்கள் விலை போகாமல் தேக்கநிலை அடைந்ததால், தொழிற்சாலையின் செயல்பாட்டு திறன் ஆராயப்பட்டது, இறுதியாக, இத்தொழிற்சாலை லாபகரமாகவும், நிரந்தரமாகவும் செயல்படுவதற்கான வழிகள் ஏதும் இல்லையென்ற நிலையில் இத்தொழிற்சாலையை மூடிவிட அரசு கொள்கை ரீதியான முடிவு எடுத்தது. அரசு தனது 5—11—1990 நாளிட்ட சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் ஆணை (நிலை) எண் 752ல் மேற்குறிப்பிட்ட சந்தனமர எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை மூடிவிட உத்தரவிட்டது.

2. தொழிலாளர்—நிர்வாகத்தினர் இடையேயான பிரச்சினையால் ஆலை மூடப்படவில்லை. தொழிற் தகராறு ஏதும் நிலுவையில் இல்லை. இத்தொழிற்சாலை மூடப்பட்டதன் விளைவாக, நிர்வாகம், அங்கு பணியாற்றி வந்த 65 தொழிலாளர்களில் 52 பணியாளர்களை 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 25எப்-ன் படி பணிக்குறைப்பு செய்தது. அவர்களுக்கு உரிய நஷ்டஈடு அளிக்கப்பட்டது. அதனை தொழிலாளர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். மீதமுள்ள 13 தொழிலாளர்கள் தொழிற்சாலை வளாகம் மற்றும் தேங்கி இருக்கும் பொருட்களின் இருப்பின் பாதுகாப்பிற்காகவும் பணியில் தொடர்ந்து அமர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் தான் உயர்ந்த ரக சந்தனம் கிடைக்கிறது என்பதும் அதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் இன்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சராக இருக்கின்ற அவருடைய தொகுதியில் இருக்கக்கூடிய தெக்குப்பட்டு என்ற கிராமத்திலே 1984ஆம் ஆண்டு இந்த ஆலை துவங்கப்பட்டு இன்று புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே எதையும் மூடியிருக்கின்ற ஒன்றை திறந்துதான் பழக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு இதில் சாதனைப் படைத்துக்கொண்டிருக்கிறார்களே ஒழிய எதையும் மூடியதாக வரலாறு இல்லை. ஆகவே, நீங்கள் 5—11—1990 ஆம் தேதி மூடுவதற்காக அரசாணை பிறப்பித்து இருக்கிற ஒன்றைமீண்டும் மாற்றி அங்கு இந்தத் தொழில் வளர்ச்சி அடையவும் தொழிலாளர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கவும் ஆவன



செய்யும் முகத்தான் அந்த ஆலையை திறப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, செ, ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தொழிற்சாலைகளை மூடுகின்ற எண்ணம் மனித நேயம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு கிடையாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற்சாலையை மூடுவதற்கு அரசு 5—11—1990 ஆம் தேதி அன்று எடுக்கப்பட்ட முடிவு அன்றைக்கு எந்த அரசு இருந்தது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

தொழிலாளர்களின் பதட்ட நிலை என்று சொன்னார்கள். அங்கே அந்த ஆலை மூடப்பட எடுக்கப்பட்ட முடிவினால் எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே 65 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்* அவர்களிலே 52 பணியாளர்கள் 1947ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டம் பிரிவு 25 (எப்)—ன் கீழ் பணிக்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதம் இருக்கிற 13 தொழிலாளர்களுக்குத் தொழிசாலை வளாகம் மற்றும் தேங்கி இருக்கும் பொருட்களின் இருப்பினை பாதுகாப்பதற்கு அவர்கள் பணியில் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி, ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தைத் தான் நானும் சொன்னேன் எப்போதும் சில கறைப்படிந்த கைகளுக்குச் சொந்தக்காரர்கள் மூடியதை நல்லக் கரங்களைக் கொண்டு இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறக்கவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத் தான் 1990ஆம் ஆண்டு மூடப்பட்ட அந்த ஆலையை இப்போது இந்த நல்ல ஆட்சி மலர்ந்து இருக்கிற இந்த வேளையில் திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தேன். இன்று அதாவது சந்தன தொழிலிலே மிக முக்கியமான அதாவது மைசூர் சாண்டல் சோப் என்று கர்நாடக அரசு தயாரித்துக் கொண்டு இருக்கிறது.. அதேபோல் இந்த அதிகமான கோடிக் கணக்கில் முதலீடு செய்து துவக்கப்பட்ட இந்த ஆலையில் அட்லீஸ்ட் இந்த சோப் தயாரிக்கின்ற தமிழ்நாடு சோப் என்ற ஒன்றை நாம் உருவாக்குவோமானால் நல்ல லாபம் கிடைக்கும் . ஆகவே. அந்த லாபத்தைப் பெறும் வகையில்

[திரு. சி. ஞானசேகரன்] [1992 மார்ச் 23

இந்த இடத்திலே அரசு திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன் அப்படியில்லை என்று சொன்னால், தனியார் துறையின் மூலமாகவாவது அந்தத் தொழிற்சாலையை இயக்கு வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.
முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையை மூடவேண்டுமென்ற முடிவினை அரசு அந்தக் காலகட்டத்தில் ஏன் எடுத்தது ; அது லாபத்தில் இயங்கியதா அல்லது நஷ்டத்தில் இயங்கியதா என்பன போன்ற விவரங்கள் மாண்புமிகு அமைச்சரிடம் இருக்குமேயானால் அதை இந்த அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—10—1984ஆம் தேதி முதல் தமிழ்நாடு வனத் தோட்ட கழகத்திற்கு இந்த ஆலையை நிறுவ அன்றைக்கு அரசு அனுமதி அளித்து இருந்தது. தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட சந்தன எண்ணெய் மற்றும் அதன் துணைப் பொருட்கள் உரிய விலைக்கு விற்பனையாகாததால் தயாரிக்கப் பட்ட பொருட்களின் இருப்பு அதிகரித்து, ரூபாய் 45 லட்சம் பெருமானமுள்ள பொருட்கள் விலை போகாமல் தேக்க நிலை அடைந்ததால், தொழிற்சாலையினுடைய செயல்பாட்டுத் திறன் ஆராயப்பட்டது, இறுதியாக, இத்தொழிற்சாலை இலாபகர மாகவும் நிரந்தரமாகவும் செயல்படுவதற்கான வழிகள் எதுவும் இல்லையென்ற நிலையில் இத்தொழிற்சாலையை மூடிவிட அரசு கொள்கை ரீதியான முடிவு எடுத்தது, அதனை 5—11—1990ஆம் நாளிட்ட சுற்றுப் புறம் மற்றும் வனத் துறையினுடைய ஆணை எண் 752—இல் சந்தன மர எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை, லாபகரம் இல்லை என்கின்ற காரணத்தினாலே மூடிவிட உத்தரவிட்டது என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்,

## சட்ட விதிகள் ஆய்வுக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு.



1992 மார்ச் 23]

பேராசிரியர் க. பொன்னுசாமி மாண்புமிகு (பேரவைத் துணைத்தலைவர்) : மாண்புமிகு பேரவைத்-தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் 1991–92 ஆம் ஆண்டுக் கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை யைப் பேரவைக்கு அளிக்கிறேன்,

## 6. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் முதலியோர் நலன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் முதலியோர் நலன் பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 36,93,61,000-க்கு மேற் படாத தொகைக்கு அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 673. திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மாணவர்களுக்கு எட்டாம் வகுப்பு-பத்தாம் வகுப்பு-பன்னிரெண்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் கொடுப்பது மற்றும் உயர் கல்வி கற்க உதவுவது குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன் பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 36,93,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வெட்டுத் தீர் மானம் எண் 658. திரு. ஜி. பழனிசாமி.

[1992 மார்ச் 23

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்காக பிற்படுத்தப்பட்டோர் வளர்ச்சிக்காக அதிக அளவில் சிறு தொழில்களுக்கு பண முதலீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன் பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 36,93,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் முதலியோருடைய துறையின் கீழ் இந்த மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு ஒன்று அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலும் தமிழிலும் வைக்கப்பட்டிருக்கிற அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளில், தமிழிலே இருக்கின்ற அந்தக் குறிப்பை நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி, அதைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துகள் தெரிவிக்கிற பொழுது அந்தக் கருத்துக்களையொட்டி இறுதியில் அரசின் சார்பிலே விளக்கங்களை அளிப்பதற்கு விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உ. பலராமன்.

திரு. உ. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத்துறைக்காக இந்த மானியக் கோரிக்கை எண் 32-ன் மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

703-704-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



1992 மார்ச் 23] [திரு. உ. பலராமன்]

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், கல்வியாலும், சமூக அந்தஸ்தாலும் பிற்படுத்தப்பட்டோர் என்கிற விளக்கத்தோடு தொடங்குகின்ற இந்த உரையில் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை செவ்வனே பிரித்து அளிக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் முடிந்த அளவு ஒவ்வொரு ஆட்சியும் இதனுடைய தொகையைக் குறைந்தபட்சம் அதிகப்படுத்தி வந்திருக்கின்றன. அந்தவகையில் இந்த ஆட்சியும் அதைச் செய்தது கண்டு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–05

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பல திட்டங்களை அறிவித்திருந்தாலும் சிலவற்றை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

படிப்புதவித் தொகைகள் என்கிற தலைப்பின் கீழ் வருகிற இடங்களிலெல்லாம் சென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அளிக்கப்பட்ட பெற்றோர் வருமானம் 12,000 என்று இருப்பதை 24,000 ஆக உயர்த்துவது சாலப் பொருந்தும் என்று நாவ் கருதுகிறேன் காலநிலைமைக்கேற்றவாறு

மேலும், இலவசக் கல்வி என்கிற தலைப்பில் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழில் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்வி அளிக்கிறபொழுது, அந்த நிபந்தனையும் 12,000 பெற்றோர் வரவு என்று இருப்பதை 24,000 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவ, மாணவியர்களுக்காகப் பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிற இற்த ஆட்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவு மானியம் என்கிற தலைப்பில், தனியாரால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட 39, மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 70 வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு அளிக்கப்படுகிற தொகை மிகக் குறைவு. ரூ. 70 என்று இருப்பதை நாள் ஒன்றுக்கு ரூ. 10 என்கிற வகையில் 300 ஆக மாற்றுவது நலமாக இருக்கும் என்கிற என் வேண்டுகோளோடு, அதிலும் பெற்றோர் வருமானம் ரூ. 12,000 என்று இருப்பதை ரூ. 24,000 ஆக உயர்த்தித் தர வேண்டுகிறேன்.

ஊக்கப்படுத்துகிற வகையில் மாணவர்களுக்குப் பரிசுத் தொகைகள் அளிக்கப்படுவதை பாராட்டுகிறேன்.

அரசு மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கு அந்தப் பிள்ளைகளுக்கும் அதே ரூ. 12,000 என்று வருகிற இடத்தில் ரூ. 24,000 ஆக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். புதிய விடுதிகள் தொடங்கப்படும் என்கிறஅறிவிப்பை நான் வரவேற்கிறேன்.

விடுதிகள் சரியாக இல்லை. பல அடிப்படை வசதிகள் இல்லை என்கிற பல்வேறு குறைபாடுகளை என்னிடத்திலே தெரிவித்திருந்தார்கள். ஆனால் இங்கே உரையிலேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி இத்துறையின் கீழ் நடத்தப்பட்டு வரும் அனைத்து விடுதிகளிலும், தண்ணீர், மின்சாரம், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை தனி அலுவலர் ஒருவர் நேரில் சென்று விரிவாக ஆய்வு செய்துள்ளார் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறைபாடுகள் நீக்கப்படுவதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஆசிரியர் பிரதிநிதிகளையும், பெற்றோர் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒரு பராமரிப்பு—சீரமைப்புக் குழுவை நிறுவுவதற்காக அளிக்கப்பட்டிருக்கிற திட்டத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு நூலகங்கள் ஏற்படுத்தித் தருவதை நான் வரவேற்கிறேன்.

முற்பகல் 11–10

இன்னொரு இடத்தில் ,விடுதியில் தங்கிப் படிக்கிற மாணவ மாணவியருக்கு அளிக்கப்படுகிற வசதிகளையும், பண வசதியையும் கொஞ்சம் அதிகப்படுத்துவது நியாயமாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொண்டு, தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல் என்ற தலைப்பில் முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர் மற்றும் போயர்களுக்கு முறையே முடி திருத்தும் கருவிகள் அடங்கிய பெட்டிகள், துணி தேய்ப்புப் பெட்டிகள், கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன; தொழில் கருவிகள், ஆண்டு வருமானம் ரூ. 6,400 இருந்தால் தான், இலவசமாகக் கொடுப்பதற்குத் தகுதியுள்ளவர்கள் என்றிருப்பதை, ஆண்டு வருமானம் ரூ. 6,400 என்பதற்குப் பதிலாக ரூ. 15,000 ஆக உயர்த்தினால் சாலப் பொருத்தமாக இருக்குமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், அவர்களுக்கு அளிக்கின்ற அந்த வசதிகளைப் பெறுகிறவர்கள் ஒட்டு மொத்தமாக 5 ஆயிரம் பேர்; அதை இரட்டிப்பாக ஆக்கினால்,என்னுடைய பாராட்டுதலை அதற்காக



நான் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருப்பேன். இப்படி சலவைத் தொழிலாளர்களுக்கும், சலவையகம் வைத்திருப்பவர்க்கும், முடி திருத்தகம் வைத்திருப்பவர்க்கும், நடமாடும் சலவையகம் வைத்திருப்பவர்க்கும் கொடுக்கப்படுகிற தொகைகள் ரூ. 5,000 அதில், அரசு மான்யம் ரூ. 1,500 என்றிருப்பது, இந்தக் காலக் கட்டத்தில் அவர்களுக்கு மிகக் குறைந்தத் தொகையாகும். பெரும் நகரங்களில் அவர்கள் ஒரு கடையை எடுத்து நடத்துவதற்கு அது போதுமானதாக இல்லை. அந்தவகையில், கடன் தொகையை ரூ. 50 ஆயிரமாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சலவையாளர்களுக்கும், முடி திருத்துவோர்க்கும் அரசு கட்டுகிற வணிக வளாகத்தில் அவர்களுக்கு ஒரு இடம் தனியாக ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரில், சலவையாளர்கள் துணி துவைக்க பல பகுதிகளில் நல்ல தண்ணீர் வசதி இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சில இடங்களில் அவர்கள் கூவத்தில் வருகிற அந்த துர்நாற்றம் அடிக்கும் தண்ணீரிலேயே துணி துவைக்கிறார்கள். அதனால், தோல் வியாதிதான் அதிகம் வருகிறது என்பதை இந்த அவைக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இதுவரை உலகத்தில் முதல் தொழில் என்று சொல்லப்படுகிற மண்பாண்டத் தொழிலுக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்திருக்கிறார்கள். கையிலே சுற்றுகிற அந்தச் சக்கரத்திற்குப் பதிலாக மோட்டார் பொருத்திச் சுற்றுகிற ஒரு சக்கரமாக அமைப்பதற்கு ரூ. 5 ஆயிரம் விலையில் அவர்களுக்கு ஒரு புதிய திட்டத்தை அறிவித்ததற்காக அவர்கள் சார்பிலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வரவேற்கிறேன்.

அதேபோல், இதரத் திட்டங்கள் என்கிற தலைப்பில் கைத்தறித்துறை, கதர் மற்றும் கிராமத் தொழில் துறை, மீன் வளர்ச்சித் துறை, ஊரக வளர்ச்சித் துறை என்ற பல்வேறு அரசுத் துறைகளில் நல்ல திட்டங்களினால், பெரும்பாலோர் பிற்படுத்தப்பட்டோரே பயனடைந்தாலும், இதுவரை எந்த பயனும் அடையாத இனத்தவர், பிற்படுத்தப்பட்டோரிலும், மிகப் பிற்படுத்தப்பட்டோரிலும் உண்டு. அம்மாதிரி இனத்தவரை அடையாளம் காண, விரிவானதோர் ஆய்வு இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது என்ற ஒரு அறிவிப்பை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில சமூகங்களுக்கு இந்தத் தமிழகத்தில் ஒரு அரசு ஒன்று இருப்பது என்றுகூடத் தெரியாத நிலையில், அப்படிப்பட்ட சமூகங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி மக்களால் ஒதுக்கப்படுகிறார்கள் என்பதைவிட, அவர்கள் மலைப் பகுதியிலே மற்ற பகுதிகளிலே ஒதுங்கி வாழ்கிறார்கள் என்பதுதான் உண்மை. அவர்களைக் கண்டு, அறிந்து, இந்த ஆட்சி, இந்தத் திட்டத்தை நடைமுறைப்

[திரு. உ. பலராமன்] [1992 மார்ச் 23

படுத்தவும், அவர்களுடைய எண்ணிக்கையை சரியான முறையிலே புள்ளி விவரம் எடுக்கவும் முற்படுவது கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

முற்பகல்—11-15

அதேவேளையில் அவர்களிடத்திலே இன்னொரு வேலையையும் தரலாம். ஜாதிகள் என்று வருகிறபோது, அவர்கள் கொடுக்கிற எண்ணிக்கை என்பது தமிழகத்தினுடைய மக்கட்தொகையை விட பல மடங்கு இருக்கிறது என்கிற குறைபாடு இருக்கிறது. அந்தக் குறைபாட்டை நீக்க வேண்டுமானால் இப்போது எடுக்கப்படுகிற இந்தப் புள்ளி விவரங்களோடு தமிழகம் எங்கும் ஜாதிவாரியான புள்ளிவிவரங்களையும் எடுப்பதற்கு இதையெல்லாம் பயன்படுத்தலாம் என்ற என்னுடைய யோசனையைத் தெரிவித்து, அனைத்திந்திய பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் என்று வருகிறபோது, மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் 250 ரூபாய்க்கு மேற்படாத வகையில் உணவுக் கட்டணமும், இலவசமாகத் தங்க இட வசதியும் அளிக்க அரசு வகை செய்துள்ளது என்கிற அறிவிப்பில், அந்த 250 ரூபாய் என்றிருப்பதை 600 ரூபாயாக உயர்த்தித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அதைத் தொடர்ந்து வருகின்ற இடத்தில் பெற்றோரது வருமானம் ரூ.12,000 என்றிருப்பதை ரூ.24,000 ஆக உயர்த்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அளிக்கப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களில் மத்திய அரசு நிதி உதவி மூலமாகவும், சில தனியார் கல்லூரிகளின் வழியாக சிறப்புப் பயிற்சித் திட்டங்களைப் பல்வேறு மாநிலங்கள் நடத்தி வருகின்றன. இம் மாநிலத்தில் வாழும் சிறுபான்மை இன மாணவ, மாணவியரும் பயன்பெறும் வகையில் இவ்வரசு மத்திய அரசினை அணுகி. தனிப் பயிற்சி நிலையங்களை அமைத்திட வழிவகுத்துள்ளது, சென்னை புதுக் கல்லூரியிலும், ஜஸ்டிஸ் பஷீர் அகமது சையத் பெண்கள் கல்லூரியிலும் மத்திய அரசின் உதவியால் இங்கே அமைக்கப்படுகிறது என்கிற செய்தியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து கரையோர மீன்பிடி மீனவர்களுக்கு உள்ள வசதிகள் உள்நாட்டு மீனவர்களுக்கு கிடைப்பதில்லை என்கிற குறைபாடு இருக்கிறது ; அந்தக் குறைபாட்டைப் போக்குகிற வகையில் அவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கியிருக்கிறீர்கள். அவர்களுக்கு ஊர்களில் உள்ள குளங்கள் ஏரிகள் போன்ற பகுதிகளில் மீன் பிடிக்கின்ற மொத்த உரிமையை வழங்கவும், தனியாக, புதியதாக, குளங்களை ஏற்படுத்தி, இறால் மீன் வளர்ப்பு போன்றவற்றை செய்து வருவதற்காக அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1992 மார்ச் 23] [திரு. உ. பலராமன்]

அதேபோல், மிகவும் பிற்படுத்தப்பட்டோரான வன்னியர்களுடைய கோரிக்கையில், குறிப்பாக, செங்கல்வராய நாயக்கர், கோவிந்த நாயக்கர் அவர்களுடைய உயில்களில் குறிப்பிட்ட அந்தச் சொத்துக்கள் பச்சையப்பர் நிர்வாகத்தின் கீழ் இருந்தாலும், அவர்களுடைய உயிலின்படி தங்களுடைய சமூகத்தவருக்கு இது உதவ வேண்டும் என்கிற உணர்வோடு இருந்த அந்தக் கருத்துக்களைத் தமிழக அரசு ஒரு நேரத்தில் செய்ய முற்பட்டபோதும் அது மாறுபட்டு, தனிக் குழுவாக அமைப்பதற்கு முயற்சித்தபோதும் மாறுபட்டு, யாருடைய தூண்டுதலினாலோ அது சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டு, இது வரை ஒரு தனி குழுவாக இருந்து நிர்வகிக்கப்பட வேண்டுமென்கிற உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கல்வி நிறுவனம் கல்லூரியாக மாறுவதற்கு, அந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தை கல்லூரியாக மாற்றுவதற்கு மறைந்த அவர்களுடைய விருப்பப்படியே தனி டிரஸ்டாக அறிவித்து, அந்த டிரஸ்டுக்கு அவர்கள் விரும்பிய சமூகத்தவர்களையே அந்த உயிலில் உளளபடியே அந்த சமூகத்தவர்களுக்கே வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்த பிற்பட்டோர் என்று வருகிறபோது தமிழகத்தில் 80 சதவீத மக்கள் இருப்பார்கள். முழுமையாக எல்லா காலங்களிலும், எல்லா பலன்களையும் அவர்கள் அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அந்த வகையில் இந்த அரசு அவர்களுக்காக தனி கவனம் செலுத்தி கைதூக்கி விடுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள நரிக்குறவர், போயர், ஒட்டர் ஆகியவர்களை எல்லாம் மலைவாழ் மக்களோடு சேர்க்க வேண்டுமென்று பரிந்துரைக்க வேண்டுகிறேன். ஏற்கெனவே நரிக்குறவர், சலவையாளர், மீனவர், நாவிதர் ஆகிய இந்த நால்வரையும் சேர்க்கவேண்டும் என்று மண்டல் கமிஷன் பரிந்துரைத்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். தமிழக அரசும் ஏற்கெனவே நரிக்குறவர்களையும் மலைவாழ் மக்களோடு சேர்த்து நிர்வகிக்க வேண்டும் என்பதற்காகப் பரிந்துரைத்தும் இதுவரையில் அது ஒரு உத்தரவாக வெளிவரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, இவ்வாறு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிற பல சமூகங்களை பொறுத்தவரையில் அந்த சமூகத்திலே உள்ள உட்பிரிவுகள் சில விட்டுப் போய்விடுகின்றன. அந்த உட்பிரிவில் உள்ளவர்களுக்கு தாங்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது கூட தெரியாமல் இருக்கிறது. அவர்களுக்கு உதவுகின்ற வகையில் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11-20

யோகீஸ்வரா என்று மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறது. அதனுடைய உட்பிரிவில் ஆண்டி, பண்டாரம்

என்று தனியாக இருந்து, அந்த இரண்டையும் சேர்த்து ஆண்டிப் பண்டாரம் என்று மாற்றியிருக்கிறார்கள். அந்தப் பிரிவுகளில் வருகிறவர்களில் ஒரு பிரிவினர் வீர சைவர். அவர்கள் உட்பிரிவாக இருந்தாலும் அவர்களைத் தனியாக இதுவரையில் பாவித்து வந்திருக்கிறார்கள். இன்று விழிப்பு பெற்று அவர்கள் சாதிச் சான்றிதழ் பெற வட்டாட்சியரிடத்திலே போகிறபோது அவர்கள் மறுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள ஆண்டிப்பண்டாரம் என்று வழங்குகின்ற அவர்களுடைய சாதிச் சான்றிதழில் ஒரு பகுதியில் வீர சைவர் என்று அடைப்புக் குறிகளுக்குள் போட்டு அவர்களுக்கு வழங்கலாம். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., வங்கி கமிஷன். இரயில்வே போர்டு ஆகியவற்றிற்காகப் பயிற்சி பெறும் மாணவர்களின் உதவித் தொகையை ஏற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டு இருக்கிறேன். அவ்வாறு பயிற்சி பெற்று வெளியே வந்தவர்கள் எந்தெந்த இடங்களில் எந்தெந்தத் துறைகளில் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்கிற கணக்கு தெரியவில்லை என்று ஆதங்கப்படுகிறார்கள். கல்லூரிகள், கழகங்கள், மாநகராட்சிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் ஆகிய அத்தனையிலும் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளை இனவாரியாக அறிவித்தால் நலமாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக இந்த பிற்படுத்தப்பட்டோர் என்பவர்களுக்காக தொன்றுதொட்டு, கம்யூனல் ஜீ.ஓ.,-வில் தொடங்கி, பெரியாரும், பேரறிஞர் பெருமகனாரும் இதற்காக உழைத்ததிலிருந்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கிற பட்டியலைத் தனியாக அறிவித்ததிலிருந்து, எம்.ஜி.ஆர். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலுக்காக, பிற்படுத்தப்பட்டோருக்காக துணிந்து 50 சதவீதம் என்று அறிவித்ததிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலக் கூட்டமைப்பின் சார்பில் தொடர்ந்து வாதிட்டு வந்ததன் விளைவாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினருக்கு 20 சதவீதம் தனி விழுக்காடு செய்தது வரையில் அவர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற, சீர் மரபினரைத் தனியாகப் பிரித்து இன்னும் சில இனங்களை அதோடு சேர்த்து அவர்களுக்குத் தனி விழுக்காடாக ஒதுக்கித் தரவேண்டும். மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு தனி விழுக்காடும், சீர் மரபினரோடு சில சமூகங்களைச் சேர்த்து, குறிப்பாக இன்றைக்கு அரசு என்றால் என்னவென்றே தெரியாமல் அப்பாவியாக இருக்கிற மக்கள், அறியாதவர்களாக இருக்கிற மக்கள் மலைகளில் வாழ்ந்துகொண்டிருக்கிற மக்கள் ஆகிய இவர்களையும் எல்லாம் சேர்த்து அவர்களுக்கு ஒருதனி விழுக்காட்டை, சீர்மரபினருக்காகவும்



ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்பு நான் சொன்ன அவர்கள் எல்லாம் ஒவ்வொரு காலத்திலும் செய்து இருக்கின்ற மாற்றத்தின் விளைவாக இந்த அரசும் தன்னுடைய கைங்கரியமாக எம்.பி.சி.-க்கும் மற்றவர்களுக்கும் தனித்தனியாக ஒதுக்கீடுகளை வழங்குவது சிறப்பாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன், இறுதியாக இங்கே ஒரு பிரச்சினையை நான் நினைவுபடுத்துகிறேன், ஒரு சின்ன விஷயம்.

பிற்பகல் 11.25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவையினுடைய விதிப்படி பத்திரிகையைத் தூக்கிப் பிடித்துக் காண்பிப்பது எல்லாம் அவைத் தலைவரின் அனுமதி பெற்றுச் செய்ய வேண்டிய விஷயம். ஏதாவது செய்திகளைக் குறிப்பிடலாம். ஆனால் இம்மாதிரிப் பத்திரிகையை விரிவாகக் காண்பித்துப் பேசுவது என்பது மரபல்ல.

<u>திரு, உ. பலராமன் :</u> **

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மானியக் கோரிக்கைக்குத் தொடர்பு இல்லாமல் பேசுகிறீர்கள். ஏதாவது தொடர்பு இருக்க வேண்டும். ஏதாவது தொகுதியில் உள்ள சில பிரச்சினைகளை இந்தமாதிரி மானியக் கோரிக்கையிலே சேர்த்துச்சொல்வது உண்டுதான். ஆனால் இன்னொரு அரசியல் பிரச்சினைக்குப் போகிறபோது மானியக் கோரிக்கைக்கும் அதற்கும் தொடர்பு இருக்க வேண்டும். ஒருவேளை பிற்பட்டோர் நல மானியம் தொடர்பாக ஒரு அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார் என்று சொல்வது வேறு விஷயம்** என்பது பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கையின் கீழ் வராது, எனவே, வேறு பிரச்சினை இருந்தால் சொல்லுங்கள்,

<u>திரு. உ. பலராமன் :</u> **

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து சம்பந்தம் இல்லாத பிரச்சினைக்குப் போகாதீர்கள். இதற்கும் மானியக் கோரிக்கைக்கும் என்ன சம்பந்தம்? பிற்படுத்தப்பட்டோர் நல மானியக் கோரிக்கைகள்மீது பேசுகிறபோது ஒரு பத்திரிகையைத் திறந்தீர்கள்** சம்பந்தம் இல்லாத பிரச்சினை வேண்டாம். இதெல்லாம் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1992 மார்ச் 23

திரு. உ. பலராமன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு வகையில் அதைக் கொண்டுவரலாம். இதிலே அது வராது. அதை நான் அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன். எனவே வேறு வழியில் கொண்டு வாருங்கள். அடுத்து திரு. மா. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துக்களைக் கூற நான் முன்வருகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளைப் படிக்கும் போது தங்களிடத்தில் அனுமதி பெற்றுப் படிக்க வேண்டும் என்பது சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் பேசிய விஷயங்கள் பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு விரோதமானது. நடைமுறைக்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைக்குத் தொடர்பு இல்லாமல் இன்னொரு உறுப்பினர் பேசி நம்முடைய பிரச்சினையிலே இருந்து விலகி எங்கோ போய்க் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதற்காகத்தான் சொன்னேன். எனவே அந்தப் பிரச்சினையை அவைக் குறிப்பிலே இருந்து நான் நீக்கி இருக்கிறேன். அவைக் குறிப்பிலே இருந்து நீக்கியதை (குறுக்கீடு) மறுபடியும் எப்படி அதிலே நீங்கள்.......

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிரச்சினைக்கு உள்ளே செல்லவில்லை. அவைக்குறிப்பிலே இருந்து நீக்குவதற்குப் பதிலாக அது அவைக் குறிப்பிலே இடம் பெறலாம். அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் அதுவும் இடம் பெறப் போகிறது. இரண்டும் அவைக் குறிப்பிலே இருந்துவிட்டுப் போகட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு இருக்கிற பிரச்சினை என்னவென்றால் சம்பந்தம் இல்லாத அரசியல் பிரச்சினையைக் மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1992 மார்ச் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

போது கொண்டுவந்து விடுவது நன்றாக இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். பொது விவாதம் நடக்கிறபோது, கேள்வி நேரம் முடிந்து, அதன் பின்னர் எழுப்புகிற பிரச்சினையில் அமைச்சர்கள் பதில் சொல்வது என்பது வேறு. மானியக் கோரிக்கையின் போது தொடர்பில்லாமல் பேசியதை அவைக் குறிப்பிலே இருக்க வைத்து இன்னொரு உறுப்பினர் அதற்குப் பதில் சொல்லி, இப்படி அந்த விவாதங்கள் நீண்டு கொண்டே போய் மானியக் கோரிக்கை விவாதத்திற்குரிய நிலையிலே இருந்து திசை திரும்பிச் செல்வது நல்லதல்ல என்றுதான் நீக்கி இருக்கிறேன். அது பாராளுமன்ற மரபுக்கு முரணானது என்பதற்காக நீக்கவில்லை. அதிலே வாதப் பிரதிவாதங்கள் வந்து, அதன் காரணமாக இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு சம்பந்தம் இல்லாத ஒரு பிரச்சினையிலே நாம் இங்கே வாதப் பிரதிவாதங்களை வளர்க்க வேண்டாம் என்பதற்காகத்தான் சொன்னேன்.

முற்பகல் 11-30

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: ஒரே ஒரு நிமிடத்திலே முடித்து விடுகிறேன். காலையிலேகூட பிரதமர் அவர்கள் எழுதிய கடிதத்தைக் குறித்து முதல்வர் அவர்களே நன்றி தெரிவித்துப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட அதைச் சுட்டிக் காட்டி, நன்றி தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, சங்கடத்திற்கே இடமில்லை. உறுப்பினர் அவர்கள் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தினால் ஒரே வார்த்தையில் யாராவது ஒரு அமைச்சர் அல்லது முன்னாலே இருப்பவர்களில் யாராவது ஒருவர் பதில் சொல்கிற நேரத்தில் அதுவும் பதிவாகி, அந்தப் பிரச்சினை அதோடு முடிந்து விடும். நான் அவர்களுடைய உணர்வைத்தான் வெளிப்படுத்தினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உணர்வுகளைச் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் எழுப்புவது எப்படி நியாயமாக இருக்க முடியும்? இன்னொரு உறுப்பினர் அதிலே பேசுவார். அவர் சொல்கிற விமரிசனத்திற்கு இவர் பதில் விமர்சனம் செய்வார். நம்முடைய பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கையிலிருந்து விவாதம் வேறு எங்கோ செல்லும் என்பதற்காகத்தான் வேண்டாமென்று சொன்னேன். அவர்களுடைய உணர்வை எழுப்புவதற்கு எல்லா உரிமையும் உண்டு. அது பிற்பட்டோர் நலக் கோரிக்கையின்மீது வேண்டாமென்றுதான் சொன்னேன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் ஒரு பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக் கொண்டு இங்கே பேச முற்பட்டபோது, தாங்கள் மானியக் கோரிக்கையி

தொடர்பு இல்லாத வேறு அரசியல் கருத்துக்களை இப்போது தெரிவிப்பது தேவையில்லை என்கின்ற ஒரு அறிவுரையை வழங்கி, அது அவைக் குறிப்பிலே இடம் பெற 'வேண்டாமென்று தெரிவித்திருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவது தவறு அல்ல. அப்படி உறுப்பினர் அந்த உணர்வை வெளிப்படுத்துகிறபோது, யாராவது ஒரு அமைச்சர் அதற்குப் பதில் அளித்தாலும் அதுவும் அதிலே 'இடம் பெறும். அது செய்தியாக வெளிவரும் என்று எல்லாம் குறிப்பிட்டார்கள். நீங்கள் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறீர்கள். இந்தச் சபையில் மரபுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன, விதிகள் பின்பற்றப்படுகின்றன. பொதுப் பிரச்சினைகளைப் பேசுவதற்கு என்று சில முறைகள் இருக்கின்றன. சில பொருள்களின்மீது எதை வேண்டுமானாலும் பேசுவதற்கு அனுமதியும் இருக்கிறது. மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் என்பதே. குறிப்பிட்ட பிரச்சினைகள்மீது எழுப்புவதற்காகத் தான் ஒதுக்கப்படுகிறது. அதைத்தான் நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிடுகிற இந்தச் செய்தி சரியானதுதானா?**

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவுசெய்து அந்தச் செய்தியைச் சொல்ல வேண்டாம். அந்தச் செய்தியை குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறேன். அந்தச் செய்தி இங்கே வேண்டாம்.

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:</u> அதனாலே அது சரியான செய்தியா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளாமலே இந்த அவையில் அதை விவாதிப்பதும் பொருத்தமாக இருக்காது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்ட செய்தி, அவர்களுடைய மனதைப் புண்படுத்துவதாக சொன்னார்கள். அதுபோல இரு தரப்பிலுமே கூட்டங்களிலே பேசுகிறார்கள். பத்திரிகையிலும் எழுதப்படுகின்ற நிலைமை எல்லாம் இருந்து வருகிறது. இது எங்களைப் போன்றவர்களுக்கு வருத்தத்தைத் தரக்கூடிய நிலைதான் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லி, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சிக்கும் இருக்கின்ற உறவு நல்லபடியாக இருக்கிறது, நல்லபடியாகத் தொடர வேண்டும் என்பதைத்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் விரும்புகிறது. அதைப் பாதிக்கின்ற அளவுக்கு எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களானாலும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சொல்லாமல் இருப்பது, அதைப்பற்றி விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது என்று நாங்கள் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. ம. சின்னசாமி.

<u>திரு. ம. சின்னசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக்கோரிக்கையின் மீது எனது கருத்தைக் கூற முன்வருகிறேன். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சொன்னார் திருவள்ளுவர். சமூகத்தில் இருப்பவன், இல்லாதவன் (haves, and have not) என்பது இருக்கக்கூடாது என்பதுதான் அரசினுடைய கடமை. தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூக நீதி பெற வேண்டும் என்பதற்காக பல்லாண்டுக் காலம் பாடுபட்டார்கள் என்பது, நாட்டு மக்கள் அறிந்த ஒன்று. அவர்களுடைய வழியில் இன்றைக்கு நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிற்படுத்தப்பட்டோருடைய பாதுகாவலனாக இருந்து, அவர்கள் நல் வாழ்வுக்கும், மேம்பாட்டுக்கும் தன்னுடைய அரசை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11.35

பிற்படுத்தப்பட்ட மக்களுக்ககாந ஙங்கள் தான் பாடுபடுகிறோம் என்று சொல்கிற அரசியல் கட்சிகள் எல்லாம் இந்த நாட்டிலே இருக்கின்றபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நிலைமையை அறிந்து, அவர்களுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டும் என்கிற 'மண்டல் கமிஷன்' பரிந்துரையில் 27 சதவிகிதம் தான் மத்திய அரசு ஒதுக்கி அறிவித்தது, அப்போது இங்கே இருக்கிற சில அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம், 'பார்த்தீர்களா. பார்த்தீர்களா, மண்டல கமிஷன் வெற்றி' என்று சொல்லி. வெற்றி விழா கொண்டாடினார்கள், ஆனால் அன்றைக்கு நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 27 சதம் போதாது. அது 50 சதமாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர்த்தப்பட வேண்டுமென்று பிற்படுத்தபட்ட மக்களுக்காக முதல் முழக்கம் இட்டார்கள், முதல் உரிமைக் குரல் எழுப்பினார்கள், என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்,

கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதம் வேண்டுமென்று குரல் கொடுத்த ஒரே தலைவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி என்பதை இந்த நாடு இன்றைக்கு அறியும், அவர்கள் 50 சதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசுத் துறையிலும். மத்திய அரசு நிறுவனங்களிலும். கல்வி நிலையங்களிலும் அமல்படுத்தப்பட வேண்டுமென்று தமிழகத்து மக்கள் மத்தியிலே கோரிக்கை விட்டபோது. மக்கள் அதை ஆரவாரத்தோடு வரவேற்றார்கள், நான் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன். நான் சாமானியன். நான் தாழ்த்தப்பட்டவருடைய சம்பந்தி என்றெல்லாம் அரசியல் வியாபாரம் செய்து கொண்டிருந்த சில அரசியல் தலைவர்கள் எல்லாம் புரட்சித் தலைவி அவர்களின் உரிமைக் குரலைக் கேட்டபிறகு கடையைக் கட்டிக் கொண்டு போன கதையை இன்றைக்கு நாடு நன்கு அறியும், அந்த வகையில் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் முற்படுத்தப்பட்ட மக்களோடு ஒன்றாகக் கல்வித் துறையிலும், வேலை வாய்ப்பிலும் வர வேண்டுமென்று இன்றைக்குப் பல சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள், இந்த நேரத்தில் நான் ஒரு கோரிக்கையை மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரவர்கள் மூலமாக இந்த அரசுக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், கல்வியிலும். வேலை வாய்ப்பிலும் பிற்பட்ட நிலையிலே இருக்கிற கொங்கு வேளாளர் கவுண்ட சமுதாயத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து. அவர்களுக்கு மிகவும் பிற்பட்டோருக்கு அளிக்கின்ற சலுகைகளை அளிக்க வேண்டுமென்று. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அடுத்து, ஐ,ஏ,எஸ், ஐ,பி,எஸ், தேர்வுகளில் பிற்பட்டோர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது, மற்ற மாநிலத்தாரோடு போட்டி போடக் கூடிய அளவில் இன்றைக்குத் தமிழகம் பின்னோக்கி வருவது நமக்கெல்லாம் கவலை அளிக்கிறது, அதற்குத் தனிப் பயிற்சி கொடுக்கப்பட்டு இருப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதை இன்னும் விரைவுபடுத்தி, முனைப்போடு அதற்குண்டான காரியங்கலை ஆற்றி, நம்முடைய மாணவர்கள் அகில இந்தியத் தேர்விலே மற்ற மாநிலங்களோடு போட்டி போட்டு, அதிகமாக வர வேண்டுமென்பதில் இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல நம்முடைய மாநிலத்தில் நடக்கிற குருப்-1 சர்வீஸ் தேர்வுகளிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிக அளவில் வெற்றி பெறுவதற்கான பயிற்சி நிலையங்களையும் அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,



அடுத்து சில சமூகங்கள் பிற்பட்டோர் பட்டியலில் இருக்கின்றதா அல்லது தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இருக்கின்றதா என்பது குழப்பமாக இருக்கிறது, உதாரணமாக காட்டு நாயகர் என்ற ஜாதி இருக்கிறது, எங்களுடைய திருச்சி மாவட்டத்தில் குளித்தலை வட்டாரத்திலும். கரூர் வட்டாரத்திலும் காட்டு நாயகர் என்ற ஒரு இனம் இருக்கிறது, அவர்கள் அங்கே பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள், வேறு இடங்களில் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக அறிவித்திருக்கிறார்கள். காட்டு நாயகர் சமுதாயத்தைச் சேர்ந்த சில பேர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி தாழ்த்தப்பட்டோர் என்று சலுகைகளை வாங்கும்போது அதிலே சட்டச் சிக்கல்கள் வந்து விடுகிறது. எனவே காட்டு நாயகர் சமூகத்தை எல்லா இடங்களிலும் ஒன்றாகப் பாவித்து, அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல உடுக்கை அடிக்கிற ஒரு இனம் இருக்கிறது. அவர்களை எங்கள் கரூர் பகுதியிலும், ஈரோடு பகுதியிலும், பம்பைக்காரர்கள் என்று சொல்லுவார்கள், அவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்களா? தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்களா என்பது இன்றைக்கு தாலுக்கா அளவில் விசாரித்தால் குழப்பமாக இருக்கிறது,

முற்பகல் 11–40

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் கூட என்னுடைய தொகுதியில் உள்ள பம்பைக்காரர்களுக்கு வீடுகள் வேண்டுமென்று கேட்டபோது, தாசில்தார் போன்றவர்களுக்கு குழப்பம் ஏற்பட்டது, ஆகவே அரசு அதைக் கவனத்துடன் பரிசீலித்து. அந்த பம்பைக்கார சாதியினரை பிற்பட்ட வகுப்பினரில் இருக்கிறார்களா, தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் இருக்கிறார்களா என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், அதைப்போல, நறிக்குறவர்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைவிட மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று வீடுகள் கிடையாது, நாடோடிகளாக இன்றைக்கும் இருக்கிறார்கள், அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு எந்த அளவுக்கு சலுகைகள் வழங்கப்படுகிறதோ அந்த அளவுக்கு நறிக்குறவர்களுக்கும். கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

என்னுடைய தொகுதியில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி ஒன்று கரூருக்கு அருகில் 2 கிலோ மீட்டரில் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது, கட்டிடத்தின் உரிமையாளர் அதை காலி செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்

கிறார், ஆகவே நம்முடைய அரசு. அந்த விடுதிக்கு தனியாக நில ஆர்ஜிதம் செய்து. அந்த பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்கான கட்டிடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன், அதைப்போலவே பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு என்று தனியாக விடுதி ஒன்றும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கையை வரவேற்று. பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்,

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> திரு, வே, தம்புசாமி,

*<u>திரு, வே. தம்புசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இங்கே கொண்டு வந்திருக்கின்ற பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், பொதுவாக பிற்பட்டோருக்கு என்று ஒதுக்கியிருக்கிற இட ஒதுக்கீட்டு அடிப்படையில் இதுவரையில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த விபர அறிக்கையில் சொல்லப்படவில்லை, பொதுவாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இட ஒதுக்கீட்டு அடிப்படையில் அவர்களுக்கு இதுவரையில் ஏற்பட்டு இருக்கிற காலியிடங்களை பூர்த்தி செய்யப்படவில்லை என்பது தான் எனக்குக் கிடைத்த தகவலாகும், ஆகவே இனியாவது அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இட ஒதுக்கீட்டு அடிப்படையில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது தனியார் தொழிற்சாலையாக இருந்தாலும், அவற்றிலும் இந்த விகிதாச்சார அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும், தனியார் போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் அவர்களுக்கும் இந்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலை அளிக்க அரசு ஏற்பாடு செய்ய முன் வர வேண்டும்.

பிற்பட்டவர்கள் என்று கூறுகிறபோது, அவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்க வேண்டும், ஒன்று கிராமப் புறத்தில் உள்ளவர்கள். இன்னொன்று கிராமப்புறத்திலேயே ஏதோ ஒரு தொழில் செய்து வாழ்பவர்கள். இப்போது வழங்கப்படுகிற சலுகைகள் நகர்ப்புறத்தில் தொழில் செய்து வாழ்பவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. ஆனால் கிராமப்புறத்தில் இருக்கிற பிற்பட்டவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைக்கு எந்த உத்தரவாதமும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. பொதுவாக அவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையினையும் இதிலே அளிக்கப்படவில்லை. அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்த



வேண்டுமென்று சொன்னால், இப்படி சாதாரண மக்களுக்கு. பொருளாதார வசதியற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்குகிற சட்டம் இருப்பதைப்போல. அவர்களுக்கும் எதிர் காலத்தில் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக அவர்களுக்கும் நிலம் வழங்குவதற்கு அரசு முன்வந்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் நகர்ப்புறத்தில் வாழ்பவர்கள் இன்னமும் மற்றவர்களுக்கு அடிமையாக இருக்கிற சூழ்நிலை தான் இருக்கிறது. அவர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகள் என்பது இன்றையதினம் அறிவித்திருப்பது போதாது என்பது தான் என்னுடைய கருத்து. குறிப்பாக சலவைத் தொழிலாளர்களாக இருந்தாலும், அவர்கள் தொழில் செய்வதற்கு வழங்கப்படுகின்ற கடன் ரூ 5,000 என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ரூ. 5,000-ஐ வைத்துக் கொண்டு நகர்ப்புறத்தில் சாதாரணமாக தொழில் செய்ய முடியாது.

முற்பகல் 11-45

சாதாரணமாக ஒரு சிறு இடத்தை நகரத்திலே பிடிக்க வேண்டுமென்றால் கூட பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்துத்தான் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தால் சுயமாக தொழில் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்தக் கடன்களை அதிகரித்து அவர்கள் சுயமாகத் தொழில் செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே முடி திருத்துவோர் தங்கள் தொழிலை நடத்த வேண்டுமென்றால், அவர்கள் ஒரு கடையை வைக்க வேண்டும். அதற்கு அவர்கள் அதிகமான வாடகையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தக் கடனை உயர்த்தி அளிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நடமாடும் சலைவைத் தொழில் நிலையமாக இருந்தாலும் அதற்கும் அறிவிக்கப்பட்டுள்ள இந்த இரண்டாயிரம் ரூபாய் போதாது. ஏறத்தாழ ஒரு நடமாடும் சிறு சைக்கிள் ரிக்ஷா போன்ற தள்ளு வண்டியை வாங்க வேண்டுமென்றால் கூட ரூபாய் ஐந்தாயிரம், ஆறாயிரம் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்தத் தொகை இரண்டாயிரத்தை உயர்த்தி அதிகமாக வழங்க அரசு முன்வர வேண்டும். அது மட்டுமல்லாமல் இந்த மாதிரி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எங்கெங்கே வாய்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் அவர்களுக்கு நீர் ஆதாரங்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு புறத்திலே நகரில் உள்ள குளங்களையும், கிராமங்களில் உள்ள குளங்களையும் அவர்களுக்கென்று

[திரு. வே. தம்புசாமி] [1992 மார்ச் 23

தனியாக ஒதுக்கி அதிலே அவர்கள் தங்கள் சலவைத் தொழிலை செய்ய உத்திரவாதம் கொடுக்க வேண்டும். அதே போன்று நகரத்திலும் சலவைத் தொழில் செய்வதற்கான நீர் ஆதாரங்கள் இல்லாத நிலையிலே அவர்கள் கோடைக் காலங்களில் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கென்று நீர் ஆதாரங்களை ஏற்படுத்தி சலவைத் தொழில் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். திருவாரூர் நகரில் சலவைத் தொட்டிகள் கட்டப்பட்டும் இது வரையில் வழங்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. அந்தத் தொட்டிகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதை அவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியிருப்புகளைப் பொறுத்த வரையில், கிராமப் புறமாக இருந்தாலும் சரி, நகர்ப் புறமாக இருந்தாலும் சரி, தனியார் குடியிருப்பு மனைகளில் தான் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். அதிகமானவர்கள் தனியார் வாடகைக் கட்டிடத்திலே தான் குடியிருக்கிறார்கள். அப்படி தனியார் இடத்திலே குடியிருக்கக்கூடிய அவர்களுக்கு குடியிருப்பு பட்டா வழங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, திருவாரூர் நகரில் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் 350-க்கு மேற்பட்டவர்கள் குடியிருக்கிறார்கள். கோவில்களுக்கு வாடகையைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க அரசு துரிதமாக நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று கிராமப் புறங்களில் இருக்கின்ற பிற்பட்டவர்கள் தனியார் நிலங்களில் குடியிருக்கிறார்கள். அப்படி தனியார் நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு உரிமையாளர் எப்போது காலி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறாரோ அப்போது கால் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதைப் போக்குதவற்கு, கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, குடியிருப்பு பட்டாக்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்விச் சலுகைகள். இன்றைய தினம் கல்விச் சலுகை வழங்கப்பட்டுள்ளதைப் பற்றி அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் குறைந்த கட்டிடங்கள் தான் சொந்தமான கட்டிடங்களாக இருக்கின்றன. அதிகமான கட்டிடங்கள் வாடகைக் கட்டிடங்களாகத் தான் இருக்கின்றன. வாடகைக் கட்டிடங்களில் உள்ள விடுதிகளில் போதுமான காற்று வசதி கிடையாது. சுகாதார வசதி கிடையாது, தண்ணீர் வசதி கிடையாது. சில இடங்களில் அப்படிப்பட்ட விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் குளிப்பதற்காக வெளியிடங்களுக்குச் செல்லக் கூடிய சூழ்நிலைகளைப் பார்க்கிறோம். அது போன்று சுகாதார வசதியற்ற விடுதிகளிலிருந்து மாற்றி சுகாதாரமான



1992 மார்ச் 23] [திரு.வே. தம்புசாமி]

விடுதிகளில் அமைக்க அரசு முன் வர வேண்டும். மேலும் விரைவாக சொந்த கட்டிடங்களை சுகாதார முறைப்படி உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று கல்விச் சலுகைகள் அளிக்க உள்ள வருமான வரம்பைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வருமான வரம்பை பதினைந்தாயிரம் ரூபாய் என்று உயர்த்துவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் அதே நேரத்தில் விடுதியில் இருக்கக் கூடிய மாணவர்களுக்கு அளிக்கப்படக்கூடிய உணவுக்காக மாதம் ரூபாய் 76 என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சராசரி பார்த்தால் ஏறத்தாழ ஒரு நாளைக்கு 2 ரூபாய் அந்த உணவுக்காக செலவழிக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய விலையேற்ற சூழ்நிலையில் வளர்ந்து வரக் கூடிய இளம் மாணவர்கள் அவர்களுக்குத் தேவையான ஆரோக்கியமான உணவுகளை அருந்துவதன் மூலமாகத் தான் திடகாத்திரமாக வளர முடியும். ஆகவே அவர்களுக்கு வழங்கப்படும் உணவுக்கான ரூ. 70-ஐ உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்டவர்கள் மற்றும் சீர்மரபினர் இன்றைய தினம் பல்வேறு கிராமங்களில் சிறு தொழில்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான உத்திரவாதமும் கிடையாது. அவர்கள் தொழில் செய்வதற்கு கடன் வழங்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மக்கள் குறிப்பிட்ட தொழில் என்று இல்லாமல் இன்றைய தினம் பல்வேறு தொழில்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பூ வியாபாரம் செய்கிறார்கள். தள்ளு வண்டியிலே வியாபாரம் செய்கிறார்கள். பழ வியாபாரம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட வியாபரங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட வியாபாரம் செய்யக் கூடியவர்களுக்கும் வங்கி மூலம் அரசு மானியத்துடன் அந்த கடன் வழங்குவதற்கான ஒரு உத்தரவாதம் ஏற்படச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த பிற்படுத்தப்பட்ட நலத்துறையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-50

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திருமதி ரமணி நல்லதம்பி.

<u>திருமதி ரமணி நல்லதம்பி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர்,

சீர்மரபினருக்கான மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகின்றேன். இந்த மானியத்தைப் பொறுத்தவரை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்காக இந்த அரசு 3 வகைகளிலே செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வி, பொருளாதார மேம்பாடு, இதர திட்டங்கள் என்று 3 வகைகளிலே செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு கல்வி ஒரு மிகப் பெரிய கருவியாக இருக்கின்ற காரணத்தினாலே இந்த கல்விக்கு பல்வகை சலுகைகளைத் தந்து பல்வகையிலே இந்த அரசு ஊக்குவிப்பதை நான் பாராட்டுகின்றேன். அவர்களுக்கு ஹாஸ்டல், பள்ளிகள், அவர்களுடைய இல்லங்கள் முதலியவற்றைப் பராமரிப்பதற்கும், அவைகளை உண்டாக்குவதற்கும் செலவு செய்கிறீர்கள். அதேமாதிரி சில கருவிகள், இலவச புத்தகங்கள், சீருடைகள், உணவுத் தொகை இப்படி பல்வேறு உதவிகளை நீங்கள் அவர்களுக்கு தருகின்றீர்கள். அதே மாதிரி மருத்துவக் கல்வி, என்ஜினியரிங் கல்வி, வெட்ரினரி டாக்டர், அக்கிரிகல்சுரல் கோர்ஸ், சட்டக் கல்வி போன்ற கல்வியைப் பயிலுவதற்கு இரண்டு நிபந்தனைகள் நீங்கள் கொடுத்து உள்ளீர்கள். அதாவது, ஆண்டு வருமானம் 12 ஆயிரத்திற்கு அதிகமாக இருக்கக் கூடாது; இன்னொன்று அந்தக் குடும்பத்தில் பட்டதாரியே இருக்கக் கூடாது என்று நிபந்தனைகள் கொடுத்து உள்ளீர்கள். 'அந்தக் குடும்பத்திலே பட்டதாரியே இருக்கக் கூடாது' என்று சொல்கின்ற அந்த அம்சத்தில் நடைமுறைச் சிக்கல் இருக்கின்றது. இதை எப்படி நிரூபிப்பது ? 'ஒரு மாணவனோ அல்லது ஒரு மாணவியோ என்னுடைய குடும்பத்தில் யாருமே அப்படிப் படிக்கவில்லை என்று ஒரு ஸ்டேட்மென்ட் கொடுப்பதற்கென்றே இதில் சில தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அதாவது ரெவினியூ அலுவலர்களை 'பிரைப்' பண்ணி, கன்வின்ஸ் பண்ணக்கூடிய ஆற்றல் மிக்கவர்கள் இருக்கிறார்கள். They have mastered to art of convircing the evenue People by bribe. அவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்று சொன்னால், ஏற்கெனவே கற்று தேர்ச்சி பெற்று கல்விக் கூடங்களிலோ அல்லது அரசு துறைகளிலோ வேலை செய்து கொண்டு இருக்கிற அந்த இனம் தான். அவர்கள் இலகுவாக அந்த தொகையைக் கொடுத்து அந்த சர்டிபிகேட்டை வாங்கி கல்வி கூடங்களிலே சேர்த்து விடுவார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, கல்வி அறிவே இல்லாத, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற இந்த மூன்று இனத்தையும் சேர்ந்த மக்களின் மாணவர்கள் படிக்க விரும்பும்போது அந்த வாய்ப்பு கிடைப்பது பாதிக்கப்படுகின்றது. ஆகவே, அதை நிவர்த்திக்கின்ற வகையிலே ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் 'இன்னாருடைய மகன் அல்லது மகள் இந்த விலாசத்தில் குடி இருப்பவர்கள் என்னுடைய குடும்பத்தில் கற்றவர்கள், பட்டதாரிகள் யாருமே இல்லை



என அறிவித்து இருக்கின்றார்கள்; இந்தச் சலுகையைப் பெற விழைகிறார்கள் என்று பஞ்சாயத்து போர்டிலும், பத்திரிக்கைகளிலும் நீங்கள் விளம்பரம் பண்ணினால், அந்த ஊரில் உள்ளவர்களுக்கு அவர்களைப் பற்றித் தெரிந்துவிடும். ஓகோ இன்னாருடைய மகன் இதற்கு முயற்சி பண்ணுகிறானா? இவனுடைய குடும்பத்தில் இன்னார் எல்லாம் படித்து இருக்கிறார்கள் என்று சொல்லி, அதைப் பற்றி அரசுக்குத் தகவல் தருவதற்கு வழி வகுக்கும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பக்கம் 7—ல், இலவசமாக கருவிகளை முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளி, போயர்கள் ஆகியவர்களுக்கு வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுடைய நிலை மிகவும் மோசமாகத் தான் காணப்படுகின்றது. இந்த சலவைத் தொழிலாளர்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் இருக்கிறார்கள். நாம் எல்லோரும் உடுத்தி அழுக்காக ஆக்குகின்ற இந்த அழுக்குத் துணிகளை எல்லாம் சலவை செய்து தருகிற இனத்தவரை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டியது மிக அவசியம். அது மாத்திரமல்லாமல், போயர்கள் என்று சொல்கின்ற கல் உடைப்பவர்களைப் பற்றியும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு கருவிகளைச் கொடுத்துவிடுகிறோம். அவர்கள் எதை, எங்கே போய் உடைப்பார்கள் ?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்கள் இப்போது மிகப் பிற்பட்டோர் பட்டியலிலேதான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திருமதி ரமணி நல்லதம்பி :</u> அமைச்சரின் தகவலுக்கு நன்றி, இந்த கல் உடைக்கும் கருவிகளை தருகின்றீர்கள், அவர்கள் எதை உடைப்பார்கள் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே, அங்கே இருக்கின்ற மலைகளில் பாறைகளில், நிலத்தில் இருப்பவைகளை எல்லாம் 99 வருட லீஸுக்கு எடுத்துவிட்டு, கல் உடைக்கும் தொழிலாளர்களுடைய உழைப்பிலே தங்களுடைய வருவாயைப் பெருக்கி பெரும் செல்வந்தர்களாக ஆகின்ற ஒரு சாரார் சமுதாயத்திலே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இந்த கல் உடைக்கும் தொழிலாளர்களுடைய ரத்தத்தை அட்டையைப் போல உறிஞ்சுகின்ற ஒட்டுண்ணியாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள், அந்தத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகக் கருதப்படுகின்றார்கள். அவர்கள் வெயிலிலேயும் இரவிலேயும்

எத்தனை மணி நேரம் உழைத்தாலும் கூட அவர்களுக்கு தகுந்த
ஊதியம் கிடையாது. இப்படிப்பட்ட நிலையிலே வாழ்கின்ற
அவர்களுக்கு ஒரு நிவாரணம் அளித்து, கொத்தடிமைத்தனத்
திலே இருந்து சுதந்திரம் வழங்குகின்ற ஒரு நிலை உருவாக
வேண்டும். எனக்குத் தெரியும், சில கல் குவாரிகளில் எல்லாம்
அவர்களுக்கு கொஞ்சம் அட்வான்ஸ் கொடுத்து கூப்பிட்டுக்
கொண்டு போய்விடுவார்கள், அவர்கள் தப்பி ஓடிவந்து விட்
டால், பிறகு அவர்களுடைய வீட்டிற்கு வந்து பிடித்துச் சென்று,
அடித்துச் சித்திரவதை செய்து திருப்பிக் கொண்டுபோய் வைத்து
வேலை வாங்குகின்ற இப்படிப்பட்ட சூழ்நிலை எல்லாம் இருக்
கின்றது. ஆகவே இந்த போயர்களுக்கு இந்த இந்தப் பகுதி
களில் இவர்கள் கல் உடைக்கலாம் என்ற அனுமதியை வழங்கி
அவர்கள் உடைக்கிற கல்லுக்கு கனசதுரத்திற்கு இவ்வளவு,
என்று வைக்கக்கூடிய வாய்ப்பு, அதற்கு அரசுக்கு ஒரு தொகை,
செலுத்துகிற நிலையை உருவாக்கித் தருவோமானால்
அது பயனுள்ளதாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைத்
தெரிவித்துக்கொள்கிறேன்,

முற்பகல் 11—55

அதைப்போல சில சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இன்னும்
சரியான சலுகைகளைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள், அவர்
களுக்கெல்லாம் இன்னும் ஆய்வு செய்து அவர்களையெல்லாம்
சேர்க்க வேண்டிய கடமை இருக்கிறது. பனைத் தொழி
லாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நிலை மிக
வும் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறது. ஒரு பனையில்
ஏறி ஒருவர் பதநீர் எடுக்கிறார் என்றால் அந்தப் பனையில்
ஒரு நாளைக்கு மூன்று தடவை ஏற வேண்டியிருக்கிறது. எவ்
வளவு கடினமானத் தொழிலைச் செய்கிறார்கள் என்பதைப்
பார்க்க வேண்டும். உயிரைப் பணையம் வைத்து செய்கிறார்கள்,
இந்த பனைத் தொழிலில் பல உப தொழில்கள் இருக்கின்றன.
ஓலைப்பொருள், பனைப் பொருள், நார்ப்பொருள், தும்புப்
பொருள் இப்படி பல்வேறு பொருள்களைச் செய்கிற தொழில்
கள் இருக்கின்றன, அதிலிருந்து பாரின் எக்சேன்ஞ்ச் கூட வர
வழியிருக்கிறது, எனவே, உப தொழில்கள் பல இருக்கிற
காரணத்தால் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை அது உரு
வாக்கித் தருகிற ஒரு தொழிலாக இருக்கிறது. இந்த பனைத்
தொழிலாளர்களுடைய நிலையை ஆய்வு செய்ய வேண்டும்.
நிறைய பேர் ஓலைக் குடிசைகளில் தான் வாழ்ந்து கொண்டிருக்
கிறார்கள், அவர்கள் சோப்பு போட்ட துணியைக் கூட உடுத்
தும் நிலை இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களை
மிகப்பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டியது காலத்
தின் கட்டாயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதுமாத்திரமல்லாமல், எங்களுடைய பகுதியில் நெல்லை
மாவட்டம், இராதாபுரம் தொகுதி குட்டத்தில் உள்ள ஒருவர்
ஒரு இயந்திரத்தை பனையில் ஏறுவதற்காக கண்டுபிடித்து
இருந்தார். அப்படிப்பட்ட இயந்திரத்தை ஆய்வு செய்து,
மற்ற தொழில்களுக்கு கொடுக்கிறீர்கள். நெசவுத் தொழி
லுக்கு கொடுக்கிறீர்கள். போயர்களுக்கு கருவிகள் தருகிறீர்
கள். முடிதிருத்துபவர்களுக்கு கருவிகள் தருகிறீர்கள்.
சலவைத் தொழிலாளர்களுக்கு கருவிகள் தருகிறீர்கள்.

அந்த மாதிரி பனையேறுகிற கருவியை அதிக அளவில் உற்பத்தி
செய்து பனைத் தொழிலாளர்களுக்கு வழங்குவீர்களானால்
மிக உதவிகரமாக இருக்கும். அதன்மூலம் அந்தத் தொழில்
நசியாமல் பாதுகாக்கப்படும். ஆகவே, இவர்களுடைய இந்தப்
பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கு ஒரு வாரியம் ஏற்படுத்துவது
சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை என்னுடைய ஆலோசனை
யாக, வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பயணியர் திட்டம் ஒன்றை இந்த அரசு
தந்து இருக்கிறது. அது என்னவென்றால் மண் தொழிலாளர்
களுக்கு மின்விசையால் இயக்கக்கூடிய சக்கரம் ரூ. 5,000
விலையில் இலவசமாகத் தருவது மிகவும் பாராட்டுக்குரிய
ஒன்றாகும். ஏனென்றால் இதற்கு முன்னால் யாரும் தர
வில்லை. அந்தத் தொழிலாளர்களை இவ்வளவு பரிவோடு
பரிசீலித்து அவர்களுக்கு இத்தகைய உதவியை வழங்குகிற
அரசுக்கு நன்றியை, பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

பக்கம் 12-ல் சட்ட பட்டதாரிகளுக்கு சில உதவிகள் சொல்
லப்பட்டிருக்கிறது. சட்ட பட்டதாரிகள் இந்த மூன்று இனங்
களில் வருவார்களானால், பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட,
சீர்மரபினர் பரம்பரையில் வருவார்களானால் அவர்களுக்கு
3 ஆண்டுக் காலத்திற்கு மாதத்திற்கு 500 ரூபாய் வீதம் அதாவது
வருடத்திற்கு ரூ. 6,000 வழங்கப்படுகிறது. அவர்கள் பயிற்சி
பெறுகிற சீனியர் அட்வகேட்ஸ்களுக்கு 5,001 ரூபாய் வருடத்
திற்கு 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது என்று சொல்லி
இருக்கிறீர்கள். இதற்காக ரூ. 5.04 இலட்சம் ஒதுக்கப்பட்
டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்த
வரையில் இது ரொம்பவும் குறைவு. இந்தத் துறையில்
யார் வந்து சேர்கிறார்கள் என்றால், மருத்துவத் துறையில்
இடம் கிடைக்காதவர்கள், அக்ரிகல்ச்சர் கல்லூரியில் இடம்
கிடைக்காதவர்கள், வெடர்னரி கல்லூரியில் இடம் கிடைக்கா
தவர்கள், என்ஜீனியரிங் கல்லூரியில் இடம் கிடைக்காதவர்கள்
இதற்கெல்லாம் தகுதி இல்லாதவர்கள் இந்தச் சட்டக் கல்லூரிக்கு
வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் ஊதியம் இல்லாமல்
உழைக்கிறபோது சங்கடப்படுகிறார்கள். ஆகவே, இந்த
5.04 இலட்சம் ரூபாய் என்பது 45 மாணவர்களுக்குத் தான்

பயன் அளிக்கும். இதைப்போல சீனியர் அட்வகேட்ஸ் பயிற்சி அளிக்கிறவர்கள், ஜூனியர் அட்வகேட்ஸ்ஸை அப்பாய்ண்ட் பண்ணுகிற நிலைவருகிறபோது இவர்களுக்கு அதிகமாக வருமானம் இருக்கும். இவர்களுக்கு இந்த 5,001 ரூபாய் என்பது தேவையில்லையென்றே கருதுகிறேன். அதையும் இணைத்து ஜாஸ்தியாக தந்து இந்த மூன்று இனத்தைச் சார்ந்த மாணவர்கள் சட்டக் கல்வியை முடித்து வருகிறவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு இந்தத் தொகையை அதிகபட்சமாகத் தருகிறபோது இந்தத் துறை கொஞ்சம் கௌரவமாக மாற்றப்படும்.

கான்சர் மாதிரி ஒரு நோய் இதில் இருக்கிறது. டவுட்ஸ் அதாவது புரோக்கர்ஸ் கூவிக்கூவி அழைக்கிறார்கள். வழக்கறிஞர்களை நாடி வருகிறபோது இங்கே வா, நான் அழைத்துப் போகிறேன். அவரிடம் போய் விடாதே என்று சொல்லிக்கொண்டு இந்தத் துறையை அசிங்கப்படுத்துகிறார்கள். புரோக்கர்ஸ், டவுட்ஸ் அலைகிறார்கள். அதை சப்ரஸ் செய்ய வேண்டுமென்றால், தன்காலில் இவர்கள் நிற்கக் கூடிய தெம்போடு அப்படிப்பட்டவர்களை நாடாமல் ஊக்குவிக்க வேண்டும். அந்த நிலை வரவேண்டுமென்றால் இந்த ஜூனியர் அட்வகேட்ஸ் நிறைய பேருக்கு இந்த உதவித் தொகையை கொடுத்தாக வேண்டும் என்பதைத் தெளிவு படுத்தி, இந்தத் தொகையை அதிக சட்ட மாணவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறுபான்மையினர் நல ஆணையம் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இன்றைக்குச் சமூகத்திலே பார்க்கிறபோது சிறுபான்மையினர் பற்றி ஒரு தவறான கருத்து பரவலாக இருக்கிறது. நாட்டிற்கே சம்பந்தம் இல்லாதவர்களைப் போல ஒரு கருத்து நிலவுகிறது. இது மிகவும் வேதனைக்குரிய விஷயம். தேவிலால் ஒரு மடத்தனமான அறிக்கையை வெளியிட்டார். முகமதியர்கள் எல்லாம் முகமதிய நாடுகளுக்குச் செல்லுங்கள். கிறிஸ்துவர்கள் எல்லாம் கிறிஸ்துவ நாடுகளுக்குச் செல்லுங்கள். அதாவது இங்கிலாந்துக்கு, அமெரிக்காவுக்குச் செல்லுங்கள் என்று பத்திரிகையில் அறிக்கை கொடுத்திருந்தார். பிறகு நான் அப்படிச் சொல்லவில்லை என்று பல்ட்டி அடித்தார். இன்றைக்கு நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். அவர்களும் இந்த நாட்டுப்பிரஜைகள் இந்த நாட்டிலே பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மதச் சார்பற்ற நாடு நமது நாடு. மதச் சார்பற்ற நாடு என்று சொல்லும்போது, கிருத்துவர்களும், இந்துக்களும், ஒன்றுக்கொன்று, சம்பந்தம் எடுத்துக் கொண்டிருக்கிற நிலையில், துர்ப்பிரசாரம் செய்து, ஒரு இனக் கலவரத்தைத் தூண்டுகிற வகையில், ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இந்த வாரியம் நல்லமுறையில் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட வேண்டும் என்றால், அந்த வாரியத்திலே சிறு



பான்மையினராக யார் எல்லாம் இருக்கிறார்கள் என்றால், முகம்மதியர், கிருத்துவர்கள், ஜைனர்கள், பௌத்தர்கள் போன்றவர்கள்தான் அதிலே வருகிறார்கள். அவர்களைக் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இருந்தால், அவர்களையும் இதிலே இணைத்து அதை நல்ல முறையிலே செயல்படுத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

பிறகு, சமதர்ம சமுதாயம் பற்றி நம்முடைய அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், சமூக பொருளாதார ஏற்றத்திற்கு இந்தக் கல்விதான் முக்கியம். அதுதான் ஒரு பெரிய கருவி. இந்தக் கல்வி வந்தால், எல்லாமே மாறிவிடும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஒப்புக்கொள்ள மறுத்தால் கூட, இதுதான் உண்மை. ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவனோ, அல்லது சீர்மரபினரைச் சார்ந்தவனோ, கலெக்டராகவோ அல்லது ஐ.ஏ.எஸ். அதிகாரியாகவோ வந்தால், உயர்குடியைச் சேர்ந்தவர்களானாலும், எந்த முற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஐயா என்று மிகவும் கௌரவத்தோடு அழைத்து, கண்ணியமாக அவர்களிடம் நடந்து தாழ்வோடு, பணிவோடு நடக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இந்தக் கல்வி இல்லை என்கிற நிலை வருகிறபோதுதான், அவர்கள் சமுதாயத்திலே புறக்கணிக்கப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, எந்த ஒரு இனத்திற்கும் தருகிற சலுகைகள் எல்லாம் சரியான முறையிலே அவர்களுக்குச் சென்று அடையவேண்டும். அதனாலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், உண்மையாகத் தேவைப்படுகிறவர்கள், நல்ல முன்னேறுபவர்கள் திருப்பித் திருப்பி, நான் தான் முன்பே சொன்னேனே. (Art of bribing the Revenue people) அது தெரிந்தவர்கள் போய் பண்ணிக்கிற மாதிரி இருந்தால் இதை அவர்கள் பயன்படுத்த முடியாது. ஆகவே, அவைகள், எல்லாம் கவனமாகச் செயல்படுத்தப்பட்டு, இதைத் தவிர்த்து, தகுதியான நபர்களுக்கு இந்தச் சலுகைகள் சென்று அடைவதற்கு வழி செய்யவேண்டும்.

மண்டல் கமிஷன் பற்றிப் பேசும்போது சொன்னார்கள், மத்திய அரசு அப்படி, நாங்கள் இப்படி என்று சொன்னார்கள். நமது அரசு 50 சதவீதம் வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். இதை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால், ஒன்று பொருளாதார அடிப்படையில் அவர்களுடைய சமூக அந்தஸ்தை எல்லாம் கருத்தில்கொண்டு அடிமட்டத்திலே இருப்பவர்களுக்கு இந்த வாய்ப்புகள் கிடைக்கும்படியாகச் செய்வதில் நாம் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும்.

அதே மாதிரி இன்றைக்கு 52 சதவீதம் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால், 10 வேலைகள் இருந்தால், 10 வேலைகள் சீர்மரபினருக்கு என்று சொன்னால், அதிலே 5 வேலைகள் சீர்மரபினர் பெண்களுக்கு என்று இருக்கவேண்டும். 10 வாய்ப்புக்கள் இருக்கிறது கல்லூரியிலே இடம், அது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று சொன்னால், அதிலே 5 பெண்களுக்கு என்று இருக்கவேண்டும். ஏன் என்றால், பாப்புலேசனிலே பெண்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். ஆண் ஜாதியைவிட பெண் ஜாதிதான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்த உரிய வாய்ப்புக்கள் தரப்படவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது, பள்ளித் தேர்வு முடிவுகளை எல்லாம் நாம் பார்க்கிறபோது, ஆண்களை விட பெண்கள்தான் அதிகமாக மார்க்குகள் வாங்கி தேர்வு பெறுகிறார்கள். ஆகவே சீர்மரபினராக இருந்தாலும்,மிகவும்பிற்படுத்தபட்ட வகுப்பினராக இருந்தாலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும், மார்க்கின் அடிப்படையிலேதான் அந்த இடங்களைத் தருகிறோம். ஆகவே பெண்களுக்கு உரிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய நிலைதான் இன்றைக்கும் ஏற்பட்டு இருக்கிறது.

<u>திருமதி ரமணி நல்லதம்பி :</u> துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. என்ன இருந்தாலும், ஒரு ஆங்கிலப் பழமொழி இருக்கிறது. If you educate a man "man alone is educated Educating a woman is equal to educating the whole family"

சொல்லப்பட்டு இருக்கிறது. ஒரு ஆண் கல்வி கற்றால் அந்த ஆண் மட்டும்தான் கல்வி கற்கிறான். ஆனால் ஒரு பெண்ணைப் பயிற்றுவிக்கிறபோது, அந்தக் குடும்பமே பயிற்றுவிக்கப்படுவதாக ஆக்கப்படுகிறது. வரதட்சிணைக் கொடுமை என்று பல இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் ஒரு பெண் கல்வியை கற்று வருவாளேயானால், அந்தக் குடும்பமே, இந்தச் சமுதாயமே உயர்வு அடைய வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் தான் இந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆகவே சமதர்மசமுதாயத்தை உருவாக்குவது நமது குறிக்கோள் என்கிற இந்த அரசைப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

## 7. விதி 110–இன் கீழ் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை.

### குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்கும் பணிகள் மற்றும் வறட்சி நிவாரண நடவடிக்கைகள் குறித்து.



<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> சட்டப்
பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை
அமைச்சர் அவர்கள் அவையிலே ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு
சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே,
தமிழ்நாட்டில் பருவமழை பாதித்ததினால், பாதிக்கப்பட்ட
மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை
யைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 11-3-1992
அன்று, 9.72 கோடி பணம் கொடுக்கவேண்டும் என்று உத்தர
விட்டு இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 1,500 ஆழ்
குழாய்க் கிணறுகளும், அதற்கு என்று 4.75 கோடி ரூபாயும்
பல்வேறு குடிநீர்ப் பணிகளுக்கு 1.97 கோடியும், வேலை
வாய்ப்புப் பணிகளுக்காக 3 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டு
இருக்கிறது. ஆக, மொத்தம் இந்த அடிப்படையில், 9.72
கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல், இந்தப் பணத்தை ஒதுக்குவதில், மத்திய
அரசின் அறிவிப்புப்படி 1-4-1990 முதல் மாநில அளவில்
இயற்கைச் சீற்றத் தணிப்பு நிதி (Calamity Relief Fund)
அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 12.05

ஒவ்வொரு ஆண்டும் இந்த நிதிக்காக ரூ. 39 கோடி
அளிக்கப்படுகிறது. இந்தத் தொகுதியில் 75 விழுக்காடு மத்திய
அரசாலும், 25 விழுக்காடு மாநில அரசாலும் வழங்கப்
படுகிறது. இந்த நிதியை நிர்ணயிப்பதற்காக தலைமைச்
செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு மாநிலக் குழு
அமைக்கப்பட்டுள்ளது. இதில் வருவாய்த் துறைச் செயலாளர்,
செயலாளராகவும், நிதி, பொதுப்பணித் துறை, ஊரக
வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல்,
வேளாண்மைத் துறை செயலாளர்கள் மற்றும் வருவாய்
ஆணையாளர் முதலியோர் உறுப்பினர்களாகவும் இருக்
கிறார்கள். 1990-ஆம் ஆண்டு தென் மேற்கு மற்றும் வட
கிழக்குப் பருவ மழை தவறி விட்டதினால் கோயம்புத்தூர்,
தர்மபுரி, திண்டுக்கல் காயிதே மில்லத், கன்னியாகுமரி,
மதுரை, உதகமண்டலம், பசும்பொன் முத்துராமலிங்கத்
தேவர், பெரியார், சேலம், திருநெல்வேலி—
கட்டபொம்மன், திருவண்ணாமலை சம்புவராயர் வட ஆற்காடு
அம்பேத்கார், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி
ஆகிய மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன
தலைமைச் செயலாளர் தலைமையில் பல்வேறு கட்டங்களிலே
மாநிலக் குழு ஆய்வு செய்து 30—11—1991 முடிய வறட்சி

நிவாரணப் பணிக்காக ரூ. 8.69 கோடி வழங்கியது. இதன் காரணமாக மாநிலம் பூராவும் 1,813 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 1991—ஆம் ஆண்டு தென் மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவ மழையினால் ஓரளவு மழை வந்தபோதிலும் கோயம்புத்தூர், காமராஜர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை மற்றும் திண்டுக்கல், அண்ணா மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்யவில்லை. மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வறட்சி நிவாரணம் கோரி அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மூன்று அமைச்சர்களும் 6—3—1992—ல் வருவாய்த் துறைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறைச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வேளாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் சிறப்பு ஆணையாளர், வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையாளர் ஆகியோர் ஆராய்ந்து மேற்கூறிய மாவட்டங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், பல்வேறு குடிநீர்ப் பணிகளுக்காகவும் இந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1991—92 ஆம் ஆண்டு அதாவது சென்ற ஆண்டிற்கு, சீற்றம் தணிப்பு நிதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை நான் முதலிலே தெரிவித்தபடி மத்திய—மாநில அரசின் மூலமாக ரூ. 39 கோடி 1992-ல் கீழ்க்கண்டவாறு சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டது.

மத்திய —மாநில அரசால் ஒதுக்கப்பட்டது ரூ. 39 கோடி. வெள்ள நிவாரணத்திற்காக ரூ. 36 கோடி, வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 15.49 கோடி. ஆக ரூ. 51.49 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கிய நிதியை விட தமிழக அரசு ரூ. 12.49 கோடி அதிகமாக செலவிட்டிருக்கிறது. இதன் மூலமாக தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பதற்காக அதன் அடிப்படையில் தேவையான நிதி இல்லையென்றாலும், அவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்பதற்காக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்காக போன ஆண்டு ரூ. 12.41 கோடி அதிகமாக செலவழித்திருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 6. மானியக் கோரிக்கைகள், 1992—93, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி

### கோரிக்கை எண் 32— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். சீர்மரபினர் முதலியோர் நலன்— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியத் கோரிக்கைகளின் மீது விவாதம் தொடங்குகிறது. டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

பிற்பகல் 12-10

* டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, கண்ணீரோடு விதைப்பவர்கள் களிப்போடு அறுப்பார்கள் என்கிற பைபிள் வாசகத்திற்கு ஒப்ப இன்றைக்கு தமிழகத்தின் முதல்வராக இருக்கிற புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்பாதங்களில் வணங்கி, என்னை திருச்சி 1-ஆவது தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினராக ஆக்கியமைகு நன்றி கூறி என்னுடையத் இந்த உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் துறையிலே வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை பார்த்த எனக்கு நான் சென்ற முறை இதே அவையில் குறிப்பிட்டிருந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி நிறுவனம் ஒன்று திருச்சிராப்பள்ளியிலே நிறுவ வேண்டும் என்று கேட்டிருந்தேன். ஆனால் இந்தக் குறிப்பிலே அதற்குப் பதில் இல்லை. ஆனாலும்கூட நம்முடைய மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வருகிற நிதியாண்டிலாவது திருச்சியிலே ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். பயிற்சி நிறுவனம் ஒன்றை அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஆதி திராவிட கிறித்துவ மக்கள் தாழ்த்தப்பட்ட கிறித்துவ மக்கள், மிகவும் ஒடுக்கப்பட்ட கிறித்துவ மக்கள் பிற்பட்டோர் பட்டியலில் இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள் போன்று வாழுகின்ற, அதே நிலையில் அதே பொருளாதார நிலையில் வாழுகின்ற அந்த மக்களை நம்முடைய தமிழக அரசு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலாவது சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மிகவும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஆதி திராவிட மக்களைப் போன்று வாழுகின்ற, ஆதித் திராவிட மக்களைப் போன்று அதே தெருக்களில், அதே ஊர்களில் அதே உறவினர்களோடு வாழுகின்ற ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட கிறித்துவ மக்களை, ஆதி திராவிட இனத்தில் சேர்க்க முடியாவிட்டாலும் அவர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தாள் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

மேடுகளும், பள்ளங்களும் சமம் ஆக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிற பைபிளின் வாசகத்திற்கு ஒப்ப, மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் கண்ணீரோடு நிற்கின்ற அந்த மக்களை கருணை உள்ளத்தோடு அருள் கூர்ந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிட கிறித்துவ மக்களை நம்மால் ஆதி திராவிடர் பட்டியலில் வைக்க முடியாவிட்டாலும் அவர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வன்னியர் மக்களைப் பொறுத்த அளவிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். ஆனால் வன்னியர் கிறித்துவர்கள், அவர்களுடைய உறவினர்கள், அவர்ளுடைய சகோதர சகோதரிகள்—அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம் என்பது எனக்குத் தெரியவில்லை. ''பர்த் ஈஸ் அன் ஆக்ஸிடென்ட்'' என்று நான் முன்பே குறிப்பிட்டேன். பிறப்பு என்பது ஒரு விபத்து. அவர்களும் ஒரே இனத்தில் பிறக்கின்றனர். வன்னியர் கிறித்துவர்களும் ஒரே இனம்—வன்னியர்களும் ஒரே இனம். ஆனால் வன்னியர் கிறித்துவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். வன்னியர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். இதை அருள் கூர்ந்து கருணையோடு நீங்கள் ஏற்றுக் கொண்டு அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிறுபான்மை கமிஷன் அமைத்திருக்கிறார்கள். சிறுபான்மை கமிஷன் எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இந்த விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்படவில்லை, சிறுபான்மைக் கமிஷன் என்பது மாவட்டம் தோறும் அமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். மாவட்டம் தோறும் சிறுபான்மைக் கமிஷனுடைய கிளைகள் இயங்க வேண்டும். அப்போது தான் அங்கிருந்து வருகிற கருத்துக்களை இங்கே செயல்படுத்த முடியும். ஆகவே சிறுபான்மை கமிஷனுடைய அறிக்கையைக் கூட நம்முடைய அவையிலே மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதுவரையில் அந்த செயற் குறிப்புகள் எப்படி இருந்தன, இப்போது அது எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி தெரிவிக்க வேண்டும். அதேபோல மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்படோர், கமிஷனைப்பற்றி யெல்லாம் கூறினார்கள். ஆனால் அது பற்றிய தரு நல்ல விளக்கம் நமக்கு அளிக்கப்படவில்லை. நம்முடைய



மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் ஒரு நல்ல பிற்படுத்தப்பட்டோர் கமிஷனை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய திருச்சியைப் பொறுத்த அளவிலே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நாட்டிய நிகழ்ச்சி நடத்தி (@) அதாவது மருத்துவக் கல்லூரிக்காக அந்தக் காலத்தில் நாட்டிய நிகழ்ச்சி நடத்தி (@) சேர்த்த 50 இலட்சம் ரூபாய் இன்றைக்கும் இருக்கிறது. ஆனால் மருத்துவக் கல்லூரி திருச்சியிலே அமைக்கப்படவில்லை. ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் **அந்த மருத்துவக் கல்லூரியை டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்கள் பெயராலே திருச்சியிலே தொடங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல திருச்சியைப் பொறுத்த வரையிலே, திருச்சிக்குள்ளே நீங்கள் நுழைந்தால் வெளியே வருவதற்கு இரண்டு மணி நேரம் தாமதம் ஆகும், அவ்வளவு இடிபாடு உள்ள நகரமாக இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திருச்சியை மாநகராட்சியாக அறிவித்திருக்கிறார்கள், அது செயல்படுத்தப்படவில்லை, மாநகராட்சியாக வருகின்ற ஏப்ரல் 14-ந் தேதியாவது, புத்தாண்டிலாவது அது செயல்படத்தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன், திருச்சி நகர இடிபாடுகளைத் தவிர்க்கும் வண்ணம் திருச்சி நகரத்தை சுற்றி ஒரு ரிங்ரோடு அதாவது ஒரு சுற்றுப்பாதை, அதாவது ஒரு பைபாஸ் பாதை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், அதே போல அங்கே வாழ்கின்ற குடிசைப் பகுதி மக்கள் எல்லாம் மிகவும் தொந்தரவு செய்யப்படுகிறார்கள். அரசு நிலத்தில். இரயில்வே இடங்களிலும். இராணுவ இடங்களிலும் வாழ்கின்ற 5.000-க்கு மேற்பட்ட குடிசைவாழ் மக்கள் பயமுறுத்தப்படுகிறார்கள், அவர்களுக்கு பட்டா போட்டுத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு....

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கையின் மீது பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்,

---

@ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

டாக்டர் ச, ஆரோக்கியசாமி: பேரவைத் துணைத் தலைவர்] அவர்களே. என்னுடைய தொகுதியைப் பற்றியும் இதிலே. சொல்ல தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், அதே போல பீடித் தொழிலாளர்கள் என்னுடைய தொகுதியிலே நிறைய பேர் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல செயற்கை வைரம் என்னுடைய தொகுதியில் அதிகமாகச் செய்யப்படுவதால் அதற்கு விதித்திருக்கின்ற வரியை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதில். முதலமைச்சர் அவர்கள் நாட்டிய நிகழ்ச்சி நடத்தி என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்,

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. டாக்டர் ஆரோக்கியசாமி அவர்கள் பேசுகின்ற போது ** என்று சொன்னார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி இருந்தால் அது நீக்கப்படும். திரு. கே. தவசி,

திரு. கே. தவசி: சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நான் வணங்குகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்,

இன்று பிற்பட்டோர். மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினர் மானிய கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் செயல்படுத்துகின்ற திட்டங்கள் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் சீரோடும். சிறப்போடும் சென்று கொண்டிருக்கின்றன. அந்த வகையில் பள்ளி மாணவிகளுக்கு இலவசமாக சீருடைகளும், தீபாவளி, பொங்கல் போன்றவைகளுக்குத் தனியாக சீருடை

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



களும், பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் வழங்குவதில் இந்த ஆண்டு முனைப்போடு இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

சீர்மரபினர் பள்ளியில் படிக்கின்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் கொடுக்கப்படுகின்ற ஸ்காலர்ஷிப் முறையானது மாதத்திற்கு 70 ரூபாய் என்று கொடுப்பதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி 80 ரூபாயாக கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய (ு ஆலோசனையை வழங்குகின்றேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆலோசனையைத்தான் அப்படிச் சொல்கிறார், அதை ஆலோசனை என்று திருத்திக் கொள்ளவும்,

திரு. கே, தவசி: மற்றும் அரசு மானியமானது அரசு பள்ளிகளுக்கு மட்டுமல்லாது தனியார் நடத்துகின்ற பள்ளி நிறுவனங்களுக்கும் கொடுப்பதில் இந்த அரசு முனைப்போடு செயல்படுகின்றது,

அடுத்தபடியாக பள்ளியில் படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கு பேரறிஞர் அண்ணா விருதும், தந்தை பெரியார் விருதும் வழங்குவதைப் போல நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன், அடுத்தபடியாக பள்ளி மாணவர் விடுதியிலும். பள்ளிகளிலும் நிர்வாகக் குழுவில் சங்கப் பிரதிநிதியாக. பொது மக்களுடைய பிரதிநிதியாக சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்க வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்,

பிற்பகல் 12-20

இங்கே சீர் மரபினர் மற்றும் பிறபட்டோருக்காக அரசு நிதி திட்டங்களில் தேசிய வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் இங்கே பல்வேறு திட்டங்கள் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துப் பயிற்சிப் பணிகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பயிற்சி பெறுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு 5 வாரங்கள் என்பதை 8 வாரங்கள் என்று அதிகப்படுத்திய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க மாற்றப் பெற்றது.

பொறியாளர் படிப்பு, கால்நடைப் படிப்பு, மருத்துவப் படிப்பு போன்ற பயிற்சிகள் பெறுவதற்கு புதிதாக 15 நாட்கள் என்று கொடுக்கப்பட்டு இருந்ததை 30 நாட்கள் ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு என்னுடைய கருத்தாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் சட்டப் பட்டதாரிகளுக்கு இங்கே இளம் வழக்கறிஞர்களாக உள்ளவர்களுக்கு 3 ஆண்டுகள் கொடுப்பதை 4 ஆண்டுகள் ஆக்கியும், மாதம் 500 ரூபாய் என்பதை 600 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், மதுரை, செக்காநந்தி போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டும் கடந்த காலங்களில் இன்னும் ஒருசில குறைபாடுகளோடு இருக்கின்ற காரணத்தால் அதை நிவர்த்தி செய்யவேண்டும் என்றும், இந்த அரசாவது மாநில சிறுபான்மை நல ஆணையம் ஏற்படுத்தி அதன் மூலம் சிறுபான்மையினருடைய குறைகளைத் தீர்க்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன் வந்திருப்பதற் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தியாவில் எங்கும் இல்லாத அளவுக்கு எங்களுடைய மதுரை மாவட்டத்தில் சீர் மரபினருக்கு தனி ஆட்சியர் அலுவலகத்தை ஏற்படுத்தி அன்று சீரோடும், சிறப்போடும் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் நடந்து வந்தது. அந்த அரசு அந்த சீர்மரபினருக்கு கிடைக்கக்கூடிய சலுகைகளில் பல்வேறு சலுகைகளை ஒதுக்கியிருந்தது குறிப்பாக அந்தப் பகுதியில் வாழ்கின்ற பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக பல்வேறு சலுகைகள் கொடுக்கப்பட்டு இருந்தன. தற்சமயம் அது இடையில் வந்த அரசால் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அவர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டங்கள் மற்றும் பள்ளியில் படிக்கின்ற மாணவிகளுக்கு சிறப்புத் திட்டமாக இருந்த பல்வேறு சலுகைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டத்திலுள்ள டெபுடி கலெக்டர் அந்தஸ்தில் உள்ள அதாவது சப்–கலெக்டர் அந்தஸ்தில் அங்கே ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டு அது ஒரு இதயமாக செயல்பட்டுக்கொண்டு இருந்தது. அங்கே பிறமலைக் கள்ளர்களுக்குத்தான் முதல் முக்கியத்துவம் கொடுத்து அங்கே பள்ளியில் வேலைப் பார்க்கின்ற ஆசிரியர்களுக்கும்



மற்றும் நிறுவனங்களில் வேலைப் பார்க்கின்றவர்களுக்கும் முன்னுரிமைக் கொடுக்கப்பட்டு பதவிகளை வழங்கி வந்ததை அப்போது ஆட்சியில் 2 ஆண்டுகள் இருந்த தி.மு.க.வில் அந்த ஜி.ஓ. மாற்றப்பட்டுமற்ற எல்லா சமுதாயத்திற்கும் கொடுக்கப்படும் சலுகையைப் போல எங்களுக்கும்—அங்கே இருக்கின்ற பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு—கொடுக்கப்பட்டன. எனவே, மீண்டும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தில் உள்ள ஆசிரியர் பெருமக்களுக்கும், படித்து இருக்கின்ற ஏழை மாணவர்களுக்கும் அங்கே சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உசிலம்பட்டியில் ஏற்கெனவே இங்கே பிற்பட்டோர் பட்டியலில் உள்ள அந்த சலவைத் தொழிலாளர்களுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சியின் போது அங்கே ஒரு தி.மு.கவைச் சேர்ந்தவர் அதை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அங்கே அந்த பட்டா கொடுக்கப்பட்டும் இன்னும் அவர்களுக்கு வீடு கட்டாத சூழ்நிலையில் பட்டாவிற்கு பழைய தி.மு.க. அரசு ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதற்கு விதி விலக்குக் கொடுத்து மீண்டும் அதைச் செயற்படுத்த வேண்டுமென்று என் கோரிக்கையாகத் தெரிவிக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்தபடியாக, பிற்பட்டோருக்குக் காலனி வீடுகள் கட்டித் தரவேண்டும். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள நிலம் அற்ற ஏழை கூலி தொழிலாளர்களுக்கு நிலம் வாங்கி தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கவும், மின் இணைப்புக் கொடுப்பதில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை மாவட்டத்திலுள்ள அந்த சீர் மரபினர் ஆணையத்திற்கு சிறப்புக் கொடுக்கக்கூடிய வகையில் அங்கே கிணறு வெட்டக்கூடிய அந்த பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.25

இப்போது நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், 1,500 போர் வெல்கள் போடப்படும் என்று, இங்கே எடுத்துக் கூறினார்கள். தயவு செய்து அதை அதிகப்படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சராசரியாக 300 போர் வெல்களாவது போடுவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துக்கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும்

அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து, எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் நம் இதய தெய்வத்திற்கும் உங்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்கி, இந்தப் பிற்படுத்தப்பட்ட சமூக மானியக் கோரிக்கை எண். 32இன் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே நான் பேச விழைகிறேன்.

பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் நலனைப் பேண, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும் அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த ஆண்டு அதிகமான நிதியினை, குறிப்பாக 37 கோடி ரூபாய் அளவில் ஒதுக்கித் தந்து, பிற்படுத்தப்பட்ட சமூக மக்களும் தாழ்த்தப்பட்ட சமூக மக்களைப் போன்றுதான் வாழ்கிறார்கள் என்பதை நன்கு அறிந்து, அவர்களுக்கு இந்தத் தொகையை ஒதுக்கியுள்ளதை நான் பாராட்டி, மகிழ்ச்சி எய்தி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியை மீண்டும் காணிக்கையாக்குகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் பெரும்பாலோர் குடிசையிலேதான் வாழ்ந்து வருகிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெள்ள தெளிவாகத் தெரியும். அந்தக் குடிசைகள் மட்டுமே அவர்களுக்கு உரிமை. ஆனால், அவர்கள் இருக்கும் அந்தக் குடிசையினுடைய அடிமனைகூட அவர்களுக்குச் சொந்தம் இல்லாததை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிந்து, இதுவரை எந்த முதல்வரும் செய்யாத ஒரு சாதனையை, 100 இலட்சம் ரூபாயில் வீட்டுமனைகளைக் கையகப்படுத்தி, 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு மனைகளை வழங்க இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் **காணிக்கையாக்குகின்றேன்.**



பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனுக்காக புதிதாகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் வகுத்து பிற்பட்டோர் வருமானம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 5 ஆயிரம் பேருக்கு பொருளாதார நிலையை மேம்படுத்தத் திட்டம் கொண்டு வந்துள்ள அத்துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் நான் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, பிற்படுத்தப்பட்ட சமூக மக்களின் பிள்ளைகள் படிக்க, 15 இலட்சம் ரூபாயில் நூலகப் புத்தகங்களும் 23 இலட்சம் ரூபாய் செலவில், 13 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்க இருப்பதையும் மற்றும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ்., போன்ற மத்திய அரசு பணித் தேர்வுகளுக்கு மாணவர்கள் பயிற்சிபெற, வரும் ஆண்டில் 35 இலட்சம் ரூபாய் செலவு செய்ய இருப்பதைக் கண்டு, இந்தச் சமுதாய மக்களை கேட்டுக் கொள்வதெல்லாம், சில தலைவர்களால் இந்த இளைஞர்களுக்கு தவறான வழிகாட்டப்பட்டு, ஏதோ அவர்கள் புறக்கணிக்கப்படுவதாகப் பறைசாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த மாமன்றத்தின் வாயிலாக அந்தச் சமுதாய இளைஞர்களுக்கு, தந்தை பெரியார் அவர்கள் எந்த கனவு கண்டார்களோ அந்தக் கனவை நனவாக்கும் வகையிலே நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாபெரும் திட்டத்தினைக் கொண்டு வந்து, அந்த சமுதாய இளைஞர்களுக்கு நன்மை பயக்கும் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்பதால், எனக்கு முன்னுரிமை கொடுத்து, எனக்கு இன்னும் 5 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்குமாறு தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள், எந்த மாநிலத்திலேயும் இல்லாத ஒரு மாபெரும் திட்டத்தின் வாயிலாக ஏழை எளியோருக்கு இலவச வீட்டு மனையைத் தந்தது மட்டுமல்லாமல்,— அதாவது, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு, இப்பொழுது நான் சொல்வது — இளைஞர்களுக்கு உயர் கல்வியும், இலவசப் பயிற்சியும் தந்து நாளும்இந்திய ஆட்சி பணியில் அமர அரியதொரு வாய்ப்பினைக் கொடுத்து இந்தத் திட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள் தந்தை பெரியார் கண்ட கனவை நினைவாக்கும் வகையில் சமுதாய சமத்துவத்தைப் பேணிக் காக்கும் வகையில் ஒரு சீரிய திட்டத்தினைத் தந்திருக்கும் இந்த நேரத்தில் மாண்புமிகு துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம்,

இந்த பிற்பட்ட சமுதாயம், மிகப் பிற்பட்ட சமுதாயம் சீர் மரபினர் சமுதாயம் என்று இருக்கின்றன, இதிலே பல சமூகங்கள் நமக்குப் பல வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவில்லையே என்ற சில ஆதங்கங்கள் இருக்கின்றன. எனவே, சுழற்சி முறையிலே அவர்களுடைய விகிதாச்சார அடிப்படையிலே அந்தச் சமூக இளைஞர்களுக்குப் பணி அமர்த்தவும், கல்வி கற்கவும் வாய்ப்பினை நல்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அடுத்து, என்னுடைய தொகுதிக்கு வந்து விடுகிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரமாக வாருங்கள் தொகுதிக்கு.

திரு. கி. தர்மலிங்கம் : மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் அதிகமாக வாழும் என்னுடைய அணைக்கட்டு சட்டப் பேரவைத் தொகுதியில் ஒடுகத்தூர் பேரூராட்சியினுடைய மேல்நிலைப் பள்ளியில், 1,600 மாணவர்கள், அதில் குறிப்பாக மிக பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களும் மலைவாழ் மக்களும், ஆதிதிராவிட மக்களும் மட்டுமே அந்தப் பள்ளியில் பயில்கின்றனர். அவர்களுக்கு ஒரு மாணவர் விடுதி கட்டித் தரும்படி துறை அமைச்சரவர்களை நான் வேண்டுகின்றேன்.

அதேபோன்று, அந்தப் பகுதியினுடைய பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களும், மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக—இத்துறையைச் சார்ந்ததாக இல்லாவிட்டாலும் — வேரரசம்பட்டு அணையை அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரவர்களிடத்திலே கட்டிக் கொடுக்கும்படியும் அந்தச் சமூக மக்களுடைய மேம்பாட்டுக்காக இந்த அரசு செய்யும் சாதனைகளை எங்களைப் போன்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள் இந்த அரசின் சாதனையை எல்லாயிடத்திலும் குறிப்பாக அந்தச் சமுதாய மக்களுடைய இளைஞர்களுக்கு எடுத்துக் காட்டி, இந்தச் சமுதாய இளைஞர்களைத் தடம் புரளச் செய்யும் தீயவர்களின் எண்ணத்தைத் தூள் தூளாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்., வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, '' கோத்த கால் ஒன்றின் ஒன்று குலம் எனப் பிரிந்தது அன்றே ''என்று கம்பர் அவர்கள் கூறுவார்கள். மருத



நிலத்தை நோக்கிப் பாய்கின்ற ஆறு, பல்வேறு கால்வாய்களாகப் பிரிந்து நிலத்தைச் செழிக்க வைப்பதைச் சொல்லுகின்ற பொழுது, சமுதாயம் எவ்வாறு பல்வேறு ஜாதியாகப் பிரிந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அதை குறிப்பிடுவார். நிலத்தைச் செழிக்க வைப்பதற்கு நீரைப் பயன்படுத்துகிற முறைக்கு அது வேண்டுமானால் பொருத்தமாக இருந்தாலும், சமுதாயத்தில் இந்தப் பிளவுகளால் ஏற்படுகின்ற பேதங்களுக்கும், சச்சரவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க நியாயம் இல்லை. அதற்கு மிகவும் பொருத்தமான துறை இந்தத் துறை ஆகும்.

ஆனால், இந்தத் துறைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்பது வெறும் 37 கோடி ரூபாய்தான். இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம், மூலதனச் செலவையும் சேர்த்து பத்தாயிரம் கோடி ரூபாய்க்குக் கிட்டத்தட்ட வருகிறது. பத்தாயிரம் கோடி ரூபாயில் வெறும் 37 கோடி ரூபாய் என்பது ஒரு சதவிகிதம் கூட அல்ல ; ஒரு சதவிகிதம் என்றால்கூட 100 கோடி ரூபாய் வருகிறது. ஆகவே, 37 கோடி ரூபாய் கேட்பதிலே போய் வெட்டுத் தீர்மானம் கொடுத்து, மேலும் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்பதற்கு எங்களுக்கே வேதனையாக இருக்கிறது. ஆனாலும், விட்டுப் போனவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சில வேண்டுகோளை மட்டும் நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35.

பொதுவாக, சமுதாயத்தில் முன்னேறிய வகுப்பினர் என்று கூறப்படுபவர்களிடத்திலே, பின்தங்கிய வகுப்பினராக வர வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. பின்தங்கிய வகுப்பினராக இருக்கிறவர்கள், மிகப்பின்தங்கிய வகுப்பினராக ஆக வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். மிகப் பின்தங்கிய வகுப்பிலே இருக்கிற நரிக்குறவர் போன்றவர்கள், தாழ்த்தப்பட்ட சமூகத்தோடு தாங்களும் சேர்க்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே அவர்களுக்கு வகுப்பு அமைப்புகளும், அதன் விளைவாக முரண்பாடுகளும் , மோதல்களும் உருவாகின்றன. இவற்றுக்கெல்லாம் ஒரு நல்ல தீர்வுகண்டு, வகுப்புகளுக்கிடையே சமத்துவத்தை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை நல்ல வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில், சரி என்று படுவதை நாங்கள் சொல்கிறோம். இதை அரசு ஆராய்ந்து பார்த்து, ஏற்க முடியுமானால் ஏற்கட்டும் ; இல்லை , அதிலே திருத்தங்கள் செய்து நிறைவேற்ற வேண்டுமென்று நினைத்தாலும், அந்த வகையிலே நிறைவேற்றும் வகையிலே ஒருசில ஆலோசனைகளைக் கூற விழைகிறேன்.

1991-ஆம் ஆண்டு முடிந்து, 1992-ஆம் ஆண்டு துவங்குகிற நேரம் இது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்திருக்கிறது. நான் இந்த அரசிடத்திலே சொல்வது, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த இந்த ஆண்டையொட்டி, இந்த அரசும் புள்ளி விவரங்களை இந்தத் தமிழ்நாட்டிலே எடுப்பது, மிகப் பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

உதாரணத்திற்கு, பின்தங்கிய நிலைமையைத் தீர்மானிப்பதற்கு என்னென்ன அளவுகோல்கள் இருக்கின்றன என்பதை முதலிலே பட்டியல்போட்டு, அவர்கள் வாழ்கிற வறுமை நிலைமை, அவர்கள் சார்ந்திருக்கிற சூழல், யாரேனும் அவர்களுள் பட்டதாரிகள் இருக்கிறார்களா, அல்லது அந்தக் குடும்பத்திலே இருக்கிற பெண்கள் பிற இடங்களுக்கு கூலி வேலைக்குப் போகிறார்களா என்கிற அளவுகோல்களையெல்லாம் வகுத்துக் கொண்டு, எட்டோ, அல்லது பத்தோ அல்லது பதினைந்தோ அளவுகோல்களை வகுத்துக் கொண்டு அந்த வகையில், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மக்களின் நிலையை நாம் ஒரு ' சர்வே ' —கணக்கெடுப்பு நடத்துவது என்பது, அரசு நினைத்தால் சுலபமாகச் செய்யக்கூடியது என்றே கூறுகிறேன். உதாரணத்திற்கு, இப்போது கிராமந்தோறும் கிராம நல அலுவலர்கள் இருக்கிறார்கள். ஒரு கிராமத்திலே இருக்கிறவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவர்கள்? எந்த அளவுக்குப் படித்திருக்கிறார்கள் ஒவ்வொரு கிராமத்திலே இருக்கிறவர்களுடைய பொருளாதா நிலைமை என்ன என்பதை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கக் கூடியவர்கள் கிராம நல அலுவலர்களாக இருக்கிறார்கள். ஆகவே, கிராம நல அலுவலர்கள் மூலமாக, 15 நாட்கள் அவர்களுக்கு தவணை கொடுத்து, ஒவ்வொரு கிராமத்திற்கும் இந்த அடிப்படையில், எந்தெந்த அணுகுமுறையிலே பிற்பட்டத் தன்மை தீர்மானிக்கப்பட வேண்டுமோ, அந்த அடிப்படையில் புள்ளி விவரங்களைத் தரச் சொல்லலாம். அப்படி திரட்டப்பட்ட கையேடு, அந்தந்த கிராமத்திலேயுள்ள பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். அதிலே எதிர்ப்பு தெரிவிக்கவோ, அல்லது மாற்றுக் கருத்துத் தெரிவிக்கவோ அந்த மக்களுக்கு ஒரு 15 நாட்கள் வாய்ப்புத் தர வேண்டும். அப்படி தருகிறபோது, ஒருவர் வேண்டுமென்றே தன்னுடைய வகுப்பை மாற்றிச் சொல்கிறார் என்று வைத்துக் கொண்டால், அந்த வகுப்பை அவர் மாற்றிச் சொல்கிறார் என்று சொல்வதற்கு இன்னொருவருக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. அப்படி பதினைந்தும், பதினைந்தும் ஆக ஒரு 30 நாட்களுக்குள் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய கிராம நல அலுவலர்களைப் பயன்படுத்தினாலே, இந்தப் புள்ளிவிவரங்களை அரசாங்கம் திரட்ட முடியும். அதன் விளைவாக, பிற்பட்டத் தன்மை, எந்தெந்த சமுதாயத்தாரிடத்திலே இருக்கிறது என்பதை நாம் துல்லியமாக உணர முடியும்.





ஒவ்வொரு வகுப்பைச் சார்ந்த சங்கத்தைக் கேட்கிறபோது, அவரவர்கள் மக்கள் தொகையைக் கூட்டிக் கொண்டே போவதால், பிரச்சினைகள் அதிகமாகின்றன. அதை விடுத்து, தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு கிராம நல அலுவலர்களை வைத்துக்கொண்டு, ஒரு மாதத்திற்கு அவர்களைப் பயன்படுத்தினால், வேண்டுமென்றால் அரசாங்கமே அதற்காகக் கூட ஒரு கூடுதல் உதவித் தொகையைத் தருமேயானால், சரியான வகுப்பு, அவர்களுடைய பொருளாதார நிலைமை, கல்வி நிலைமை, சமுதாய நிலைமை, இதுபோன்ற புள்ளி விவரங்கள், அதுபோல, அந்தக் கிராமத்திற்கோ அல்லது நகரத்திற்கோ இருக்கிற மக்கள் தொகைக்குள்ள புள்ளி விவரங்களோடு ஒத்துவருகிறா என்பதையும் பார்த்து, சரியான கணக்கெடுக்க முடியும். அப்படி எடுக்கிற பிற்பட்டத் தன்மையை வைத்து, 4 தொகுதிகளாக அல்லது 5 தொகுதிகளாக அல்லது 6 தொகுதிகளாக எப்படி கேரள மாநிலத்திலே இருக்கிறதோ, கர்நாடக மாநிலத்திலே இருக்கிறதோ, அதைப்போல அட்டவணை-1, அட்டவணை-2 என்ற வகையிலே அதைப்போட்டு, செம்மைப்படுத்திவிட்டால், இன்றைய வகுப்புகளுக்கிடையே இருக்கிற மனமாச்சரியங்கள் வெகுவாகக் குறைந்து விடும். இதை அரசு பரிசீலிக்க வேண்டும். இந்த முயற்சியை நாம் எடுத்துக்கொண்டு, அதைப்போல புள்ளி விவரங்களைத் திரட்டுகிறபோது, அப்படி திரட்டுகிற புள்ளி விவரங்கள் பொதுமக்களின் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்படுகிறபோது, அதன் மூலம் நிச்சயமாக ஒரு அமைதியை உருவாக்க முடியும். அப்படி திரட்டுகிற புள்ளிவிவரங்களின் அடிப்படையிலே 5, 6 பிரிவுகள் தீர்மானிக்கப்படும். அதுவும், 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 1992-ஆம் ஆண்டு இப்போது புள்ளி விவரம் எடுக்கிறோம் என்றால், இன்னும் 10 ஆண்டுகள் கழித்து, அப்போது ஒரு புள்ளிவிவரம் எடுத்து, எந்தெந்த சமுதாயம் முன்னேறி இருக்கிறதோ, அப்போது அந்தப் பட்டியலையே மாற்றி, அப்படிக் கொண்டு போனால், நிச்சயமாக இந்த பிற்பட்ட இனத்திலேயிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட இனம், மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்திலேயிருந்து தாழ்த்தப்பட்ட இனம் அல்லது முன்னேறிய இனத்திலிருந்து பின்னேறிய இனம் என்றெல்லாம் சொல்வதற்கு அல்லது கிளர்ச்சிகள் நடத்துவதற்கு வாய்ப்பே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல, முக்கியமாக, அவர்களுக்குத் தேர்வுகளை நடத்தி, அதுவும் குறிப்பாக, தொழிற்கல்வி, அதாவது என்ஜினீயரிங் தேர்வு, மெடிக்கல் தேர்வினை நடத்தி, அந்தப் பட்டியலை வெளியிடுகின்றபோது அந்தப் பட்டியலில் வெறும் நம்பர் மட்டும் தான் போடுகிறார்கள். பெயரையும் போட்டு, ஊரையும் போட வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் போலி சான்றிதழ் பெற்று யாரேனும் அதில் தேர்வு பெற்றிருந்தால், தெரிந்து

விடும். இந்த ஊரைச் சேர்ந்தவர், இன்னார் என்று தெரிகிற போது அந்த ஊரிலே உள்ளவர்கள், இவருக்குக் கிடைத்திருக்கிறது என்றால் ஊர்மக்களே நம்மிடத்தில் உண்மையான தகவலை எடுத்துச் சொல்வார்கள். ஆக, வெறும் நம்பர் மட்டுமல்லாமல், ஊரையும், பேரையும் சேர்த்து வெளியிடுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டால் தவறான சான்றிதழ் பெறுவதை நிச்சயமாகத் தடுக்க முடியும். இதே சட்டமன்றத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள், கல்லூரியிலே தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட மக்கள் ஏன் சேர்க்கப்படவில்லை என்ற வினா எழுப்பிய போது, அன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களும், அன்றைய தினம் மாண்புமிகு கல்வி அமைச்சராக இருந்த திரு. இராம வீரப்பன் அவர்களும் சில புள்ளிவிவரங்களைத் தந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் சொல்வது தவறு என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன பதிலில் தவறு இல்லை. ஏனென்றால், பிரசிடென்ஸி காலேஜில் இருக்கின்றவர்கள் அரசாங்கத்திற்குத் தவறான பதில் தருகிறார்கள். பிற்பட்ட மக்கள் எவ்வளவு பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்; தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அரசு புள்ளிவிவரங்கள் கேட்கிறது. தங்களை யார் "செக்" செய்யப்போகிறார்கள் என்று கருதியோ என்னவோ அரசாங்கத்திற்குத் தவறான, முதலமைச்சருக்கே, கல்வி அமைச்சருக்கே தவறான புள்ளிவிவரங்களைத் தருகிறார்கள் என்றால், பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு பெரிய பாதுகாப்பு தேவைப்படுகிறது என்பதற்கு இது ஒன்றே சான்று. அந்த விவரங்களையெல்லாம் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தர இருக்கிறேன். அவர்களும் அதற்குரிய நடவடிக்கையை, தொடர்புடைய அதிகாரிகள் மீது எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும், குறிப்பாக பிரசிடென்ஸி காலேஜ் பற்றித்தான் என்று கருதுகிறேன்.

அதேபோல, அரசினுடைய உதவி பெறுகிற நிறுவனங்கள், அரசால் நடத்தப்படுகிற பொதுத்துறை நிறுவனங்கள். உதாரணத்திற்கு பல்வேறு பொது நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன. போக்குவரத்துத் துறை கழகங்களின் மூலமாக மெடிக்கல் காலேஜ் நடைபெறுகிறது — என்ஜினியரிங் காலேஜ் நடைபெறுகிறது. அரசின் உதவி பெற்று பல அமைப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கேயெல்லாம் இந்த ஒதுக்கீடு முறை பயன்படுவதில்லை. அரசினுடைய நேரடிப் பார்வையிலே இருக்கின்ற இடங்களிலே மட்டும் தான் இந்த ஒதுக்கீடு முறை பயன்படுகிறதே தவிர, இதர இடங்களிலே பயன்படுவது இல்லை. அங்கேயும் அந்த மக்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இன்றைக்குப் பொதுவாக அரசின் சார்பிலே வாய்ப்புகள் மிகவும் குறைந்து வருகின்றன. புதிதாக எடுக்கின்ற வேலை வாய்ப்புகளில் இது மிக மிகக் குறைந்து வருகின்ற இந்தச்சூழ்நிலையில், அதையும் இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அதற்கான முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசின் சார்பிலே இதே சட்டமன்றத்திலே மண்டல் குழு பரிந்துரையை உடனடியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியது. அதுவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 விழுக்காடு வேண்டும் என்றும் இந்திய அரசை இந்த மன்றம் கேட்டுக்கொண்டது. அது என்னவாயிற்று என்று தெரியவேண்டும். உச்சநீதி மன்றத்திலே அதற்கான வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு அரசின் சார்பிலே உச்சநீதி மன்றத்திலே, அந்த வழக்கிலே தமிழ்நாடு அரசின் சார்பிலே யாரேனும் நியமித்து இருக்கிறதா? அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, அத்தோடு விட்டுவிட்டால் அது குப்பைத் தொட்டிக்குத்தான் போகும். எத்தனையோ தீர்மானங்களை இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றினாலும் கூட, அவைகளையெல்லாம் இந்திய அரசு உடனடியாக எடுத்துச் செய்து விடும் என்று உத்தரவாதம் இல்லை. அதைத் தொடர்ந்து நாம் செய்ய வேண்டும். இல்லை என்றால், ஏற்கெனவே இந்த சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றிய போது இது வெறும் கண் துடைப்புத் தீர்மானம் என்று சொன்னதுதான் நிற்குமே தவிர, அதனால் உருப்படியான பலன் எதுவும் ஏற்படாது. ஆகவே, இந்த வழக்கு உச்சநீதி மன்றத்திலே வருகின்ற பொழுது தமிழ்நாட்டின் சார்பிலே ஒரு நல்ல வழக்கறிஞரை வைத்து தமிழ்நாட்டின் கருத்துக்களை, அதுவும் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை அங்கே எடுத்துச்சொல்ல வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

அரசுப் பணிகளில் பிற்பட்ட மக்களுக்கு போதிய இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்கிற இந்தச் சூழ்நிலையில் 'ஒட்டக் கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்கள்' என்பதைப் போல, இப்போது அரசாங்கம் செய்கிற காரியங்கள் எல்லாம் தனியார் துறைக்கு என்று ஆகிவிடுகிறது. அதுவும் குறிப்பாக இந்திய அரசு அந்த புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வந்ததன் விளைவாக பொதுத் துறையிலே கிடைத்த வாய்ப்புகள்கூட அருகி இன்று தனியார் துறைக்

கெல்லாம் போகின்றபோது அதனுடைய விளைவாக என்னவாகும் என்றால் கிடைத்து வந்த வாய்ப்புகள்கூட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கிடைக்காது. ஆகையினால் இந்த அரசு மந்திய அரசினிடத்திலே எடுத்துச் சொல்லி தனியார் துறையிலேயும் குறிப்பாக பாங்கியிலேயிருந்து பணத்தைப் பெறுகிறார்கள். பைனான்சியல் இன்ஸ்டிடியூசனிலேயிருந்து பணத்தைப் பெறுகிறார்கள். அரசாங்கத்தினுடைய உதவியைப் பெறுகிறார்கள். மின்சாரத்தைப் பெறுகிறார்கள். இப்படிப் பல வகையிலே பெறுகிறார்கள். ஆகையால் தனியார்த் துறையிலே இருக்கின்ற தொழில்களிலே உள்ள வேலை வாய்ப்புகளிலே கூட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பங்கைக் கொடுக்கவேண்டும். அதற்கு எல்லோரும் முயற்சிக்கவேண்டும். ஏனென்றால் மேலே நாடுகளிலேகூட அமெரிக்கா போன்ற நாடுகளிலேகூட அவர்களுடைய தொழில் நிறுவனங்களிலே கருப்பர்களுக்கு என்று ஓரளவிலே 'பாசிட்டிவ் அஃபர்மேஷன்' என்று தருகிறார்கள். அதையெல்லாம் இங்கே தரவிட்டால் இங்கே எதிர்காலத்திலே அரசாங்கம் சிக்கனத்தை மேற்கொள்கின்ற காரணத்தினாலே வாய்ப்புகள் குறைந்துபோகும். இருக்கின்ற வாய்ப்புகளும் இல்லாமல் போய்விடும். தனியார் துறையிலே இருக்கின்றவர்களும் இந்த சமுதாய நீதியை ஏற்றுக்கொள்கின்ற வகையிலே இந்திய அரசு அதற்கான சட்டத்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும், அதற்கு தமிழ்நாடு அரசும் வற்புறுத்தவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு கே. கே. சின்னப்பன்.

*திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் துறையின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மானிய கோரிக்கையில் பேசுவதற்கு வாய்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறிக்கொண்டு இந்த துறையின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நல்ல பல காரியங்களை இந்த அரசு அறிவித்துள்ளது. அதற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்பு பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஐ. ஏ. எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பயிற்சிகள் பெறுவதற்கு அந்த பயிற்சி நிறுவனத்தால் சரியான பயிற்சிகள் கொடுக்கப்படாத காரணத்தினாலே அவர்களுடைய விழுக்காடு குறைவாக இருந்தது என்பதை அறிந்து இன்றையதினம் நம்முடைய அரசு மிகவும் சிறப்பான முறையிலே மீண்டும் புனரமைப்பு செய்கின்ற வகையில் இன்றையதினம் அவர்களுக்குப் பயிற்சியினைக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும்



பின்தங்கிய மக்கள், மிகவும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துகின்ற அளவில் இன்றையதினம் தொழில் மேம்பாட்டு கழகத்தினை உருவாக்கி அதன்மூலம் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மாணவர்களுக்கெல்லாம் அதிகப்படியான வசதிகள் விடுதி வசதி, நூலக வசதி ஆகியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு 100 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12—50

இந்த நேரத்தில் நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் ஒரு கோரிக்கையாக வைக்க விரும்புகின்றேன், இன்றையதினம் பல ஆண்டுக் காலமாக இந்த பின்தங்கிய மக்கள், மிக்வும் பின்தங்கிய மக்கள், சீர்மரபினர்களுக்காக பல்வேறு வகையான நல கமிஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது சட்டநாதன் கமிஷன் என்றும், அம்பாசங்கர் கமிஷன் என்றும் அமைக்கப்பட்டது. அந்த கமிஷன்கள் எல்லாம் நல்லமுறையிலே ஒருசில ஆலோசனைகளை வழங்கி இருந்தும் மரியாதைக்குரிய சட்டநாதன் அவர்கள் , பின்தங்கிய மக்களுக்காக பல நல்ல அறிவுரைகளை வழங்கி அந்த நலக் கமிஷனுடைய பல திட்டங்களை எல்லாம் பின்தங்கிய மக்கள் அடையவேண்டும் என்ற உணர்வோடு கொடுத்திருந்தார்கள். அன்றையதினம் பொறுப்பேற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் காலத்தில் அந்த சட்டநாதன் கமிஷன் குழு தோண்டி புதைக்கப்பட்டது. அப்போது அந்த அமைச்சரவையிலேகூட மரியாதைக்குரிய பண்ருட்டியார் போன்றவர்கள் இருந்து அந்த சட்டநாதன் கமிஷனை புதைப்பதற்கு உறுதுணையாக இருந்துவிட்டு இன்றையதினம் இந்த சமுதாய மக்களுக்கு, குறிப்பாக சொல்லவேண்டும் என்று சொன்னால் வன்னிய சமுதாய மக்களுக்காக........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தருகிறார்கள். சட்டநாதன் கமிஷனுடைய பரிந்துரைகளில் சில அப்போது இருந்த அரசால் நிறைவேற்றப்பட்டன, சில பரிந்துரைகள் நிறைவேற்றப்படவில்லை. ஆகையினால் முழுவதுமாக போட்டு அப்படியே புதைத்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னது முழுமையாக அந்த குழுவினுடைய பரிந்துரைகள் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு துணையாக நீங்கள் அந்த அமைச்சரவையிலே அங்கம் வகித்தீர்கள் என்றுதான் அவர்கள் சொன்னார்கள்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஆரம்பம் முதல் கடைசி வரையிலே அமைச்சராகவும் அமர்ந்து அன்றையதினம் சட்டநாதன் கமிஷன் கூறியதிலே உள்ள பல்வேறு வகையான அதாவது பின்தங்கிய நிலையிலே உள்ள வன்னிய சமுதாயத்திற்காக பல்வேறு நல்ல கோரிக்கைகளை எல்லாம் அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேறுவதற்கு அதிலே ஆலோசனை வழங்கியிருந்தார்கள். அன்றையதினம் அந்த அரசிலே அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த பண்ருட்டியார் அவர்கள் அதைப்பற்றி எதுவும் சிந்திக்கவில்லை. ஆனால் இன்றையதினம் அந்த சமுதாய மக்களுக்காக உழைப்போம் என்று சொல்லிக்கொண்டு ஊர்வலம் வந்துக்கொண்டிருக்கிறீர்களே, அன்றையதினம் அந்த தி.மு.க. வன்னிய சமுதாய மக்களுக்காக அந்த திட்டத்தினை அமுல்படுத்தாத அந்த அரசைக் கண்டித்து நீங்கள் வெளியேறியிருப்பீர்களேயானால் (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையாகவே நான் பாராட்டக் கட்டமைப்பட்டிருப்பேன், ஆனால் அன்றையதினம் எப்படியாவது பதவி மாத்திரம் இருந்தால் போதும் என்ற உணர்வோடு இருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசாங்கம் ஒரு அமைச்சரவை என்கின்றபோது, அமைச்சரவையில் பலவற்றை எடுத்து ஒரு அமைச்சர் சொல்ல முடியும். ஆனால் அதையே அந்த அமைச்சரவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அப்படி ஒவ்வொரு முடிவுக்கும் வெளியேறுவது என்றால் எந்த அமைச்சரவையும் நிரந்தரமாக நிற்கமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சமுதாயத்திற்கு விரோதமாக செயல்பட்ட அமைச்சரவையிலே நீங்கள் தொடர்ந்து நீடித்து இருந்திருக்க



கூடாது என்று உறுப்பினர் அவர்கள் அவருடைய வாதத்திலே சொல்கிறார். நீங்கள் வெளியேறாதது தவறு என்றுதான் அவர் குறிப்பிடுகிறார் நீங்கள் ஏன் வெளியேறவில்லை என்று குறிப்பிட்டு இருப்பீர்களேயானால் நன்றாக இருந்திருக்கும். இல்லை என்றால் தைரியமாகச் சொல்லுங்கள். அந்த அமைச்சரவை உங்கள் சமுதாயத்திற்கு சாதகமாக இருந்தது. அந்த அமைச்சரவை எடுத்த முடிவுகள் எல்லாம் உங்களுடைய சமுதாயத்தினுடைய நன்மைகளை கருத்திலே கொண்டுதான் எடுக்கப்பட்டன என்று தைரியமாகச் சொல்லுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயம் என்றால் ஏதோ வன்னியர் சமுதாயம் என்று மட்டும்தான் என்று நினைத்து நான் செயல்படுவதில்லை. தமிழ்நாடு முழுவதும் என்று நினைத்துதான் என்னைப் பொறுத்தவரையில் எந்த அமைச்சரவையிலே இருந்தாலும் இருக்கிறேன். இன்றைக்கும் பாட்டாளி மக்கள் கட்சி என்பது இப்போது பேசியபோதுகூட சமுதாயம் அனைத்துக்கும்தான். ஆகையினால் வன்னிய மக்களுக்கு மட்டும்தான், அது கொடுத்தால் நான் இருப்பேன் கொடுக்காவிட்டால் நான் போவேன் என்றால் அப்போது ஜாதி வெறிதானே தலை தூக்குகிறது. அதை நான் என்றைக்குமே ஏற்றுக்கொண்டதில்லை. சமுதாய நீதி சில நேரங்களிலே சிலவற்றைச் சொல்ல முடிகிறது. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஆட்சி என்கின்றபோது ஒரு முதலமைச்சர் மட்டும்தான் முடிவெடுக்கமுடியும். முதலமைச்சர் டாக்டர் என்றால், மற்ற அமைச்சர்கள் கம்பவுண்டர்கள் மாத்திரம்தான். கம்பவுண்டர் இடத்திற்கு ஒன்றும் நடக்கமுடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய சமுதாய மக்களுக்கு விரோதமாக செயல்பட்ட டாக்டருக்குக் கீழே நீங்கள் கம்பவுண்டராக தொடர்ந்து பணியாற்றி கொண்டிருந்தீர்களே என்பதுதான் குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் பிற்படுத்தப்பட்டோர் இடமிருந்து எங்கோ போய்விடும் போல் இருக்கிறது. நல்வாழ்வுத் துறைக்கு போய் விடும் போல் இருக்கிறது.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு இருந்த விகிதத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை என்று சொல்ல முடியாது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கமிஷன் மூலம் அதிகப்படுத்தி இருக்கிறது. அதையெல்லாம் சொல்லப்போனால் அப்புறம் அந்த முதலமைச்சரை ஆதரித்துப் பேசுகிறேன் என்று நீங்கள் என்னிடத்திலே வரு

வீர்கள். நான் அதுதான் முதலிலேயே சொன்னேன். ஒரு அரசு என்கின்றபோது, ஒரு முதலமைச்சர் தலைமையிலே ஒரு அமைச்சரவை நடக்கிறது. அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ அதுதான் முடிவு. ஆனால் அதேநேரத்திலே எந்த பாதகமும் இல்லாமல் பார்த்துக் கொள்வதற்காக ஒரு சமுதாய அடிப்படையிலே, ஒரு சமுதாய நீதி அடிப்படையிலே அமைச்சர்கள் செயல்படுவார்கள். அது வேறு. திடீரென்று இன்றைக்கு ஒரு அமைச்சர் இன்றைய அமைச்சரவையிலே இருக்கிறார். நாளைக்கு பார்த்து நீங்கள் ஏன் ராஜிநாமா பண்ணவில்லை, அந்த முடிவு எடுத்தபோது என்றா கேட்கமுடியும். ஒரு அமைச்சரவையும் இயங்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.கே. சின்னப்பன்.

திரு. கே.கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அந்த அமைச்சரவை இருந்தபோது, அவர் அமைச்சராகத்தான் இருந்தார்கள். ஆனால் அந்த சமுதாயத்தைப் புறக்கணித்தார்கள். அதையெல்லாம் அப்போது எதிர்த்துக்கூட ஒரு சாதாரண அறிக்கை கொடுக்கவில்லை. ஆனால் நீங்கள் இதுபோன்ற சிறிய காரியங்களுக்காக மற்றவர்கள் எல்லாம் வெளியேறியும், நீங்கள் வெளியேறாது அமைச்சராக இருந்தீர்கள். (குறுக்கீடு)

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) நீங்கள் சொல்லிவிட்டீர்கள், முன்னாடியே. அவர் அதை முடிக்கட்டுமே. (குறுக்கீடு) அவர் புதிய உறுப்பினர். நீங்கள் அவர் பேச்சில் குறுக்கிடுவது என்பது வேறு. உங்கள் பேச்சில் அவர் குறுக்கிடுவது என்பது வேறு. நீங்கள் அவர் முழுமையாகப் பேசி முடித்துவிட்ட பிறகு சொன்னீர்கள் என்றால் அது நன்றாக இருக்கும். திரு.கே.கே. சின்னப்பன்.

பிற்பகல் 12-55

திரு. கே.கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றையதினம் மாத்திரம் அந்தச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்டவர்களை எல்லாம் நம்பி அந்தச் சமுதாயத்திலே இருந்த நண்பர்கள்-அப்போது நீங்கள் கேட்டது, முதன் முதலாக நீங்கள் எழுப்பியது அந்த வன்னியர் சமுதாயத்திற்கு



20 சதவீதம் பெற்றுத்தருவதாகத்தான். நீங்கள் மக்களிடத்திலே அந்தப் பொய்யான வாக்குறுதியைக் கொடுத்தீர்கள். ஆனால் இன்றையதினம், இப்போது கூட கூறுகின்றீர்கள் நாங்கள் அப்படி கேட்கவில்லை என்று. இந்த நிலையிலே இன்றையதினம் நீங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் அறியாமையில் இருக்கிற அந்த வன்னிய சமுதாய மக்களை, பின்தங்கிய சமுதாயமாக இருக்கிற, பொருளாதார ரீதியில் முன்னேறாமல் இருக்கிற மக்களை நீங்கள் எங்கோ திசை திருப்பி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நிச்சயமாக இன்றையதினம் உங்களுடைய தலைமையை ஏற்றுக்கொள்வதற்கு அந்த வன்னியச் சமுதாய மக்கள் தயாராக இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, எங்களுடைய பகுதியிலே நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியமும், அதாவது பின்தங்கிய நிலையிலே, பொருளாதார ரீதியிலே அவர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும்; அவரைப் பார்த்தே பேசிக்கொண்டிருக்கிறீர்கள். தலைவரைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. கே.கே. சின்னப்பன் : குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய உடையார்பாளையம் தாலுகாவைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியிலே வன்னியர்கள் வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியிலே வாழ்கின்ற சிறுபான்மை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மரியாதைக்குரிய பண்ருட்டியார் அவர்கள் இங்கே மனித நேயத்தோடு பழகவேண்டும், இருக்க வேண்டுமென்று போலீஸ் மானியத்திலே குறிப்பிட்டார்கள், நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அன்றையதினம் உங்களுடைய திருவனர் சேத்தியாதோப்பு காவல் நிலையத்தை முற்றுகையிட்டு, அந்தப் பகுதியிலே அன்றையதினம் சந்தைக்குச் சென்றுவிட்டு வந்த சாதாரண மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, பின்தங்கிய மக்களை விரட்டியடித்து, அவர்கள் சந்தையிலே விற்றுவந்த பணத்தை எல்லாம் பிடுங்கினீர்களே ; பணத்தை எல்லாம் பிடுங்கிவிட்டு, அடித்து காட்டுவழியாக ஓடுங்கள் என்று கூறினீர்களே, இதுதான் மனித நேயமா (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் மாண்புமிகு பண்ருட்டியார் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் அந்தச் சமுதாய மக்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் வெல்லத்திலே விஷத்தை வைத்துக்கொடுப்பதைப் போன்று அவர்களுக்கு 20 சதவீதம் வாங்கிக் கொடுப்பதாகச்

சொன்னதை நம்பி, அந்த நேரத்திலே அறியாமையிலிருந்த அந்த மக்கள் உங்கள் பின்னாலே வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் நீங்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்றாலும், பின் தங்கிய மக்கள் வாழ்கின்ற, வன்னியர்கள் சமுதாயம் வாழுகின்ற பகுதியிலே உள்ள மக்கள் எல்லாம் தமிழக முதல்வராகப் பொறுப் பேற்றிருக்கிற டாக்டர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையை ஏற்று (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பின்னாலே சென்ற நாங்கள் 20,000 வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெற்றிருக்கிறோம்என்று சொன்னால் உங்கள் பின்னாலே அந்த மக்கள் இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

அதை உணர்ந்துதான் இன்றையதினம் நீங்கள் எல்லாம், வன்னியர்களை வாழ வைப்பவர்களாக வந்தவர்கள், இலங்கைப் போராளிகளை ஆதரித்து வெளிநாட்டு சக்திகளுக்கு பின்னால் அதாவது விடுதலைப் போராளிகளுக்குப் பின்னாலே சென்றுகொண்டிருக்கிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

நேற்றையதினம்கூட நான் ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அந்தக் கிராமத்திலே சுமார் 500 மக்கள், வன்னியர் சமுதாய மக்கள் வாழ்கின்றார்கள். பாப்பான்தோப்பு என்பது அந்தக் கிராமத்தின் பெயர். அந்தக் கிராமத்திலே உள்ள அத்தனை மக்களும் நேற்றையதினம் இந்திய தேசிய காங்கிரஸ் கொடியை ஏற்றினார்கள். எங்களுடைய தோழமைக் கட்சியுடன் சேர்ந்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அங்கே இருந்த காரணத்தாலே அவர்களை அழைத்து கொடியை ஏற்றுகின்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறங்களிலே மக்கள் விழிப்பு உணர்வோடு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். எங்களுடைய உடையார்பாளையம் தாலுகாவிலே இருக்கிற மக்கள் எல்லாம் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுடன் இணைந்து, அங்கே ஒரு நிலக்கரி சுரங்கத்தை அமைத்து, மின் உற்பத்தி நிலையத்தைத் தொடங்கும் மகத்தான திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். அதைப் பொறுக்காதவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், மிகவும் பின் தங்கிய மக்கள், அங்கே அதிகமாக வாழுகின்ற வன்னியர் மக்கள்—இத்திட்டத்தை நிறைவேற்றினால்—இவர்களுக்குக் கொடி தூக்க மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உணர்வின் காரணமாக இன்றையதினம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற விடமாட்டோம் என்று கூறி தெருமுனைப்பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி தெருமுனைப் பிரச்சாரம் என்று சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் பாரத பிரதமர் அவர்களையும் குறிப்பிட்டு தவறாக பேசிவருகிறார்கள். இருந்தாலும் அந்தப் பகுதியிலே வாழுகின்ற ஏழை எளிய மக்கள், வன்னிய மக்கள் ஒருநாள் தான் சென்றார்கள், ஒரு நாளிலேயே கிராமத்து மக்கள் இவர்களை எல்லாம் விரட்டி அடித்த பின்பு இப்போது நகரத்திலே முகாம் அடித்துக்கொண்டு திட்டத்தை நிறைவேற்ற விடமாட்டோம் என்று பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக அடுத்தமாதம் 12-ந் தேதியோ அல்லது 14-ந்தேதியோ ஒரு பெரிய போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த நிலக்கரி சுரங்கத்தை நாங்கள் ஆரம்பிக்க விடமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் அந்தப் பகுதியிலே இருக்கிற வன்னிய, ஆதிதிராவிட மக்கள் வாழக் கூடாது என்று நினைக்கிறீர்களா? பொருளாதார ரீதியில் அவர்கள் முன்னேற வேண்டாம் என்று எண்ணுகிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய எண்ணத்தை இந்த அவையிலே தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-00

மேலும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்கள் பல்வேறு வகையிலான கமிஷன்களை எல்லாம் அமைத்திருக்கிறார்கள். இந்தக் கமிஷன்களை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு, கடைசிவரை நிலைத்திருக்கிற இந்த அரசு பல்வேறு வகையிலான மக்களிடமிருந்து வருகிற கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலனை செய்து, புதிதாக பின்தங்கிய மக்கள், மிகவும் பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருடைய கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து, முன்னேறிய அதாவது இப்போது இருக்கிற பிராமணர்களைப் போன்ற, பிராமணர்கள் முதல் கடைசி தட்டில் இருக்கிற நரிக்குறவர்கள் வரையிலே அனைத்து மக்களுடைய கோரிக்கைகளையும், இங்கே புரட்சி தலைவர் அவர்கள் இறப்பதற்கு முன்பாக, அனைத்து இன மக்களையும் அழைத்துப் பேசினார்கள். அந்த பைல்கள் எல்லாம் இங்கே அரசிடத்திலே இருக்கும் என்று எண்ணுகின்றேன். எனவே, அதையும் பெற்று நீங்கள் மீண்டும் ஒரு நல்ல திறமையான அரசை அமைத்திருக்கிறீர்கள். அனைவருடைய கோரிக்கையையும் ஏற்று, இன்றைய தினம் ஒருசிலர், இங்கே பேசுகின்ற பெரியவர்கள் எல்லாம் எங்களுடைய வன்னியர் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் போராடி அவர்களுக்கு ஒதுக்கீட்டை வாங்கித் தருவதாக குறிப்பிடுகிறார்கள், உண்மையிலேயே எங்களைப் பொறுத்த அளவில் இந்த சமுதாயத்திற்கு செய்ய வேண்டுமென்று சொன்னால், இந்த சமுதாயத்திலே, அடித்தட்டிலே இருக்கின்றவர்களை,

ஒருவேளை கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் கிராமப்புறங்களில் வாடுகின்றார்களே அந்த வன்னிய சமுதாய மக்கள் பயன் பெறுகின்ற வகையில் சலுகையை வழங்க வேண்டும். இந்த அரசு கொடுக்கின்ற ஒதுக்கீடுகள் அவர்களை சென்றடைய வேண்டும். இன்றைக்கு ஏதோ மேல் தட்டிலே இருந்துகொண்டு அதாவது ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாகவும், ஐ.பி.எஸ். அதிகாரிகளாகவும் இருப்பவர்கள் மற்றும் அரசியல் ரீதியாக முன்னேறியவர்களாக இருக்கிறார்களே அவர்களுக்கு எல்லாம் இந்த ஒதுக்கீடுகள் சென்று சேருமேயானால் நிச்சயமாக இந்த சமுதாய மக்கள் இப்போது எப்படி பொருளாதார ரீதியாக முன்னேறாததன் காரணமாக ஒருசிலரின் தவறான வழிக் காட்டுதலுக்குப் பின்னாலே செல்கிறார்களோ அது போல சென்றுவிடுவார்கள். அதனால் இந்த மக்கள் எல்லாம் இன்றையதினம் இந்த அரசையும், புரட்சித் தலைவி அவர்களையும் தங்கள் கடவுளாக எண்ணுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்காக நிச்சயமாக வர இருக்கின்ற ஓராண்டிற்குள் வழிவகை செய்யவேண்டும். அந்த மக்கள் எல்லாம் உங்கள் பின்னால் இன்றையதினம் இருக்கிறார்கள். அந்த மக்கள், காட்டிக் கொடுக்கின்றவர்களுக்குப் பின்னாலே எல்லாம் செல்லாத அளவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து நன்மைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே முத்தரையர் இனத்தைச் சார்ந்தவர்கள், அம்பலக்காரர்கள் இவர்களை மாத்திரம் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். இவர்களைச் சேர்ந்த வலையர் போன்ற மற்ற இனத்தவர்களுக்கும் இவர்களுக்குள்ளும் தங்களுக்குள் பெண் கொடுப்பது, எடுப்பது போன்ற உறவு முறைகள் இருக்கின்றன. எனவே இந்த சமுதாயத்திலே உள்ள அனைத்து மக்களையும் இந்த மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைச் பொறுத்தவரையில் ஒருசில வார்த்தைகள் கூறி முடித்துவிடலாம் என்று எண்ணுகின்றேன். என்னுடைய தொகுதியில் அதிகப்படியாக பின்தங்கிய மாணவர் விடுதிகள் இன்றையதினம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே, கடந்த ஆண்டு கூட, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாதாரண ஏழையெளிய மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற உணர்வோடு 50 மாணவர்கள் இருந்தவிடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை 100 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். கடந்த வருடத்திலே பார்க்கும்போது அது எத்தகைய கட்டிட வசதியும் இல்லாமல், பிள்ளைகள் எல்லாம் நின்று கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருந்தது. அந்நிலை இல்லாமல் என்னுடைய தொகுதியிலே மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற



ஜெயங்கொண்டம், உடையார்பாளையம், தா.பழூர் போன்ற பகுதிகளில் உள்ள மாணவர்கள் விடுதிக்கு நல்லபடியாக கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுந்து, அங்கே வர இருக்கின்ற நிலக்கரிச் சுரங்கத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியில் இருக்கிற அனைத்து மக்களும் இங்கே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை வந்து பார்க்க வேண்டுமென்ற உணர்வோடு இருக்கிறார்கள். அங்கே எவ்வளவு பெரியவர்கள் போராட்டம் நடத்தினாலும், அவர்கள் பின்னால் அங்குள்ள மக்கள் இல்லை என்பதைத் தெரிவித்து, அந்த நிலக்கரிச் சுரங்கத்தை உடனே ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை அந்தத் தொகுதி மக்களின் சார்பாக மிகவும் பணிவன்புடனும், தாழ்மையுடனும் கேட்டுக்கொண்டு, வாய்ப்பினைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைக் கூறி விடைபெறுகின்றேன், ஜெய்ஹிந்த். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ச. இராமச்சந்திரன்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of personal explanation மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசட்டும் என்று பொறுமையாக நாங்களும் கேட்டுக்கொண்டிருந்தோம். இதிலே இரண்டு இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருந்ததை பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பொறுமையாக கேட்டுக்கொண்டிருந்தார். நாங்கள் அனைவரும் ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> நானும் அதை ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஏன் என்றால் என்னப் பேசுகிறோம் என்பதிலே அவருடைய கண்ணோட்டத்திற்கும் எங்களுடைய கண்ணோட்டத்துக்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. பாட்டாளி மக்கள் கட்சி என்பது வன்னியர் கட்சி அல்ல. இதை நாங்கள் பல முறை, பல இடங்களில் தெரிவித்திருக்கிறோம். வன்னியர் சங்கம் என்பது வேறு, பாட்டாளி மக்கள் கட்சி என்பது வேறு. பாட்டாளி மக்கள் கட்சி என்று துவக்கப்பட்டு, அதனுடைய செயல்பாடுகளை அவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்ப்பார்களான ‥ தெரியும். இந்த நாட்டிலே

உள்ள ஏழை எளிய மக்களை மையமாக வைத்து, அந்த அடிப்படையிலே மட்டும்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

பிற்பகல் 1–05

அடுத்து, ஜெயங்கொண்டம் பகுதியிலே இருக்கக்கூடிய, வரக்கூடிய மின் உற்பத்தித் திட்டம். அது இந்த மானியத்தில் இல்லை. ஆனாலும், அவர் பேசினார். இந்த மன்றத்தில் பேசுவதற்கு—அவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்—உரிமை இருக்கிறது. . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, அவருடைய தொகுதி பின்தங்கியோர் நிரம்பி இருக்கிற தொகுதி. சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினர் அவர். என்னுடைய தொகுதி பின்தங்கியோர் மிகுந்திருக்கிற தொகுதி, அந்தத் தொகுதியில் உள்ள அந்தப் பின்தங்கியோரை முன்னேற்றுவதற்காக வர இருக்கிற திட்டம் என்றுதான் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் 7,000 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு திட்டம். 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் அது. இதை, இந்த மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள கட்சியினர் தடுப்போமென்று சொல்லுகிறார்கள். எனவே, இத்தகைய ஒரு திட்டம் தமிழ்நாட்டுக்குக் கிடைப்பதென்றால், தமிழ்நாட்டுக்கே அது ஒரு வரப்பிரசாதம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி ஜெயங்கொண்டம் போன்ற ஒரு பின்தங்கிய தொகுதியில் இத்தகைய ஒரு மகத்தான திட்டம் அமையப் போவதை அந்த மக்களுடைய நல்வாழ்வில் அக்கறை உள்ளவர்கள் யாராக இருந்தாலும் வரவேற்க வேண்டும், ஆதரிக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் நிறுவனத் தலைவர் அவ்வப்போது இதை தடுப்போம், அந்தத் திட்டத்தை அங்கே ஏற்படுத்த விடமாட்டோம், அங்கேயிருந்து ஒரு துளி நிலக்கரியைக்கூட வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று பேசி வருகிறார். இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

திரு. ச இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அந்தத் திட்டத்தை நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் செய்யலாம் அல்லது தமிழ்நாடு அரசு செய்யலாம் ; தனியாரிடத்தில் கொடுப்பது கூடாது என்பதைக் கொள்கை ரீதியாகத்தான் நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம்.



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தனியாரிடம் கொடுக்கவில்லை. இது ஒரு ஜாயின்ட் செக்டார் வென்சர். அதுமட்டுமல்லாமல் நெய்வேலி நிறுவனத்தாரிடம் இப்போது இதைக் கொடுத்தால் அவர்களால் நிறைவேற்ற முடியாது. ஏற்கெனவே அங்கேயுள்ள எக்ஸ்டென்ஷனையே அவர்களால் நிறைவேற்றித் தர முடியவில்லை. எனவே, இந்தப் புதிய த்திட்டத்தை அவர்களால் தற்சமயம் இன்னும் பல ஆண்டுகளுக்கு நிறைவேற்றித் தர முடியாது என்பதால்தான் தமிழக அரசுதான் இதைச் செய்கிறது. தமிழக அரசு தனியாகச் செய்ய முடியாமல், அதை ஜாயின்ட் செக்டார் வென்சராகச் செய்கிறது.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் கொள்கை ரீதியாக பாட்டாளி மக்கள் கட்சி எதிர்க்கிறதே தவிர, வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே கேட்ட கேள்வி, நீங்கள் அங்கம் வகித்த அமைச்சரவை, பின்தங்கிய சமுதாயத்திற்குத் துரோகம் இழைத்துவிட்டதாகக் கருதியிருப்பீர்களேயானால், ராஜினாமா செய்திருக்க வேண்டுமென்பது ஒன்று. அதற்கு நேரடியாக அவர் பதில் சொல்லவில்லை. அதே அமைச்சரவையில் அங்கம் வகித்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர், அந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டது என்று காரணம் காட்டி, அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்திருக்கிறார். இப்படிப்பட்ட காரியங்களுக்கு ராஜினாமா செய்தால் எப்படி அமைச்சரவை இயங்கும் என்று கேட்டாரே, உங்களோடு இருந்த அமைச்சரே ராஜினாமா செய்திருக்கிறார் என்பதை நினைவுபடுத்தி, உள்ளபடியே அந்த முதலமைச்சர் பின்தங்கிய சமுதாய மக்களுக்கு தவறு இழைத்து விட்டார், தீங்கு இழைத்து விட்டார், துரோகம் இழைத்து விட்டார் என்று நீங்கள் கருதி இருப்பீர்களேயானால் நீங்கள் ராஜினாமா செய்திருக்க வேண்டுமென்பதைதான் உறுப்பினரவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

பிற்பகல் 1-10

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்

குறித்து சுமார் ரூ. 37 கோடிக்கும் சற்று குறைவான இந்த மானியக் கோரிக்கையின் மீது 9 உறுப்பினர்கள் இந்த சட்ட மன்றத்திலே விவாதத்திலே கலந்துகொண்டு பல்வேறு கருத்துக் களை எடுத்துவைத்திருக்கின்றார்கள்.

வெட்டுத்தீர்மானங்கள் என்கின்ற பெயரால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ராஜு அவர்கள், திரு. சுதர்சனம் அவர்கள், திரு. ராமசுப்பு அவர்கள், திரு. அபுல்ஹாசன் அவர்கள், திரு. தெய்வநாயகம் அவர்கள், திரு. வெங்கடேசன் அவர்கள், திரு. ராஜாராமன் அவர்கள், திரு. சிங்காரம் அவர்கள், திரு. சுவாமிநாதன் அவர்கள், திரு. தங்கராஜு அவர்கள், திரு. செல்வராஜு அவர்கள், திரு. சுந்தரதாஸ் அவர்கள், திரு. ஆண்டி அம்பலம் அவர்கள், திரு. ஞானசேகரன் அவர்கள், திரு. லட்சுமணன் அவர்கள், திரு. சின்னப்பன் அவர்கள், திரு. பன்னீர்செல்வம் அவர்கள், திருமதி ரமணி நலலதம்பி அவர்கள் மற்றும் திரு. பழனிசாமி அவர்கள் டாக்டர் குமாரதாஸ் அவர்கள், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள், திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஆகிய 23 உறுப்பினர்கள் 55 வெட்டுத் தீர்மானங்களின் கொள்கை பற்றி விவாதிக்கவும், புதிய விடுதிகள் தொடங்குவது பற்றியும், விடுதிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவது பற்றியும், வீடுகள் கட்டித் தருவது பற்றியும், வீட்டு மனைகள் வழங்குவது பற்றியும், இலவச உணவுத் திட்டத்திற்கான வயது வரம்பை உயர்த்துவது பற்றியும், படிப்புதவித் தொகை அளவை உயர்த்துவது பற்றியும், மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குவது பற்றியும், சிறு தொழில்மற்றும் விவசாயம் செய்ய உதவுவது பற்றியும், தனியார் நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது பற்றியும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் பற்றியும், மூன்றாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அமைத்தல் பற்றியும், ஒதுக்கீட்டு விழுக்காட்டை உயர்த்துதல் பற்றியும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இனவாரி இட ஒதுக்கீடு அளித்தல் பற்றியும் ஆன பல்வேறு கருத்துக்களை வெட்டுத் தீர்மானங்களிலே தெரிவித்திருக் கிறார்கள்.

இவைகளில், வீடு கட்டித்தருவது, உணவுத் திட்டத்திற்கான வயது வரம்பை உயர்த்துவது, படிப்புதவித் தொகையின் அளவை உயர்த்துவது, விவசாயம் செய்ய உதவுவது, தனியார் நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பது, மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல், மூன்றாவது பிற்படுத்தப்பட்டோர் நலன் குழு அமைத்தல், ஒதுக் கீட்டு விழுக்காட்டை உயர்த்துதல், பிற்படுத்தப்பட்ட இனவாரி கமிஷனில் இட ஒதுக்கீடு தவிர மற்ற கோரிக்கைகள்பற்றி அவையில் வைக்கப்பட்டுள்ள இத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.



எனவே என்னுடைய உரையின் இறுதியில் இவைபற்றிய பொதுவான கருத்துக்களை, அரசினுடைய நிலையை, அரசின் சார்பிலே விளக்க வேண்டிய கருத்துக்களை எடுத்து விளக்க நான் விரும்புகிறேன். பிற்பட்டோர் நல மானியத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, மாண்புமிகு பண்ருட்டி இராமச் சந்திரன் அவர்கள் 6,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்கிற இந்த அரசில், அதிலும் முதலீட்டுச் செலவையெல்லாம் சேர்த்து 10,000 கோடி ரூபாய் செலவு செய்கிற அரசு 37 கோடி ரூபாய்க்குத்தான் மானியம் கேட்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

இங்கே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. கே. கே. சின்னப்பன் அவர்கள் நான் அளிக்கவேண்டிய சில பதில்களை அவர்கள் மிகத்தெளிவாக முன்னாலேயே அளித் திருக்கிறார்கள். இருந்தாலும் அதிலே இன்னும் சில விளக்கங் களை நான் இறுதியிலே விளக்க விரும்புகிறேன். ஆனால் ஒரு கருத்தை இங்கே நான் பதிலாக அளித்தால் தான் அதைத் தொடர்ந்து என்னுடைய வாதத்தை நான் தொடருவதற்கு அது வாய்ப்பாக இருக்கும். பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் என்ற ஒரு துறை உருவாக்கப்பட்டு, அந்தத் துறைக்காக சுமார் 37 கோடி ரூபாய் இங்கே மானியம் கோரப் பட்டிருக்கிறது என்றால், இந்த மாநிலத்திலே இருக்கின்ற 67 விகித பிற்பட்ட இன மக்களுக்கும் இந்த 37 கோடி ரூபாய் தான் இந்த அரசு ஒதுக்குகிறது என்று சொன்னால், இதை மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர் கள்—எல்லா தலைமையிலேயும் அமைந்த அமைச்சரவை களில் இடம் பெற்று — இங்கே மாண்புமிகு உறுப்பினர் சின்னப்பன் அவர்கள் சுட்டிக்காட்டினார்களே, தன்னுடைய கருத்துக்கு முரண்பாடாக, தான் சார்ந்திருக்கின்ற மிகப்பெரிய இனத்திற்கு விரோதமாக கொள்கை முடிவெடுக்கிற ஒரு ஆட்சி யிலேகூட கடைசிவரை இருந்துவிட்டு, அந்த ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு அதிலிருந்து விலகி, அதற்குப் பிறகு புரட்சித் தலைவரின் ஆட்சியிலே அமைச்சராகவும் இருந்து, நீண்ட அனுபவம் பெற்றவர் என்கிற உரிமையை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இராமச்சந்திரன் போன்றவர்கள், ஒரு அரசுத்துறையிலே 37 கோடி ரூபாய் ஒதுக்கினால் அது தமிழ்நாட்டிலே இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் ஒதுக்கப்படுகின்ற தொகை என்று அவர் சொன்னால், இதைப் பார்த்து இந்த நாட்டு மக்கள் சிரிப்பார்களா, மாட்டார்களா என்பதை நான், பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

**பிற்பகல் 1.15**

இந்த அரசு ரூபாய் ஆறாயிரம் கோடிக்கு அதிகமாக செய்கிற செலவிலே மிகப் பெரும்பாலான துறைகள், இங்கே இரண்டு

நாட்களுக்கு முன்பு பெறப்பட்ட மானியக் கோரிக்கைகளும், இதற்குப் பின்னாலே வரப்போகிற மானியக் கோரிக்கைகளும், பல்வேறு துறைகளின் பெயராலே வந்தாலும் அவைகளிலே பெரும்பகுதி பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட இந்தச் சீர் மரபினருக்கு போய்ச் சேருகிறது என்பதை மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்களும் அறிவார். அவர் மறந்துவிட்டார் என்று நான் சொல்லவில்லை. அவர் தெரியாமல் சொன்னார் என்றும் நான் சொல்லவில்லை. அவர் செய்திகளைப் போட்டுக் குழப்புவதிலே மிகுந்த கை தேர்ந்தவர், அவருடைய கெட்டிக்காரத்தனம், தயவு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவியின் தலைமையில் இருக்கிற இந்த அரசினிடத்திலே செல்லாது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதை மாத்திரம் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் அவரைத் தனிப்பட்ட முறையில் குறைவாகவோ அல்லது குற்றம் சுமத்தியோ பேச வேண்டும் என்று விரும்பவில்லை. ஏதோ இவ்வளவு காலம் நூறு கோடி, இரு நூறு கோடிக்கு இந்த பிற்பட்ட நலத்துறையிலே மானியங்கள் வந்ததைப் போலவும் அவர் அமைச்சராக இருந்தபோது இதைவிட அதிகமாக வந்ததைப் போலவும், இப்போது ஏதோ குறைவாக 37 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களே என்று கேட்பது அவருடைய சாதுரியத்தை, சாமர்த்தியத்தை, இன்னும் சொல்லப் போனால் தந்திரத்தை அவரே மெச்சிக்கொள்ளலாமே தவிர, அது உண்மையை வெளிப்படுத்துவதாக இருக்காது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதை மிகுந்த கவனத்தோடு அவருக்கு உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பட்டோர் நலத் துறை என்று சொல்லுகிற போது, இந்த ஆட்சியே பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அதைத் தொடர்ந்து மற்ற மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிற ஆட்சிதான். ஆனால் இந்தியாவில் இன்றைக்கு பேசப்படுகிற மண்டல் கமிஷன் பற்றியெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் அதிலே கூட இந்திய அரசின் நிலை என்ன, தமிழக அரசின் நிலை என்ன என்றெல்லாம் கேட்டார்கள். இந்திய அரசின் நிலை தினசரி பத்திரிக்கைகளிலே வந்து கொண்டிருக்கிறது. அது உச்ச நீதிமன்றத்திலே இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது. நான் மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன். சென்ற முறை இங்கே இந்த மானியக் கோரிக்கையை இந்தச் சபையிலே கோரிப் பெற்ற மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த மண்டல் கமிஷனைப் பற்றி, பிற்படுத்தப்பட்டோர் கொள்கையைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்து இங்கே விளக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதிலேயிருந்து எந்த மாறுதலும் ஏற்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் உச்ச நீதி மன்றத்திலே இருக்கிற அந்த வழக்கில் நாமும் ஒரு பார்ட்டியாக



சேருவதற்கு முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி திரு. சிவசுப்பிரமணியம் அவர்களை அதற்காக நியமித்திருக்கிறோம். சமயம் வருகிறபோது தமிழக அரசின் சார்பில் இந்த 50 சதவீத விழுக்காடு குறையக் கூடாது, இதை நிறைவேற்ற வேண்டும். மேலும் பொருளாதார அடிப்படையிலே நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, கல்வி, சமுதாய பிற்படுத்தப்பட்ட சூழ்நிலையை வைத்துத்தான் இவைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று தெரிவிப்பார்.

அது மாத்திரமல்ல, இப்போது ஏதோ மண்டல் கமிஷன் கொடுத்திருக்கிற அறிக்கை சர்வரோக நிவாரணி என்று பேசுகிறார்கள். 27 சதவீதத்தை கொடுத்திருக்கிறார்கள். அதையும் வேலை வாய்ப்புகளிலே தான் கொடுத்திருக்கிறார்கள். கல்வித் துறையிலே கிடையாது. இதைத்தான் மிகத் தெளிவாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். சென்ற முறை இந்த மாமன்றத்திலே, மானியக் கோரிக்கையிலே பதில் அளித்த போதும் விளக்கியிருக்கிறார்கள். இதுதான் தமிழக அரசினுடைய மிகத் தெளிவான நிலை. ஆனால் இதில் எழுபது ஆண்டுக்கால வரலாற்றை தமிழகம் பெற்றிருக்கிறது. இந்தியாவில் மற்ற மாநிலங்களில் இந்த உணர்வு சமீப காலத்திலே தோன்றியிருக்கலாம். கர்நாடகாவிலே இருக்கிறது, கேரளத்திலே இருக்கிறது என்று அடிக்கடி எடுத்துக் காட்டுகிறார்கள். இதற்கு வித்திட்டதே தமிழ் மாநிலம் தான். இதற்கு வழிகாட்டியவர்களே நம்முடைய நீதிக் கட்சியின் தலைவர்கள்தான். அதிலே பாரம்பரியமாக வந்து கொண்டிருக்கிற ஆட்சியின் இன்றைய சின்னம் தான், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, இன்னும் சீர்மரபினர் என்று சுட்டிக் காட்டப்படுகிற அந்த கோடானு கோடி மக்களுடைய தமிழக மக்களின் சின்னமாகத்தான் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இன்றைக்கு இந்த ஆட்சி மிகச் சிறந்த திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறது, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இதிலேயிருந்து நீங்கள் மாற்றிவிடலாம் என்றால், நீங்கள் மாறிக் கொண்டிருக்கலாமே தவிர மக்களை மாற்ற முடியாது.

பிற்பகல் 1.20

இங்கே கூடச் சொன்னார்கள். 'நாங்கள் ஒரு சாதிக் கட்சியைச் சேரவில்லை ; கொள்கையைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம் ; பாட்டாளிகளைப் பற்றித்தான் பேசுகிறோம், என்றார்கள். பசு வேடம் போட்டுக் கொண்டு வந்தாலும், புலி தான் உள்ளே இருக்கிறது என்பதை இந்தத்

[திரு. இராம வீரப்பன்] [1992 மார்ச் 23

தமிழகம் மிகவும் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் தேர்தலிலே உங்களைப் புறக்கணித்து விரட்டி வைத்தார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் பசுத் தோல் போர்த்திய புலி. புலி என்றால், புலிக்கும் சில நலல குணங்கள் கூட உண்டு. ஆனால், இது வெறி பிடித்த புலி ; இரத்த வெறி பிடித்க புலி ; சாதி வெறி பிடித்த புலியாக இன்றைக்குத் தமிழகத்தை மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு பசுத் தோல் போர்த்திக் கொண்டு வருகிறார்கள். அதுவும் இந்த ஆட்சியினிடத்திலே, இந்தத் தலைவரிடத்திலே, இந்த முதல்வரிடத்திலே நடைபெறாது; வெற்றி பெறாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஏன் இவ்வளவு அழுத்தமாக இதைச் சொல்கிறேன் என்றால், பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சீர்மரபினர், இவர்களை பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேல் சாதியிலே இருக்கிறவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக ஆக வேண்டுமென்று விரும்புகிறார்கள் ; பிற்படுத்தப்பட்டவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக ஆக வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்கள், தாழ்த்தப்பட்டவர்களாக ஆக வேண்டுமென்று விரும்புகிறார்கள். இது ஒரு துரதிருஷ்டவசமான நிலைமைதான். ஒரு நாட்டில் மக்கள் சமுதாயம், 'நாங்கள் முன்னேற வேண்டு'மென்று விரும்புவார்களே தவிர, 'நாங்கள் மேலே எற வேண்டு'மென்று விரும்புவார்களே தவிர, 'நாங்கள் கீழே போக வேண்டு'மென்று கேட்பது இந்த நாட்டினுடைய துரதிஷ்டம் 1992 ஆம் ஆண்டிலே நீதிக் கட்சியினுடைய மிகச் சிறந்த. அந்தக் கொள்கைக்கு, இலட்சியத்திற்கு வெற்றி கிடைத்ததற்குப் பிறகும், 20 ஆண்டுகளாக, 25 ஆண்டுகளாக இங்கே திராவிடர் இயக்கத்தினுடைய ஆட்சி நடைபெற்று, இன்றைக்கு அந்த ஆட்சியின் சிகரமாக விளங்குகிற ஒரு தலைவரின் தலைமையிலே அந்த இலட்சியங்களை நிறைவேற்றிக் சொண்டிருக்கிற நேரத்தில் சாதியின் பேராலே ஒரு கட்சி நடத்தலாம், ஒரு அரசியல் நடத்தலாம் என்று சில பேர் துணிந்து வந்து இருக்கிறார்களே, அந்த துரதிஷ்டவசமான நிலைமையினாலேதான் இன்றைக்கு இந்த மக்கள் 'எங்களைப் பின்னாலே தள்ளுங்கள், பின்னாலே தள்ளுங்கள்' என்று கேட்கிற சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவருக்கு அந்த உணர்வு வரும். அவர் தேசிய இயக்கத்தைச் சார்ந்தவர். அதைப் போலத்தான் திராவிடர் இயக்கத்திலே இருக்கிற எங்களுக்கும். திராவிடப் பாரம்பரியத்திலே வந்திருக்கிற எங்களுக்கு, யார் யார் தாழ்த்தப்பட்டவர்களோ, யார் யார் அழுத்தி வைக்கப்பட்டவர்களோ, யார் யார் அடக்கி வைக்கப்பட்டவர்களோ, யார் யார் பிற்படுத்தப்பட்டவர்களோ, யார் யார் மிகுந்த பிற



1992 மார்ச் 23] [திரு. இராம வீரப்பன்]

படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களை அரசாங்கம் கை தூக்கி விட வேண்டுமென்ற இலட்சியத்திற்காக எங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கிறவர்கள், அந்த இலட்சியத்திலிருந்து நாங்கள் வளர்ந்து கொண்டு வந்தவர்கள். அந்த விளைவினாலேதான் தேர்தல் அறிக்கையிலேயும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தையொட்டி, சென்ற மானியக் கோரிக்கையின் மீது அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

சென்ற 18–9–1991 அன்று இந்தப் பேரவையில் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கைக்குப் பதில் அளித்துப் பேசுகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ''பிற்படுத்தப்பட்டோரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒதுக்கீடு கொள்கை மாத்திரம் நாம் எதிர்பார்க்கும் விளைவுகளை முழுமையாக விரைவில் ஏற்படுத்தி விடாது. இன்றைய மாநிலங்களின் நிதி நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில் பிற்பட்டோரின் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்க முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்த நெருக்கடியைப் போக்கிட மைய அரசு உதவிக் கரம் நீட்ட முன்வர வேண்டும். குறிப்பாகவும், சிறப்பாகவும் கிராமக் கைவினைஞர்கள் மற்றும் கைத்தொழிலையே நம்பி வாழும் பிற்பட்டோரின் பொருளாதார மேம்பாட்டிற்கு அகில இந்திய அளவில் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுத்து செயல்படுத்த மைய அரசு சிந்தனை செய்ய வேண்டும். பிற்பட்டோரின் நல்வாழ்விற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் மாநில அரசுகளுக்கு மைய அரசு போதிய நிதி உதவி வழங்கிட வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த மாமன்றத்தின் மூலமாக எழுப்புவது என்னுடைய கடமையாகும். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாட்கள் வரும் இந்த மாதத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மானிய விவாதத்தில் இந்தக் கோரிக்கையையும் வைப்பது மிகப் பொருத்தமாகும் என்று நான் கருதுகிறேன்'' என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு செப்டம்பர் திங்களிலே இந்த மானியக் கோரிக்கையின் மீது கருத்தைத் தெரிவித்தார்கள்.

நான் இப்போது மகிழ்ச்சியோடு இன்னொன்றையும் சொல்கிறேன். இதுவரை அரசியல் சட்டம் நிர்ணயித்த அந்த விதிகளின்படி, கட்டளையின்படி, தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி மாத்திரமே பேசிக் கொண்டு இருந்த, அவர்களைப் பற்றி மாத்திரமே நினைத்துக் கொண்டிருந்த மத்திய அரசு, இந்த அறிவுரையைக் கேட்டு என்று நான் சொல்ல மாட்டேன், இப்பொழுது தான் பேசத் தொடங்கி இருக்கிறது சென்ற ஆண்டு காங்கிரஸ் கட்சியை. சேர்ந்த

[திரு. இராம வீரப்பன்] [1992 மார்ச் 23

பிற்பகல் 1-25

மாண்புமிகு இராஜேந்திரன் அவர்கள் கூட குறிப்பிட்டு இருக்கிறார்கள். மறைந்த நமது மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் தேர்தல் அறிக்கையில் இதை சொல்லியிருந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுதே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு அவர்கள் செய்யவில்லை. சென்ற ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை தெரிவித்த பிறகு அவர்களுடைய சிந்தனையில் புதிய உணர்வுகள் ஏற்பட்டு இன்றைக்கு மத்திய அரசாங்கம் National Backward clases Finance and Development Corparation தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பை உருவாக்கி அதற்கு முதலீடாக 200 கோடி ரூபாயை மூலதனமாக ஒதுக்கி இருக்கிறார்கள். நான் பெருமைக்காகவோ, புகழ்ச்சிக்காகவோ சொல்லவில்லை. இந்தியாவில் இருக்கிற எந்த மாநில அரசும் இந்தக் கருத்தை மத்திய அரசை நோக்கி வலியுறுத்தவில்லை. ஆனால் நீண்டகால பாரம்பரியம் மிக்க தமிழ் மண்ணிலேதான், தமிழ்நாட்டினுடைய அரசின் தலைவர்தான் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி, இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய சிந்தனையிலே மறுமலர்ச்சியை, விழிப்புணர்ச்சியை, அரசியல் சட்டத்திலே சொல்லப்படாவிட்டாலும் இந்த நாட்டிலே அகில இந்திய அளவில் 52 சதவீதம், தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் 67 சதவீதம் இருக்கிற பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு நிதியுதவி வழங்கவும், தனியான திட்டங்களைத் தொடங்கவும் மத்திய அரசு முன் வந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்கிற இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலே நான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்வது, நீங்கள் 200 கோடி ரூபாயில் தொடங்கி இருக்கிறீர்கள். இது போதாது. 18 சதவீதம் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றைக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவோ அந்த நிதியைப் போலவாவது குறைந்தபட்சம் நீங்கள் இந்தியா முழுவதற்கும் ஒதுக்கி, அதிலே 67 சதவீதம் இருக்கிற தமிழகத்திற்கு, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கிற தமிழகத்திற்கு, சரியான நிதியுதவியை நீங்கள் வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே, சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த கருத்தையொட்டி, இன்றைக்கு அந்தக் கருத்தை ஏற்று நடைமுறைப்படுத்த முன்வந்திருக்கிற மத்திய அரசினிடத்தில் வேண்டுகோளாக நான் வைத்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே பிற்படுத்தப்பட்டவர்கள் ஏன் மிகுந்த பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகநினைக்கிறார்கள்? மிகுந்த பிற்படுத்தப்பட்டவர்கள் ஏன் தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்குங்கள் என்று கேட்கிறார்கள்? அதைத் தான் இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக திரு. சின்னப்பன் அவர்கள் குறிப்பிட்டார். நம்முடைய மரியாதைக்குரிய காங்கிரஸ்



992 மார்ச் 23] [திரு. இராம வீரப்பன்]

ட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு அடிப்படையை ஆராய்கிற அரசுதான் இந்த அரசு. அதற்கான அடிப்படையை ஆராய்ந்து அதைக் களைவதற்கு, தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிற முதலமைச்சர் தான் இன்றைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத். தட்டும் ஒலி).

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுடைய வளர்ச்சி என்பது இரண்டு தண்டவாளங்களாகும். இரண்டு பாதைகளில் சென்றாக வேண்டும். ஒன்றையொன்று தொடர்ந்து சென்றாக வேண்டும். ஒன்றிலேயிருந்து ஒன்று பின்தங்கி விடக்கூடாது. கல்வி வசதியை ஏற்படுத்தினால், கல்வி எல்லோருக்கும் வந்து விட்டால் அவர்கள் முன்னேறிவிடுவார்களா என்றால் முடியாது. பட்டம் பெற்றவர் என்று சொல்லி விட்டால் மாத்திரம் போதாது. கல்வி பெற்றவன் என்று சொல்லி விட்டால் மாத்திரம் போதாது. இவனை பட்டதாரியாக்கி விட்டேன் என்று ஒரு அரசு சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது. பட்டம் பெற்றவன் இந்த சமுதாயத்திற்கு பயனளிக்கிறானா, அதன் மூலம் அவன் பயன் பெறுகிறானா என்று இந்த இரண்டையும் கூர்ந்து நாம் நோக்கியாக வேண்டும். ஆகவே தான் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் அல்லது தாழ்த்தப்பட்டவர்கள், ஆதிதிராவிட மக்கள்—அவர்களை உயர்த்துகிற போது ஒரு பக்கத்திலே அவர்களை கல்வியிலே உயர்த்துகிற போது இன்னொரு பக்கத்திலே வாழ்க்கையிலும் உயர்த்தியாக வேண்டும். பொருளாதாரத்திலே உயர்த்தியாக வேண்டும். அதற்கு அடிப்படையாக அமைவது தொழில். படித்து விட்டேன், பட்டம் பெற்று விட்டேன் என்று இளைஞர்கள் இன்றைக்கு சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். வேலையற்ற பட்டதாரி என்கிறான். உனக்கு என்ன வேலை தெரியும் என்றால் வேலை தெரியாது என்கிறான். ஆகவே, வேலை தெரியாத பட்டதாரியாக இருக்கிறானே தவிர வேலையில்லாத பட்டதாரி என்று அவனை சொல்ல முடியாது.

எனவே, வேலை தெரியாதவர்களுக்கு வேலையைக் கற்றுத் தர வேண்டும். ஆகவே தான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு ஒரு மிகச் சிறந்த திட்டத்தை இங்கே அறிவித்தார்கள்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு பெரும் அளவில் பணி சார்ந்த பயிற்சியை (Job-oriented Training) அளித்து, அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வழி காண

முடியும் என்பதை உணர்ந்து, சென்ற ஆண்டு முதன் முறையாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், சுருக்கெழுத்துப் பயிற்சி, கணிப்பொறிப் பயிற்சி, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி ஆகிய பயிற்சிகளுக்கு உதவி வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார்கள்.

இவ்வாண்டு, 1992-93-ல் மேலும் அதிக நபர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில், சுருக்கெழுத்துப் பயிற்சித் திட்டத்தின்கீழ் ஏற்கனவே உள்ள 450 பேர் என்பதை உயர்த்தி, ஆயிரம் மாணவ மாணவியர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், கணிப்பொறிப் பயிற்சித் திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு 50 பேர் என்று அறிவித்தார்கள். அதை இந்த ஆண்டு 500 மாணவ மாணவியர்களுக்கு உயர்த்தி அனுமதி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், கனரக மோட்டார் ஓட்டும் பயிற்சித் திட்டத்தின் கீழ், ஏற்கனவே சென்ற ஆண்டு தொடக்கமாக 50 பேர் என்று அறிவித்தார்கள். அதை இந்த ஆண்டு 500 பேருக்கு பயிற்சி வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தப் பயிற்சித் திட்டங்களுக்காக ஆண்டுக்கு 40 லட்சம் ரூபாய் செலவிடப்படும். இதனுடைய அடிப்படையே படிக்க வைத்தால் மாத்திரம் போதாது, அவனை, ஒரு தகுதியுள்ளவனாக தொழிலிலே உயர்ந்தவனாக நாம் ஆக்கியாக வேண்டும். நான் இந்த நேரத்தில், உங்களுக்கு ஒரு புள்ளி விவரத்தைச் சொல்கிறேன். சென்ற ஆண்டு, நம்முடைய போக்குவரத்துத் துறை, தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒரு புள்ளிவிவரத்தைத் தந்திருந்தது. அந்தப் புள்ளி விவரத்திலே 1981 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலேயிருந்த வாகனங்கள் 3.21 லட்சம். 1991 ஆம் ஆண்டிலே, தமிழ்நாட்டிலே இருக்கிற வாகனங்கள், சென்ற ஆண்டிலே, 15.39 லட்சம். 12 லட்சம் உயர்ந்திருக்கிறது, 10 ஆண்டிலே. ஆனால் இந்த 15 லட்சம் வாகனங்களுக்கு, ஓட்டுநர்கள், அது ரிப்பேராகிவிட்டால், ரிப்பேர் செய்கிறவர்கள், மெக்கானிக்குகள் இருக்கிறார்களா என்றால், இல்லை. அது தான் இன்றைய சமுதாய சூழ்நிலை. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று இவர்களுக்கு நாம் கல்வியை வழங்குகிறோம். கல்வியை வழங்குவதற்காக, நாம் எடுத்துக் கொள்கிற செலவு எவ்வளவு? இங்கே கூட அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஏதோ, 36 கோடி, அல்லது 37 கோடிதானே ஒதுக்குகிறீர்கள் என்று. கல்விக்கு 1,500 கோடிக்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருகிறது. இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிலே மாத்திரம் சொல்கிறேன். தமிழ்நாட்டில், 10,600 உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே இந்த



பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் , 15 லட்சத்து 17 ஆயிரத்து, 508 பேர் படிக்கிறார்கள். அதிலே; இவர்களுக்காக, இந்தத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் , சீர்மரபினர்களுக்காக இந்தத் துறை செய்கிற செலவு, எவ்வளவு என்றால் இவர்களுக்கு தங்குகிற விடுதிகள், என்ன கொடுக்கின்றன, அதிலே எவ்வளவு பேர்கள் பயன்பெறுகிறார்கள், என்பதைப் பார்த்தால், சுமார் 25 கோடி ரூபாய்க்கு.மேல், இதிலே செலவிடுகிறோம். இதிலே கல்லூரிப் படிப்பிலே இருக்கிற உதவித் தொகை என்பது, 2 லட்சத்து 67 ஆயிரத்து, 799 பேருக்கு போய்ச் சேருகிறது. இதகாக செலவிடப்படுகிற தொகை, 7 கோடியே 11 லட்சத்து 39 ஆயிரம்.

அதேபோல், இங்கே பள்ளியிலே படிக்கிற மாணவர்கள் தொகை 3,28,705. அவர்களுக்காக செலவழிக்கப்படுகிற தொகை, 1 கோடியே 65 லட்சத்து 29 ஆயிரம். ஆனால், இவர்களுக்காக நாம் ஹாஸ்டல் நடத்துகிறோம். அந்தப் புள்ளி விவரங்கள் தரப்பட்டு இருக்கின்றன. அதற்காக செலவிடப்படுகிற தொகை, மொத்தம் சுமார் 25 கோடியை, அவர்களுக்காக செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பள்ளிக் கல்வியைத் தந்தால், கல்லூரிக் கல்வியைத் தந்தால் மட்டும் போதாது. அதைத்தான் சென்ற ஆண்டிலே அறிவித்தார்கள். அவர்களுக்கு தொழில் கல்வியைத் தந்தாக வேண்டும், தொழில் கல்வியை, அதற்கு முன்னாலே இருந்த அரசு மிகப் பிற்டடுத்தப்பட்டவர்களுக்கு மாத்திரம் என்று அறிவித்தது. ஆனால் பிற்படுத்தப்பட்ட மக்களை விட்டுவிட்டார்கள். அதைத்தான் சென்ற ஆண்டு, நம்முடைய முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், இந்தச் சலுகை கிடைக்கும், அவர்களும், தொழில் கல்வியிலே இடம் பெறலாம் என்று குறிப்பிட்டார்கள். அதனாலேதான், தொழில் கல்வியிலே இடம் பெற்றால்தான், அவன் ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டால்தான், இன்றைக்கு இந்தச் சமுதாயத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள் உயர முடியுமே தவிர, அவர்களுக்கு வெறும் கல்வியைக் கற்றுத்தந்தால் மாத்திரம் அவர்கள் உயர்ந்துவிட முடியாது என்பதைத்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நான் முன்னாலே சொன்னதைப் போல கல்வியையும் கற்றுத் தந்தாக வேண்டும், கல்வி கற்றுக்கொள்கிற நேரத்திலே, அவர்களை வாழ்க்கைக்குத் தகுதியுள்ளவர்களாக, அவன் பெற்ற கல்வியின் மூலம் இந்தச் சமுதாயத்திற்குப் பயன்படுகிறவனாக, அவன் வாழ்கிற சமுதாயத்திற்குப் பயன்படுகிறவனாக, மாற்றவேண்டும் என்று, இரண்டு திட்டத்தை இன்றைக்கு உருவாக்கிய காரணத்தினால்தான், இந்தத் தொழில் கல்வியிலே, அவரவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

[திரு. இராம வீரப்பன்] [1992 மார்ச் 23

பிற்பகல் 1-35

இங்கே விடுதிகளைப் பற்றி எல்லாம் சொன்னீர்கள். விடுதிகளை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே நாம் சொந்தமாக நடத்துகின்ற அரசுக் கட்டிடம் 74, வாடகைக் கட்டிடங்கள் 697, மொத்தம் 771 விடுதிகள். அதிலே தங்கிப் படிக்கின்ற மாணவர்கள் 43,721. அதிலே நம்முடைய நிதிநிலைக் குழு விவாதத்திலே இரண்டு மாதங்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பற்றிய குறிப்புகளைக் கேட்டு வாங்குகிறார்கள். வாங்குகிறபோது பல விடுதிகளிலே அவர்களுக்குச் சரியான வசதிகள் இல்லை என்று குறைபாடு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதற்காக உடனடியாக ஆணைபிறப்பித்தார்கள். ஒரு தனி அதிகாரியை நியமித்து அவர்கள் இந்த அத்தனை விடுதிகளையும் சோதனையிட்டு 'எந்தெந்தவிடுதிகளிலே மாணவர்களுக்கு குறைகள் இருக்கிறதோ, சுகாதாரக் குறையோ, மின்சாரக் குறையோ அல்லது குடிநீர்க் குறையோ எந்தக் குறையாக இருந்தாலும், அதைப் பற்றி உடனே எனக்குத் தகவல் தந்தாக வேண்டுமென்று' அவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்வளவு நாள் ஆட்சிகள் நடந்தது. பிற்பட்டோருக்காகவே நான் பிறந்து, வாழ்ந்து, அவர்களுக்காகவே நான் எல்லா தொண்டையும் செய்து கொண்டிருக்கிறேன். நான் ஒரு பக்கத்திலே பார்த்தால் ஹரிஜனங்களுடைய சம்பந்தி. இன்னொரு பக்கத்திலே பார்த்தால் நாடார் குலத்தின் சம்பந்தி. ஆகவே என்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் என்று சொன்னார்களே, அவர்களுக்காக சொல்கிறேன். இங்கே கூட சொன்னார்கள், நம்முடைய தவசி அவர்கள் பேசுகிறபோது சீர்மரபினர், அவர்களுக்காக நடத்துகிற பள்ளிகளிலே ஆசிரியர்கள் சேர்ப்பது என்கிற அந்த முறைகளிலே முன்னாலே இருந்த ஆட்சி சில ஆணைகளை பிறப்பித்திருக்கிறது, அதிலே அந்த கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சேர விடாமல் தடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அவைகள் பரிசீலிக்கப்படும், உண்மையானால், அக் குறைகள் களையப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு நிதிநிலைக் குழுவினுடைய விவாதத்திலே இந்த துறைக்காக என்ன செய்ய வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் அறிவித்த ஆணையையொட்டி ஒரு அதிகாரி உடன் போய் பார்த்து 12 விடுதிகளில் மின்வசதி குறைபாடு 220 விடுதிகளில் தண்ணீர் பற்றாகுறை 285 விடுதிகளில் போதிய கழிப்பிட வசதியின்மை காணப்பட்டன, இவற்றில் பெரும்பாலான குறைகள் தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் விடுதிகளில்தான் நிவர்த்தி செய்யப்பட உள்ளன. வருகின்ற கல்வி ஆண்டு தொடங்குவதற்குள் இக்குறைகள் களையப்பட வேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்



1992 மார்ச் 23] [திரு. இராம வீரப்பன்]

தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 517 விடுதிகளில் காணப்படும் இக்குறைகளை நீக்க சுமார் குறைந்தபட்சம் ரூ. 25 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் தனியார் இடங்கள், வாடகைக்கு இருக்கிறோம், ஆனாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசே உடனடியாக செலவு செய்து இந்தக் குறைகளை நிவர்த்திக்கட்டும், அதற்குப் பிறகு அந்த வீட்டின் சொந்தக்காரர்களிடம் வாடகை கொடுக்கிறபோது அதைப் பிடிக்க முடியுமா, எப்படி பிடிப்பது என்பதை நீங்கள் ஆராய்ந்து கொள்ளுங்கள், எனக்கு இந்தக் குறைகள் நீக்கப்பட்டாக வேண்டும், வருகிற கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்பு இவைகள் முடிக்கப்பட்டாக வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்.

இன்னொரு புதிய திட்டம், கொள்கை விளக்கக் குறிப்பிலே தான் இருக்கிறது, அந்தத் திட்டம் சாதாரணத் திட்டமல்ல, ஏதோ ரூ. 31 கோடி என்கிறீர்களே, அந்த உணர்வுதான், நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களைச் சரியான பாதையிலே வழி நடத்திச் செல்கிறோமா என்பது நான் இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை, விடுதிகளிலே தங்கியிருக்கின்ற மாணவர்கள் படிப்பதற்கு பத்திரிகைகள் கிடையாது, படிப்பதற்கு நூல் நிலையம் கிடையாது. இதைப்பற்றி முன்னாலே யாரும் சிந்திக்கவில்லை, உறவு கொண்டாடுகிறவர்களும் சிந்திக்கவில்லை. ஆனால் இன்றைய முதலமைச்சர் தான் திராவிட இயக்கத்தினுடைய வழிவழியாக வந்து இந்த இயக்கத்தை காப்பாற்றுகிற ஜீவனாக, உயிர்நாடியாக விளங்குகிற புரட்சித் தலைவிதான் (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் ரூ. 20 இலட்சம் செலவு செய்து அந்த விடுதிகளில் ஒரு ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பத்திரிகைகள் வந்தாக வேண்டும், சிறிய நூலகங்கள் உருவாக்கப்பட்டாக வேண்டும், அதிலே திருக்குறள், மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் போன்றவர்களுடைய நூல்கள் எல்லாம் அங்கே வைக்கப்பட்டாக வேண்டும், அதற்காக ரூ. 20 இலட்சத்தை ஒதுக்குங்கள் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு புதிய விடுதி கட்டிடங்கள், எவ்வளவோ கஷ்டம்தான் இருக்கிறது, நம்மாலே அவ்வளவு மாணவர்களுக்கும் விடுதிகள் கட்டித் தர முடியவில்லை. ஆனால் கிராமப் பகுதிகளிலேயிருந்து வருகின்ற மாணவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதையொட்டி பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர் என இங்கேயே நம்முடைய திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள்,

[திரு. இராம வீரப்பன்] [1992 மார்ச் 23

பிற்பகல் 1–40

51 சதவீதம் நாங்கள் பெண்கள் இருக்கிறோம், இந்த அரசாங்கம் ஒதுக்குகிற தொகையில் கொடுக்கிற வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 50 சதவீதம் தரவேண்டுமென்று கேட்டார்கள், இந்த 50 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கியதற்கே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, அதிலும் 20 சதவீதம் மிக பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு ஒதுக்கியதற்காக உயர்நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, அதனாலேநான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கைகளை வைக்கிறீர்களே, இந்தச் ஜாதியை சேருங்கள், அந்த ஜாதியைச் சேருங்கள். இதை கீழே கொண்டு போங்கள் என்று— அதிலே தலையிட முடியாமல் இருக்கிறது. அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள், அவருக்கே உரிய திறமையோடு குறிப்பிட்டார். அவர் ஆலோசனை சொல்லியதை நான் தவறு என்று சொல்லவில்லை, இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்காகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டே வந்திருக்கிறார்கள், ஆனால் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இவருக்கும் வித்தியாசம் உண்டு. அவர் ஒரு 10, 15 ஆண்டுகளுக்கு மேல் அமைச்சராக இருந்தவர், அவர் காலத்திலேயும் அரசாங்கம் இருந்தது. எப்படி உச்ச நீதி மன்றத்தினுடைய ஒரு அறிவுரையை ஒட்டி மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு அமைக்கப்பட்டது என்பதும், அந்த பிற்பட்டோர் நலக்குழு பரிந்துரைகள் என்ன கொடுத்தது என்பதும், அதன் மீது புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்திலே 85-வது ஆண்டிலே இன்னின்னார் இப்படிப்பட்டவர்கள் என்று விகிதப் படுத்தி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதும் அவருக்கு மிகத் தெளிவாகத் தெரியும், அதனாலே வழக்கு உச்ச நீதி மன்றத்திற்கு போனதும் தெரியும், ஆனால் அதையும் மீறி தமிழகம் இன்றைக்கு அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதும் தெரியும், ஆனாலும் அவர் ஆலோசனை வழங்குகிறார், ஆலோசனை வழங்குகிற உரிமையை நாம் பறிக்க முடியாது, ஆனால் ஆலோசனை வழங்குகிறபோது, இந்த இடத்திலே அவர் இருந்தாரே அப்பொழுதே அதையெல்லாம் நிறைவேற்ற முடியாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்பது அவருக்கே தெரியும் அல்லவா ? தெரிந்ததை ஏன் இப்போது மறைக்க வேண்டும்? அதனாலேதான் நம்முடைய உறுப்பினர் திரு. கே. கே. சின்னப்பன் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் சொன்னால் அவருக்கு கோபம் வரும். அதிலே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர், அதுவும் அவர் சார்ந்திருக்கிற பிரிவைச் சேர்ந்தவர், அவருக்கு ஜாதியிலே நம்பிக்கை இல்லை—அதை நிச்சயமாக நான் நம்புகிறேன், ஆனால் இன்றைக்கு வேறு வழியில்லை. அதைப் பிடித்துக் கொண்டிருக்கிற ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை



1992 மார்ச் 23] [திரு இராம வீரப்பன்]

அவருக்கு வந்து விட்டது. அதற்குக் காரணம் புரட்சித் தலைவி அவர்கள் சில நேரங்களிலே சரியாக அடையாளம் கண்டு கொள்கிறார்கள். அதனாலே வந்த வினைதான். வேறு ஒன்றும் இல்லை. ஏன் அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட குறிப்பிட்டார்களே 'ஏன் நீங்கள் ராஜினாமா செய்யவில்லை' என்று. அப்படி ராஜினாமா செய்வதற்கு அவரால் எப்படி முடியும் ? பதவிதான் பெரிது என்று ஏற்றுக் கொண்டதற்கு பிறகு சமூகமாவது, ஜாதியாவது மக்களாவது. ஆனால் இன்றைக்கு அந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. அரசியல் நடத்த வேண்டும் என்பதற்காக அதைப்போய் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் சில ஆயிரம் கோடிகளிலே திட்டம் வருகிறபோது (குறுக்கீடு) நேரம் அதிகம் ஆகிவிட்டது. தயவுசெய்து நான் முடித்து விடுகிறேன். கடைசியில் வேண்டுமானால் சொல்லட்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. இராமச்சந்திரன் அவர்கள் அமைச்சர் முடித்த பிறகு கடைசியிலே கேளுங்கள். கடைசியில் விளக்க உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :</u> ஏனென்றால் அவர் மிகுந்த அனுபவசாலி. அதனால் ஒரு சில ஆலோசனைகளையெல்லாம் சொன்னார். அந்த ஆலோசனைகளையெல்லாம் செய்ய முடியாத சூழ்நிலையிலே நாங்கள் இருக்கிறோமா அல்லது செய்ய விரும்பாத சூழ்நிலையிலே இருக்கிறோமா என்று சொல்லியாகவேண்டும் அல்லவா ? அது அவருக்கே தெரியும் அல்லவா ? நான் கடுமையான வார்த்தைகளால் சொல்லமாட்டேன். ஆனால் திரு. கே. கே. சின்னப்பன் அவர்கள், அவருக்கு உரிமை இருக்கிறது சொன்னார். அந்த ஜாதிக்காக போராடுகிறேன் என்று சொல்கிறீர்களே என்று சொன்னார். ஆனால் மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் அப்படி இங்கே சொல்லவில்லை. நாங்கள் பாட்டாளிக்காக போராடுகிறோம் என்று சொன்னார்கள். அதையேதான் முன்னாலேயே சொன்னேன். பசுத்தோல் போர்த்தியிருக்கிறார்கள், ஆனால் உள்ளே இருப்பது ஜாதி வெறி பிடித்த புலி என்று. அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. தமிழகம் அதை அடையாளம் கண்டு கொண்டிருக்கிறது. அந்தப் புலியை எங்கே ஏவுகிறார்கள் என்பதும் தெரிகிறது. நான் சொல்கிறேன். ஏதோ எல்.டி.டி.இ.க்காரர்கள் தான் நம் முதலமைச்சரை குறி வைக்கிறார்கள் என்று மாத்திரம் எண்ணி விடாதீர்கள். இன்றைக்கு இவ்வளவு புகழ் மிக்க ஒரு ஆட்சியை நிலைநிறுத்தியிருக்கிற எல்லா தரப்பு மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற இந்தத் தலைமையின் மீது இங்கே இருப்பவர்களும் குறி வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அதற்காகத்தான் நீங்கள் ஜாதி துவேஷத்தைக் கிளப்பு

[திரு இராம வீரப்பன்] [1992 மார்ச் 23

கிறீர்கள். அதற்காக பல்வேறு காரணங்களை சொல்லுகிறீர்கள். அதற்காகத்தானே பல ஆயிரம் கோடி செலவிட்டு இந்த நாட்டிற்கு வாராத மாமணிபோல் வருகிற அந்த மின் திட்டத்தை வர விட மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். இன்னும் கூட என்ன பேசுகிறார்கள்? காவல் துறையினர் கைது செய்ய வந்தால் அவனை அடியுங்கள், உதையுங்கள், வெட்டுங்கள் என்று பேசுகிறார்களா இல்லையா? இவைகளையெல்லாம் வெளியிலே பேசுவது இங்கே வந்தால் பசு வேஷம் போடுவது. இங்கே பசு; வெளியிலே போனால் புலி. இதை இந்த நாடு தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவேதான் சொல்கிறேன், இந்த விடுதிக் கட்டிடங்களையெல்லாம் கட்டித் தரவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். நிச்சயமாக ஆசைப்படுகிறோம். ஆனால் எவ்வளவு முடிகிறது என்பதுதான் பிரச்சினை. அவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக செலவிடுகிறோம். எவ்வளவு பேர்கள் முடியுமோ அவர்களை அங்கே தங்க வைத்து படிக்க வைக்கிறோம். இங்கே நீங்கள் உணவுக் கட்டணத்தையெல்லாம் உயர்த்த வேண்டுமென்று கேட்டீர்கள். அது ஒன்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு வைக்காமல் இல்லை.

பிற்பகல் 1-45.

நான்கு நாட்களுக்கு முன்பு இந்தத் துறையினுடையமானிய கோரிக்கை பற்றி முதல்வரோடு விவாதம் நடத்தினோம். நடத்துகின்றபோது 70 ரூபாய் இருக்கிறது உயர்த்துங்கள் என்று கேட்டீர்களே, அதை நீங்கள் என்ன கேட்பது, அவர்களே கேட்டார்கள். இது என்ன அநியாயம், 70 ரூபாய் தானே கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இது எப்படி போதும்? ஆனால் உடனடியாக அவர்களை பயமுறுத்துவது நிதிநிலை. அங்கே நிதிச் செயலாளர், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இல்லை-இருந்தாலும் அவர்களும் இதற்காக ஏற்றுக்கொள்வார்கள். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அவர்கள் வேண்டாம் என்று சொல்லவே மாட்டார்கள். நிச்சயமாகத் தெரியும், ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இதை பரிசீலிக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த மகிழ்ச்சியை நான் இங்கே சொல்கிறேன். 70 ரூபாய் போதாது. அதை அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இதை நான் நிதித்துறையோடு கலந்து பேசிவிட்டு பரிசீலிக்கின்றேன். ஏனென்றால் இது ஒன்றும் அவ்வளவு சாதாரணத் தொகை அல்ல. இதிலே எவ்வளவு பேருக்கு நாம் கொடுக்க வேண்டியிருக்கும் என்றால் அதிலே தான் இருக்கிறது. இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு நாம் கொடுத்தாக வேண்டும். கோடிக்கணக்கான ரூபாய்கள் இதிலே செலவழித்தாக வேண்டும். ஆகவே நான் அதை பரிசீலிக்கிறோம் என்று சொன்னார்கள். காங்கிரஸ் உறுப்பினர் இந்த மின் உற்பத்தியைப் பற்றி பேசலாமா என்றால் அவர்



1992 மார்ச் 23] [திரு. இராம. வீரப்பன்]

ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் அந்தப் பகுதியிலேயிருந்து வந்திருக்கிறவர். அது பிற்படுத்தப்பட்டோர் வாழ்கின்ற பகுதி. 80%, 90% அங்கே பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் வாழ்கிறார்கள். அவர்களுக்கு அல்லவா தெரியும் அந்த அருமை. அவர்களுக்கு அல்லவா இந்த நாட்டிலே ஒற்றுமையை வளர்ப்பதற்கு பட்டபாடு தெரியும். இங்கே கூட மைனாரிட்டி கமிஷனைப் பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக திருச்சி தொகுதி உறுப்பினர் அவர்கள் பேசினார். நான் நேரம் இல்லாததால் சுருக்கமாக இப்போதே சொல்லிவிடுகிறேன். மைனாரிட்டி மக்கள் இந்தியாவிலே வேறு எந்த மாநிலங்களிலேயும் இல்லாத வகையில் தோழமையோடு, சகோதர உணர்வோடு, உறவோடு வாழ்வது தமிழ் மாநிலம் தான். அதற்கு விதை விதைத்தது திராவிடர் இயக்கங்கள் தான். அதற்கு இன்றைக்கு தலைமையேற்று, அதை வழி தவறாமல், நெறி தவறாமல் வழி நடத்திச் செல்கிறவர் இன்றைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி தான். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே மைனாரிட்டியினுடைய உரிமைகளைப் பற்றியோ, மைனாரிட்டிகளுக்கு உள்ள பாதுகாப்பைப் பற்றியோ கிஞ்சித்தும் யாரும் கவலைப்பட வேண்டாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது நூல் நிலையத்தை 20 இலட்சம் ரூபாய் செலவிலே தொடங்குங்கள் என்று சொன்ன மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 6 விடுதிகள் கட்டுவதற்கு 57.84 இலட்சம் இப்போது நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ஹட்கோ உதவியின் மூலம், இன்னும் 18 விடுதிகளுக்கான நிதி உதவியைப் பெற்று மொத்தம் 24 விடுதிகள் சுமார் இரண்டு கோடியே 34 இலட்சத்திலே கட்டவிருக்கிறோம். 24 விடுதிகள் இந்த ஆண்டிலே கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணை, அடுத்த 5 ஆண்டுக்காலத்திலே இந்த அரசு விடுதிகள் அனைத்துக்கும் சொந்தக் கட்டிடங்கள் வருவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். அதைப் போல அவர்கள் சொன்னார்களே, மாணவியர், மாணவியர் என்று அதைத்தான் சென்ற ஆண்டே மாணவிகளுக்காக 25 விடுதிகள் அறிவிக்கப்பட்டன. அவை அனைத்தும் பெண்களுக்குத்தான். இந்த ஆண்டு 13 விடுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் பெண்களுக்குத் தான். இது என்ன அக்கிரமம், பாரபட்சம் இல்லையா என்று கேட்க முடியாது. இந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று சில ஜாதிகளை அல்லவா சொல்லுகிறோம். ஆனால் இந்த நாட்டில் பெண்களே பிற்படுத்தப்பட்டவர்கள் தான். அதிலே ஒருசில வைரங்களாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் போல, அன்னை

இந்திரா காந்தியைப் போல இந்த நாட்டிலே தோன்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப்போல பல்வேறு பிரிவுகளிலே பல தலைவிகள் தோன்றி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தப்பி பிறந்தவர்கள். ஆனால் இந்த நாட்டில் பெண்கள் பிற்படுத்தப்பட்டவர்களாகவே கருதப்படுகிறார்கள். ஆகவே தான் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். 30% என்ன? அனைத்தும் பெண்களுக்கே கொடுங்கள் என்கிறார்கள். ஏனென்றால் பெண்கள் தான் கிராமங்களிலேயிருந்து வர முடியாது. அவர்கள் பஸ்களைப் பிடித்து அல்லது இடங்களைப் பிடித்து கல்வி கற்க முடியாது. ஆகவே, அவர்கள் தங்கிப் படிப்பதற்கு முன்னுரிமை தாருங்கள் என்று பெண்களுக்குத் தான் அவைகள் ஒதுக்கப்படுகின்றன என்பதையும் சொல்கிறேன்.

பிற்பகல் 1—50

மேற்சொன்ன கொள்கைப்படி, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவியருக்கென 13 புதிய விடுதிகள் இவ்வாண்டு கிராமப்புறங்களில் 23.68 இலட்சம் செலவில்தொடங்கப்படுகிறது பெண்களுக்கு மாத்திரமே தான். அதைப் போல இனிமேல் தொடங்கப்படுகிற, கிராமப்புறங்களில் தொடங்கப்படுகிற விடுதிகளில் பெண்களுக்குத்தான் முன்னுரிமை. அதைப்போல உயர்நிலைப் பள்ளிகள், சீர் மரபினர்களுக்கான 5 நடுநிலைப் பள்ளிகள் 6.10 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுகிறது. விடுதிக்கான பொருட்களை வாங்குவதற்கு, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் விடுதிகளுக்கு 5.13 இலட்சம் செலவில் 205 விடுதிகளுக்கு ப்ரஷர் குக்கர்களும், 4.80 இலட்சம் செலவில் 80 விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்களும் இவ்வாண்டு வழங்கப்படும். இதைத் தவிர இங்கே உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டினீர்கள். குயவர்களை இதுவரை யாருமே கவனிக்கவில்லை. அவர்களும் இங்கே வாழ்கின்றவர்கள் தான். இதற்கு அடிப்படையாக, அந்தத் தொழிலுக்கு உதவுகின்ற அந்த சக்கரத்தை இயந்திரத்திலே பயன்படுத்துகின்ற வகையில் 5 இலட்சம் செலவில் நூறு குயவர்களுக்கு, குலாலர்களுக்கு தருகின்ற திட்டத்தைப் பாராட்டினீர்கள். அதைத்தான் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே சொல்லியிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டோர், நீங்கள் ஆராய்ச்சி நடத்த வேண்டும், சென்சஸ் எடுக்க வேண்டும் என்று எல்லாம் சொல்லுகிறீர்களே அதைத்தான் ஏற்கனவே இந்தத் துறை செய்து கொண்டிருக்கிறது பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இவர்களிலேயும் விடுபட்டோர் இருக்கிறார்கள். இதற்குள்ளே நுழைய முடியாமல் இருக்கிறார்கள். இதிலே வெளியே நிறுத்தி வைக்கப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களை கண்டறியுங்கள். அந்த பிரிவினர் யார் என்று பாருங்கள். அவர்களுக்கு திட்டங்களை



நாம் தீட்டியாக வேண்டும். நிறைவேற்றியாக வேண்டும். அப்படி கண்டுபிடிக்கின்ற அந்த பிரிவிலே ஒரு பிரிவுதான் நம்முடைய குயவர்கள், குலாலர்கள். அதைப் போல சலவையாளர்களைப் பற்றி சொன்னீர்கள். அவர்களுடைய குறைகள் என்ன என்பது எல்லாம் பரிசீலிக்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கின்ற அந்த மானியம், கடன் உதவி போதாது என்றீர்கள். அதையும் அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் இன்றைக்கு ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள்; 12 ஆயிரம் ரூபாய் வரம்பு என்று வைத்து இருக்கிறீர்கள் என்று. அதை இப்போது உயர்த்த முடியாத சூழ்நிலையில் தான் அரசாங்கம் இருக்கிறது. ஆனால் ஒன்றை மாத்திரம் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்காக, சிறப்புப் பயிற்சி. அந்தப் படிப்பைச் சொல்லித் தருகின்ற விடுதிகளிலே 12 ஆயிரம் உச்சவரம்பு வைத்து இருக்கிறோம். அதை ஏன் வைக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்கெனவே பரிசீலிப்பதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

ஐ.ஏ.எஸ்.,ஐ.பி.எஸ்.,போன்ற தேர்வுக்காக சிறப்பு படிப்பை படிக்கின்ற அந்த சிறப்புப் பயிற்சியைப் பெறுகின்ற மாணவர்களுக்கு உச்ச வரம்பு, வருமான வரம்பு வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லுகிறேன். அதைப்போல இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சியில் யார் தேறினார்கள் என்று கேட்டீர்கள். இதுவரை சுமார் 24 பேர் தேறியிருக்கிறார்கள். அதிலே பல பேர் இங்கேயே நம்முடைய அரசாங்கத்திலே பணியாற்றுகிறவர்கள் எல்லாம் கூட இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திலே இருப்பவர்கள் எல்லாம் கூட இருக்கிறார்கள். மொத்தம் 24 பேர் தேறியிருக்கிறார்கள். அதனாலே தான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பயிற்சி அளிக்கின்ற நிறுவனம் சரியாக நடத்தப்பட்டு ஆகவேண்டும். அது ஒரு கட்டிடம் இல்லாமல் ஒரு வாடகைக் கட்டிடத்திலே ஏதோ அரை குறையாக நடந்து கொண்டிருக்கின்றது. அதற்காக இந்த ஆண்டு 35 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள், கட்டிடத்தைக் கட்டுங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே இந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளியுங்கள், என்று. இந்தியாவிலே நாம் யாருக்கும் இளைத்தவர்கள் அல்ல; சளைத்தவர்கள் அல்ல; அறிவிலே, ஆற்றலிலே, ஆனால் வாய்ப்புகள் கிடைக்காததனாலே நாம் பின்தங்கி இருக்கிறோம். இந்த மக்கள் பிற்படுத்தப்பட்டவர்களே தவிர பிறபட்டவர்கள் அல்ல. அதனாலே தான் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்றே சொல்லுகிறோம். மற்றவர்

களாலே பிற்படுத்தப்பட்டவர்கள மிகவும் பிற்படுத்தப்பட்ட வர்கள், அவர்களை கைத்தூக்கி விடுவதற்காகத் தான் திராவிடர் இயக்கத்தினுடைய வாரிசாக அந்த லட்சியத்தினுடைய சின்னமாக இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பொறுப்பை அவர்களே வைத்து இருந்தார்கள். இன்றைக்கு என்னிடத்திலே தந்து இருக்கிறார்கள். அவர்கள் எந்த லட்சியத்தை மேற்கொண்டு, இந்தத் துறையை நடத்திச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதன்படி அந்த வழியிலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் தமிழகத்திலே 67 சதவீதம் பேர் இருக்கின்ற இந்த மிகப் பெரும்பாலான மக்களுக்கு பாடுபட என்றைக்கு நாம் தொடங்கினோம் ? 70 ஆண்டுகளுக்கு முன்பு. 70 ஆண்டுகளுக்கு பிறகு மத்திய அரசாங்கம் கண் விழித்து பாரித்து இருக்கிறது. அது தமிழகத்தினுடைய ஆற்றல் மிக்க போராட்ட உணர்வினாலே நாம் எழுப்பிய உணர்ச்சியினாலே தான். மத்திய அரசாங்கத்திற்கு அதற்காக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மறைந்த ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னார்கள். அதை இன்றைக்கு மாண்புமிகு நரசிம்மராவ் அவர்கள் செயலில் காட்ட முனைந்து இருக்கிறார்கள். ஆனால் 200 கோடி போதாது. இன்னும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அந்த நிதி ஒதுக்கீட்டிலே மாநிலங்களுக்கு மிக அதிகமான அளவிலே 67 சதவீதம் இருக்கின்ற தமிழ் நாட்டின் பிற்படுத்தப்பட்டோர் துறைக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும். அப்போது தான் வீடுகள் கட்டித் தர முடியும். அப்போதுதான் மானியங்களை உயர்த்த முடியும். ஆகவே, அப்படிப்பட்ட கொள்கைப் பிரச்சினைகள் நம்முடைய தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாலே கவனிக்கப்பட்டு வருகிறது. நிச்சயமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்ன ஜாதிகளைச் சேர்ப்பது என்பது பற்றி இன்றைக்கு அது ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினை. 10, 12 நாட்களாக நான் கேள்விக்கு பதில் அளித்துக்கொண்டே வருகிறேன். அவற்றிற்கெல்லம் இப்போது தான் 85-லே ஒரு உத்தரவுப் போட்டோம். 7 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ஆகவே, வருகிற காலத்தில், காலத்திற்கு ஏற்றவாறு இந்த கொள்கைகளை எப்படி சீர்திருத்துவது; எப்படி சீரமைப்பது மத்திய அரசினுடைய கொள்கை முடிவும் கிடைத்ததற்குப் பிறகு, அதற்குப் பிறகு மாநில அரசு, தமிழக அரசு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு எடுப்பார்கள். இந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 37 கோடி அல்ல; நீங்கள் கணக்கு எடுத்தால் இது 3,700 கோடிக்குப் போய் நிற்கும். அது தனித் தனி துறைகளுக்குள்ளே ஒளிந்து கொண்டு இருக்கிறது. கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்



என்பது பழமொழி. அதைப்போல இன்றைக்கு பல்வேறு துறைகளின் மூலம் இந்தப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அவைகளிலே விடுபட்டவர்களை அவர்களில் கவனிக்க முடியாமல் போகின்றவர்களை கவனிப்பதற்காகத் தான் இந்த 37 கோடி ரூபாய். ஆகவே, உங்களுடைய கருத்துக்கள் அனைத்தையும் அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரை, பொதுவாக விளக்கங்கள அளித்து இருக்கிறேன் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

பிற்பகல் 1.55

மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் அரிய ஆலோசனைகள் சிலவற்றையெல்லாம் வழங்கினார்கள். அதையெல்லாம் ஏன் செய்ய முடியாது என்பது அவருக்கே தெரியும். நாங்கள் செய்ய முடியாதவர்களும் அல்ல; செய்யத் தெரியாதவர்களும் அல்ல; அப்படிப்பட்ட முதலமைச்சரும் இன்றைக்கு இல்லை. இவரைவிட்டால் ஆற்றல் நிறைந்த முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இந்த நாட்டிற்கு இந்த மாநிலத்திற்குக் கிடையாது. ஆகவே, நீங்கள் சொல்லித் தான் அதைச் செய்யவேண்டுமென்கின்ற அந்தப் பரிதாபகரமான சூழ்நிலையும் இல்லை. ஆனாலும் சொல்லுங்கள். நீங்கள் இங்கே ஒன்றை சொல்கிறீர்கள்; வெளியிலே போனால் வேறு ஒன்றாகச் சொல்லுகிறீர்கள். எல்.டி.டி. இ-யைத் தடை செய்ய முடியாது என்கின்ற மிகப் பெரிய கருத்தைக் கூட சொல்லி இருக்கிறார். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை ஆனால் அதை வெளியிலே போய் சொல்கிறார். அதை இங்கே சொன்னால் அல்லவா தெரியும். ஆகவே, அவர்களுடைய ஆலோசனைகளையெல்லாம் அவர் ஏற்கெனவே இருந்து பார்த்து, அவர் செய்ய முடியாது என்று விடப்பட்ட சில ஆலோசனைகள். ஆனாலும் இந்த அரசைப் பொறுத்தவரை முடியாதது என்பது இல்லை. இந்த முதலமைச்சரைப் பொறுத்தவரை முடியாதது என்பது இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றும் என்கிற உறுதியைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்சஸ் என்று குறிப்பிட்டது டாக்டர் அம்பாசங்கர் அவர்களுடைய அறிக்கை பற்றியல்ல. அம்பாசங்கர் அறிக்கைக்குப் பிறகு நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மறைவதற்கு முன்பு பல்வேறு வகுப்பு இயக்கங்களிடத்திலேயிருந்து மனுக்களையெல்லாம் பெற்றார்கள். அது அப்படியே இருக்கிறது. நான், இப்பொழுது புதிதாக வேண்டுமென்பதற்காகத்தான் அதைச் சொன்னேன். 1991 வந்திருக்கிறது. ஆகவே, இப்பொழுது புதிதாக எடுக்கிறபோது, ரியாலிஸ்ட்டிக் பிகர்ஸ், உண்மையான புள்ளிவிவரங்கள் நமக்குத் கிடைத்தால் அதை வைத்து 5 பிரிவு அல்லது 6 பிரிவு என்று, அந்த டிகிரி ஆப் பேக்வேட்னஸ்ஸை வைத்துப் போட்டால், அது ஒரு ரேஷனலாக, ஒரு நியாயமாகத் தெரியும், என்பதைத்தான் சொன்னேனே தவிர, அம்பாசங்கர் பரிந்துரைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அவர்கள் என்னைப்பற்றி தனிப்பட்ட முறையிலே சொன்னார்கள். நான் அவருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எல்லோரும் ஒன்றாக இருந்தபொழுது, சட்டநாதன் கமிஷன் வந்தபொழுது அந்தப் பரிந்துரையின் பேரில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16-லிருந்து 18 சதவீதமும், பிற்பட்ட மக்களுக்கு 23-லிருந்து 31 சதவீதமும் கொண்டு வந்தது அந்த அமைச்சரவை என்பதும், அதற்குப்பிறகு பிற்பட்ட மக்களுக்கு 50 சதவீதம் கொண்டுவரவேண்டுமென்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முடிவு எடுத்தபொழுது உடன் இருந்தவன் என்பதையும் நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன். ஏதோ நாங்கள் பேசுவது, வெறும் வன்னியருக்காக மட்டுந்தான் என்ற கண்ணோட்டத்தோடேயே அவர் திரும்பத் திரும்பப் பேசி, ஏதோ பதவி ஆசைக்காக நான் அங்கே போய் அவர்களுடைய வாக்குகளை வாங்கி, அதற்காகப் பேசுகிறேன் என்ற ஒரு உள்நோக்கம் கற்பிக்கின்றார். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். பதவி ஆசை யாருக்கு என்பதை நாட்டு மக்கள் நன்றாக தெரிந்து கொண்டிருக்கிறார்கள். பதவி ஆசைக்காக யார் யார் என்னசெய்கிறார்கள் என்பதையும் நாட்டு மக்கள் நன்றாக அறிந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் .

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பின் தங்கிய சமுதாய கமிஷன் 1985 ஆம் ஆண்டு தன்னுடைய பரிந்துரைகளைச் சமர்ப்பித்து இருக்கிறது. அதிலே மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தலைவர் தெரிவித்த கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அநேகமாக, தலைவர் தெரிவித்த கருத்து என்பது தனி. மற்ற அனைத்து உறுப்பினர்களுமே மாறுபட்ட கருத்துக்களைத்தான் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்குப்பின்னால் எம்.ஜி.ஆர். தலைமையிலே இயங்கிய அமைச்சரவை அந்தப் பரிந்துரைகளை அமுல் செய்வதில்லை என்று முடிவு செய்ததாக அறிவிக்கப்பட்டது. இந்த அறிக்கை கிடப்பில் போடப்படும் என்றும் எம்.ஜி.ஆர். அவர்களே அன்றையதினம் தெரிவித்து இருக்கிறார்கள். 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே ஒரு கூட்டத்தொடரினுடைய கடைசி நாளில் மே மாதம் 12–ஆம் தேதி, அநேகமாக சபையிலே யாரும் இல்லாத நேரத்தில் அந்த அறிக்கை இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.



இப்பொழுது நான் தெரிந்து கொள்ள விரும்புவது, அமைச்சர் அளிக்கின்ற பெரும்பாலான பதில்களில் அந்த அறிக்கையிலே என்ன குறிப்பிட்டிருக்கிறதோ அந்தப் புள்ளி விவரங்களைத்தான் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டதற்குப் பின்னாலே இருக்கின்ற புதிய சூழ்நிலைகளைக் கருத்திலே கொண்டு முழுவதுமாக இது குறித்து ஆய்வு நடத்தி இந்தப் புதிய பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க மூன்றாவதாக ஒரு பின்தங்கிய சமுதாயக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அதற்கு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதுகுறித்து அரசினுடைய நிலையை மாண்புமிகு அமைச்சரவர்கள்— இன்னும் சொல்லப்போனால் முதல்வரவர்களே அவையிலே இருக்கின்ற காரணத்தினாலே முதல்வர் அவர்கள் இதற்கு பதில் அளிப்பார்களேயானால் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2—00

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள் இங்கே கருத்துத் தெரிவித்தது போல, இது குறித்து ஒரு புதிய கமிஷன் அமைப்பது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து, விரைவில் முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் அம்பாசங்கர் கமிஷனைப் பற்றி ஏதோ கருத்து

சொன்னதாக அன்றைக்கும் ஒரு கேள்வி நேரத்திலே நம்முடைய மாண்புமிகு இராஜேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது அவையிலே சொல்லப் பட்டதாக தெரியவில்லை அல்லது எங்கே சொல்லப்பட்டது என்பதும் தெரியவில்லை, ஆனால், . . . .

திரு. ச. இராமச்சந்திரன் : கேபினட் மீட்டிங்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கேபினட் மீட்டிங்கிலே சொல்லப்பட்டது என்பது எப்படி வெளியே வரும். இதேல்லாம் சரியாகச் சொல்ல முடியாது. அது வேறு விஷயம் (குறுக்கீடு) இல்லை. இல்லை. ஆனால், அந்த அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையை ஒட்டித்தான் புரட்சித் தலைவர் ஆட்சியிலே 1985-இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதிலேதான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் உள்ளிட்ட 201 பிரிவுகளை பேக்வேர்ட் என்று குறிப்பிட்டு அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொலலியிருக்கிற சில கருத்துகள் ஏற்கப்படாமலிருக்கலாம் துரதிருஷ்டவசமாக இரண்டு கமிஷன்களுக்கும் தலைவராக போடப்பட்டவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்தவர்கள். அதனால் கடுமையாக எதிர்த்தார்கள் மற்றப் பிரிவினர். வன்னியர்கள் எப்படி அதிகமோ, அதைப்போல முக்குலத்தோர், அதைப்போல யாதவர்கள், மற்றவர்கள், ஆனால் துரதிருஷ்டவசமாகவோ, அதிருஷ்டவசமாகவோ இரண்டு கமிஷன்களுக்குத் தலைவர்களாக ஒரு பிரிவைச் சார்ந்தவர்களே இருந்த காரணத்தினாலே மற்றவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கல்.

ஆனால், அம்பாசங்கர் கமிஷன், அந்த அறிக்கையையெல்லாம் வைத்துத்தான் இந்த பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவிகிதத்தில் பயனடையும் 201 பிரிவுகள் அடங்கிய ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்டோர் என்கிற பட்டியல் உருவாக்கப்பட்டு 1985-இலே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது மாண்புமிகு முதல்வரவர்கள் இதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் அதற்குச் சொல்வதற்கே உள்ள ஒரு காரணமும், இரண்டு வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கின்றன. உச்ச நீதிமன்றத்திலே இந்த 50 சதவீதம் என்று ஒதுக்கியதை எதிர்த்து வழக்கு இருக்கிறது. அதற்குப்பிறகு இந்த மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம் என்று ஒதுக்கியதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே இருக்கிறது. இதற்கிடையிலே மத்திய அரசாங்கத்தினுடைய ஒரு வழக்கு மண்டல் கமிஷனைப் பற்றி வேறு இருக்கிறது.



இவைகளெல்லாம் தெளிவானதற்குப் பிறகு, மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அதை மனதிலே வைத்துக் கொண்டுதான் இதைப் பரிசீலிக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த பிற்படுத்தப்பட்டோருக்காக எப்பொழுது, எந்த நன்மைகளை, எந்த வகையிலே செய்ய முடியுமோ அவைகள் அனைத்திற்கும் அவர்கள் முன் வந்து செய்வார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் ஏதோ தனிப்பட்ட முறையிலே சொன்னார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் . தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை கொள்கையைத்தான் சொன்னேன். நான் இங்கே கொள்கையைத்தான் பேசினேன். 'எல்லா ஜாதிக்கும் பேசினேன் என்று அவர் சொன்னார், நீங்கள் எல்லா ஜாதிக்கும் இங்கே பேசுவீர்கள், அப்படித்தான் பேசுவீர்கள்; ஆனால் வெளியிலே போனால் ஒரு ஜாதிக்குப் பேசுகிறீர்கள் என்று நான் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கருத்தை சொல்லிவிட்டீர்கள்; அவருடைய கருத்தையும் சொல்லிவிட்டார். திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்குள் நான் போகவில்லை. உச்ச நீதிமன்றத்திலேயும், உயர்நீதி மன்றத்திலேயும் இருக்கிற வழக்குகளினுடைய சாராம்சம், பேக்வேர்ட்னெஸ்ஸுக்கு என்ன கிரைட்டீரியா அடாப்ட் பண்ணுகிறீர்கள் . என்பதுதான். ஆகையினாலே, இந்தக் கமிஷனை இப்பொழுது போடுகிற பொழுது அது என்னென்ன கிரைட்டீரியா என்பதை தெளிவாக வகுத்துப் போட்டால், அப்படியே, அந்தப் பரிந்துரைகள் செல்லுபடியாகும். ஆகவே, இந்த மூன்றாவது கமிஷன் அமைக்கின்ற பொழுது அதை அடிப்படையாக வைத்து அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அம்பாசங்கர் கமிஷனே உச்ச நீதி மன்றத்தினுடைய அறிவுரையின் மீதுதான் அமைக்கப்பட்டது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கிறாரே, கிரைட்டீரியா—கிரைட்டீரியா உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கினால்தான்தானே கிரைட்டீரியாவே வரும். உச்ச நீதிமன்றம் அதிலே ஒரு தெளிவான வரைமுறைகளைச் சொன்னால்தானே நமக்குத் தெரியும். அதற்குப் பிறகு நீங்கள் இந்த விதியின்படி கணக்கு எடுங்கள்; இந்த விதியின்படி ஜாதிகளைப் பகுத்துப் பாருங்கள் என்றெல்லாம் நாம் தெளிவாகச் சொல்ல முடியும். ஆகவேதான் மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த மூன்றாவது கமிஷன் அமைப்பதிலே அவர்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஏதோ நாங்கள் வேண்டாமென்று, அரசு

தவிர்த்துக் கொண்டிருக்கிறது என்ற—இப்பொழுதுதான் எட்டு மாதங்கள் ஆகியிருக்கின்றன, இதற்கு முன்னாலே எவ்வளவோ காரியங்கள் நடந்து போயிருக்கின்றன.

ஆக, இன்றைக்கு இருக்கிற உச்ச நீதிமன்றமோ, உயர்நீதி மன்றமோ, இதற்கு என்ன விளக்கம் சொல்லப் போகிறார்கள், முன்னாலே கொடுத்த 'டைரக்ஷ'னைப் போல அம்பாசங்கர் கமிஷனும், சுப்ரீம் கோர்ட்டினுடைய டைரக்ஷன் பேரிலேதான் அமைக்கப்பட்டது. அப்படி ஒரு டைரக்ஷன் வந்தால், அதற்குப் பிறகுகூட நாம் தெளிவாக இருக்க முடியும். ஆனால், இதிலே மாண்புமிகு உறுப்பினர் மீண்டும், மீண்டும் ஏதாவது நீங்கள் செய்யுங்கள், செய்யுங்கள் என்று, நாம் ஏதோ செய்யாதிருப்ப பதைப்போல சொல்ல வேண்டாம். அப்படிப்பட்ட உணர்வை அல்லது கருத்தை வெளியிலே உருவாக்க வேண்டாம்.

பிற்பகல் 2—05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப் படுத்தப்பட்ட வகுப்பினர், மற்றும் சீர் மரபினர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுயை வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் முதலியோர் நலன் பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 36,93,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க— (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க— (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (24—3—1992) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

31. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப் பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகளின் மூலமாகத் தொலைக் காட்சிப்பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 11—11—1991-ஆம் நாளிட்ட 1682-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப் பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் மற்றும் கம்பிவடத் தொலைக் காட்சி அமைப்புக் கோவைகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7!1984) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

32. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1989—90-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

33. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் )மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

35. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1991—92.

36. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்1 முதல் 50 வரை).

622-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை.

### மானியக் கோரிக்கை எண். 32.

### 1992-93

### கொள்கை விளக்கக் குறிப்பு

அ. முன்னுரை :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோரின் பொருளாதார மேம்பாட்டிற்கும், நல்வாழ்விற்கும் பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. தமிழ்நாடு அரசு 1921 ஆம் ஆண்டு முதல் அரசுப் பணிகளிலும் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. காலப் போக்கில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன ; எனினும் அவை அனைத்தும் பிற்படுத்தப் பட்டோரின் நலனையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. தற்போதைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையின்படி 18 சதவிகிதம் ஆதிதிராவிட மக்கட்கும், 1 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கட்கும் (பழங்குடியினருக்கும்), 30 சதவிகிதம் பிற்படுத்தப் பட்டோருக்கும், 20 சதவிகிதம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும், 31சதவிகிதம் பொதுத் தொகுப்புக்கும் உள்ளன.

ஆ. நலத் திட்டங்கள் :

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கென செயற்படுத்தப்படும் நலத் திட்டங்களைப் பின்வருமாறு மூன்றாக வகைப்படுத்தலாம் :

(அ) கல்வி

(ஆ) பொருளாதார மேம்பாடு

(இ) இதர திட்டங்கள்.

(அ) கல்வி :

சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான முக்கிய கருவி கல்வியாகும். எனவே அரசு, பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வி அளிப்பதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இலவசக் கல்வி அளித்தல், மதிய உணவு வழங்குதல், புத்தகங்கள், எழுது பலகைகள் மற்றும் சீருடைகள் வழங்குதல், படிப்புதவித் தொகைகள் வழங்குதல், பள்ளிகளையும்

மாணவரில்லங்களையும் பராமரித்தல் ஆகிய சலுகைகளை அரசு வழங்கி வருகிறது. அனைந்திந்தியப் பணிகளில் சேருவதற்கான தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சியளிப்பதற்காகத் தனி பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

(1) பள்ளிகள் :

சீர்மரபினர் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாட்டில் 285 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. 1991–92 ஆம் ஆண்டில் 57,194 மாணவ மாணவியர் பயனடைந்தனர். இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வித் தரத்தையும் வசதிகளையும் படிப்படியாக உயர்த்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சென்ற ஆண்டு ஐந்து நடுநிலைப்பள்ளிகள் ரூபாய் 5.98 இலட்சம் செலவில் உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. அதே போன்று இந்த ஆண்டும் ஐந்து நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படஉள்ளன. மேலும் அடிப்படைச் சுகாதார வசதிகளைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. 1992–93 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியில் உள்ள சீர்மரபினர் பள்ளிக்கு ரூபாய் 50 ஆயிரம் செலவில் கழிப்பறை வசதிகள் செய்து தர அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்துறையினால் நடத்தப்பட்டு வரும் 285 பள்ளிகளில், நிர்வாக வசதியை கருத்தில் கொண்டு மதுரை மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் உள்ள 257 பள்ளிகளைத் தவிர, மற்ற மாவட்டங்களில் உள்ள 28 பள்ளிகளைக் கல்வித் துறையின் நிர்வாகத்திற்கு மாற்றம் செய்யும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(2) மதிய உணவு வழங்குதல் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையால் நடத்தப்படுகிற 285 பள்ளிகளிலும் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' செயற்படுத்தப்படுகிறது. 1991–92 ஆம் ஆண்டில் 50,534 மாணவ, மாணவியர் பயனடைந்தனர். 1992–93 ஆம் ஆண்டிற்கு 31.35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) புத்தகங்கள்-எழுது பலகைகள் வழங்குதல் :

இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசமாகப் புத்தகங்களும் எழுது பலகைகளும் வழங்கிட 1992–93 ஆம் ஆண்டிற்கு 24.46 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



(4) சீருடைகள் (பள்ளிகள்/மாணவரில்லங்கள்) :

இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு அரசு ஆண்டுதோறும் தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின்போது புதிய சீருடைகளை வழங்குகிறது. 17,829 பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரும், 61,000 மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியரும் 1991–92 ஆம் ஆண்டில் பயனடைந்தனர்.

1992–93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் செலவிடுவதற்கென ரூபாய் 60.21 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) படிப்புதவித் தொகைகள் :

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பொதுவாக உதவித் தொகைகள் அளிக்கப்படுகின்றன. பிற இடங்களில் தங்கிப் பயிலும், மாணவ, மாணவியருக்கான உதவித் தொகையில், படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணம், புத்தகங்களின் தொகை ஆகியவை அடங்கும். அரசு விடுதியில் தங்கிப் பயிலுபவர்களுக்கான உதவித் தொகை மேற்சொன்ன கட்டணங்களுடன் நிர்ணயிக்கப்பட்ட உண்டி, உறையுள் கட்டணமும் அடங்கும், இந்த உதவிகளைப் பெறப் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருக்கவேண்டும். பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர்மரபின மாணவ, மாணவியருக்கு ஆறாம் வகுப்பிலிருந்தும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. மாணவ, மாணவியருக்குப் படிப்புதவித் தொகை வழங்க அந்தந்தக் கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1992–93 ஆம் நிதியாண்டில் இதற்காக ரூபாய் 691.22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(6) இலவசக் கல்வி :

மூன்றாண்டுப் பட்டப் படிப்பு மேற்கொண்டுள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழில் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்வி அளிக்கப்படுகின்றது :—

(அ) பெற்றோரின்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மேற்படக்கூடாது.

(ஆ) இதுவரையில் பட்டதாரிகள் இல்லாத ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராக அம்மாணவ, மாணவியர் இருக்கவேண்டும்.

மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு, 1990–91-ல் மூன்றாண்டு பட்டப்படிப்புக்கும், 1991–92-லிருந்து தொழிற் பட்டப்படிப்புக்கும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும் இத்திட்டங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

இவ்விரு திட்டங்களின்கீழ் பயன்பெறும், மாணவ, மாணவியர் கல்விக் கட்டணங்கள், கல்விச் சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டாயமாகச் செலுத்தத்தக்க ஏனைய கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இதனால், 1991–92 ஆம் ஆண்டில் 1,24,131 பேர் பயனடைந்துள்ளனர். இத்திட்டங்களுக்கென 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 432.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவு மானியம் :

தனியாரால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட 39 மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 70 என்ற வீதத்தில் ஓராண்டில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000 வரை உள்ள மாணவ, மாணவியர் மட்டுமே இந்த மானியம் பெறத் தகுதியுடையவர்களாவர்.

1991–92-ல் 1,794 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ. 13.4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1992–93 ஆம் நிதியாண்டிற்கு இதற்காக ரூ. 13.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பரிசுகள் வழங்குதல் :

ஒவ்வொரு ஆண்டும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தனித்தனியாக எட்டாம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மொத்தத்தில் ஒவ்வொரு ஆண்டும் 256 பரிசுகள் வழங்கப்படுகின்றன.



மாநில அளவிலான பரிசுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு ரூபாய் 1,500 முதல் ரூ. 3,000 வரையிலும், மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரையிலும், மாவட்ட அளவிலான பரிசுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு ரூ. 150 முதல் ரூ. 1,500 வரையிலும், மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு ரூ. 300 முதல் ரூ. 3,000 வரையிலும் வழங்கப்படுகின்றன. 1992–93 ஆம் ஆண்டு பரிசுகள் வழங்குவதற்கென்று ரூ. 1.27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு (12 ஆம் வகுப்பு).

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவ, மாணவியரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 12 ஆம் வகுப்பு தேர்வில் முதல், இரண்டாம் மதிப்பெண்கள் பெற்று தொழில் கல்லூரியில் சேர்ந்துள்ள இரு மாணவர்களுக்கும், இரு மாணவியருக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ. 2,000 என ஐந்தாண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

தந்தை பெரியார் நினைவுப் பரிசு (10 ஆம் வகுப்பு).

ஒவ்வொரு மாவட்டத்திலும், 10 ஆம் வகுப்புத் தேர்வில் முதல், இரண்டாம் நிலை மதிப்பெண்களைப் பெற்று, பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்துள்ள இரு மாணவர்களுக்கும், இரு மாணவியருக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ. 2,000 என மூன்றாண்டுகளுக்குத் தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

இப்பரிசுகளுக்காக 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 9.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு மாணவ, மாணவியர் விடுதிகள் :

அரசின் சார்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக 771 மாணவ, மாணவியர் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1991–92-ல் இவ்விடுதிகளில் தங்கிப் பயின்ற மாணவ, மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 43,538 ஆகும். விடுதிகளில் மாணவ, மாணவியரை அனுமதிப்பதற்குப் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். தற்போது இத்துறையால் நடத்தப்படும் 771 மாணவ, மாணவியர் விடுதிகளில் 74 விடுதிகள் மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏனைய விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. மாணவ, மாணவியர்

விடுதிகளை நல்ல கட்டிடங்களில் அமைக்க வேண்டிய அவசியத்தையும், அவர்கள் நல்ல சூழலில் கல்வி கற்க வேண்டிய தேவையையும் அரசு நன்கு உணர்ந்து, மாணவ, மாணவியர் இல்லங்களுக்குச் சொந்த கட்டிடங்கள் ஏற்படுத்துவதை அரசு படிப்படியாக செயல்படுத்தி வருகிறது. 1992–93-ல் மாணவியர்க்கென ஆறு புதிய விடுதிக்கட்டிடங்கள் ரூ. 57.84 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளன. மாணவ, மாணவியர்க்கான விடுதிகள் மேலும் மேலும் அதிகமாக தொடங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவியரின் கல்வி வாய்ப்பு வசதிகளை மேலும் பெருக்கும் எண்ணத்தோடு இந்த நிதியாண்டில் ரூபாய் 23.68 இலட்சம் செலவில் 13 புதிய மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட உள்ளன.

அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டிடங்களை ஏற்படுத்த நிதி நிலை இடம் தரவில்லை. எனவே, விடுதிகள் கட்ட ஹட்கோ நிறுவனம் 75 சதவிகிதம் கடன் உதவி அளிக்கக் கேட்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவியைப் பயன்படுத்தி, மீதம் 25 சதவிகித நிதியைத் திட்ட ஒதுக்கீட்டின் மூலம் பெற்று, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டிடங்கள் கட்ட வழிவகை காணப்படும். கட்டிடங்கள் கட்டும் பொழுது மாணவியர் இல்லங்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி இத்துறையின் கீழ் நடத்தப்பட்டு வரும் அனைத்து விடுதிகளிலும் தண்ணீர், மின்சாரம், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை தனி அலுவலர் ஒருவர் நேரில் சென்று விரிவாக ஆய்வு செய்துள்ளார். அந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் குறைகள் களையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவ, மாணவியர் இல்லங்களின் பராமரிப்பைச் சீரமைக்கவும், நல்ல முறையில் நிர்வகிக்கவும் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரை அல்லது பள்ளித் தலைமை ஆசிரியரைத் தலைவராகவும், பெற்றோர்-ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நால்வரையும் (ஆசிரியர் பிரதிநிதிகள் இருவர், பெற்றோர் பிரதிநிதிகள் இருவர்) மாணவர் இல்லத்தின் காப்பாளரையும் உறுப்பினர்களாகவும் கொண்டு ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் நிர்வாகக் குழு ஒன்று எல்லா விடுதிகளிலும் அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பொது அறிவினை வளர்க்கும் நோக்கோடு இந்த நிதியாண்டிலிருந்து ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளேடு வழங்குவதற்கு வழிவகைகள்



செய்யப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 400 விடுதிகளுக்கு இவ்வசதி அளிக்கப்பட உள்ளது. அதற்காக இந்த நிதி ஆண்டில் ரூ. 5.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர், மாணவியர் நல்ல தரமான நூல்களைக் கற்று அடிப்படை அறிவை மேம்படுத்திக் கொள்ள மொத்தம் ரூ. 15 இலட்சம் செலவில் எல்லா மாணவ மாணவியர் இல்லங்களிலும் இவ்வாண்டு சிறு நூலகங்கள் அமைக்கப்படும்.

உணவுச் செலவு :

அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குத் தற்போது பின் வரும் வீதங்களில் உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது:—

| வரிசை எண் | விடுதிகள். | ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு வழங்கப்படும் தொகை. | |
|---|---|---|---|
| | | சென்னை மாநகர். | வெளியூர். |
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 1. | கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகள் | 160 | 155 |
| 2. | தொழிற் பயிற்சி மாணவ/மாணவியர் விடுதிகள். | | |
| 3. | உயர்நிலைப் பள்ளி மாணவ/மாணவியர் விடுதிகள் | 105 | 105 |

விடுதிகளைப் பராமரிப்பதற்காக 1992–93-ம் நிதியாண்டில் ரூ. 1,217.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாடு :

தொழில்கருவிகளை இலவசமாக வழங்குதல்

முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் மற்றும் போயர்களுக்கு முறையே முடிதிருத்தும் கருவிகள் அடங்கிய பெட்டிகள், துணி தேய்ப்புப் பெட்டிகள், கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தொழில் கருவிகள் ஆண்டு வருமானம் ரூ. 6,400க்கு குறைவாக இருப்பவருக்கு மட்டும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் வழங்கப்படும் கருவிகளின் எண்ணிக்கை வருமாறு :

| தொடர் எண். கருவியின் பெயர். | ஆண்டு தோறும் வழங்கப்படும் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. துணித் தேய்ப்புப் பெட்டிகள் | 4,000 |
| 2. முடி திருத்தும் கருவிகள் | 500 |
| 3. கல்லுடைக்கும் கருவிகள் | 500 |

இவ்வகை உதவிகளை 1991–92-ஆம் ஆண்டில் 5,000 பேர் பெற்றனர். 1992–93-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 47.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முடிதிருத்தகம், சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைத்தல் :

கடனுதவியளிக்கும் திட்டத்தின் கீழ் முடிதிருத்தகம், சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைக்க பின் வருமாறு கடனுதவியளிக்கப்படுகிறது :—

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | பயனடைவோர் எண்ணிக்கை. | அரசு மானியம். | வங்கிக்கடன் உதவி. | பயனடைவோருக்கு ஒவ்வொருவருக்கும் ஆகும் மொத்த செலவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | முடிதிருத்தகம் | 200 | 1,500 | 3,500 | 5,000 |
| 2 | சலவையகம் | 150 | 1,500 | 3,500 | 5,000 |
| 3 | நடமாடும் சலவையகம். | 50 | 600 | 1,400 | 2,000 |

1991–92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 400 பேருக்கு உதவி அளிக்கப்பட்டது. இதற்காக 1992–93-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சென்ற ஆண்டைப்போலவே 400 பேருக்கு உதவி அளிக்க 5.55 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



நிலம் கையகப்படுத்துதல்:

முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், போயர் மற்றும் நரிக்குறவர் குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டு மனைகள் வழங்க 1989–90-ம் ஆண்டு வரை நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வந்துள்ளது. இத்திட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து இனத்தவருக்கும் நீட்டிக்கப்பட்டு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன.

1991–92-ஆம் நிதி ஆண்டில் 546 குடும்பங்கள் பயன்பெறக் கூடியதும் ரூ. 28.15 இலட்சம் செலவு ஏற்படக் கூடியதுமான செயற்குறிப்புகளுக்கு அரசு இதுவரை அனுமதியளித்துள்ளது.

இத்திட்டத்திற்காக 1992-93ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1.01 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குலாலர்களுக்கு மின்விசையில் இயங்கும் சக்கரம் வழங்குதல்:

மண்பாண்டம் செய்யும் குலாலர்களுக்கு (குயவர்கள்) உதவிட இதுவரை எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. இவர்கள் சமூக மற்றும் பொருளாதார நிலையில் முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் மற்றும் போயர்களைவிட உயர்ந்த நிலையில் இல்லை. மண்பாண்டத் தொழிலை நவீனமயமாக்கும் எண்ணத்துடனும், குலாலர்களுக்கு உதவும் எண்ணத்துடனும் இவ்வாண்டு நூறு குலாலர் குடும்பங்கள் பயனடையும் வகையில்/மின் விசையில் இயங்கும் மரத்தினால் ஆன சக்கரம் ஒவ்வொன்றும் ரூ. 5,000 விலையில் இலவசமாக வழங்க இரண்டாம் பகுதித் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், சென்னை.

இந்நிறுவனம், 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசால் 16—11—1981ஆம் நாளன்று நிறுவப்பட்டு, 22—5—1982லிருந்து செயல்படத் தொடங்கியது.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

(அ) பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அச்சங்கங்களுக்குத் தொடக்க நிதியுதவி வழங்குதல்;

(ஆ) பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் என்று கருதக்கூடிய வழிகளில் எல்லாம் பொதுவான நடவடிக்கைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளுதல்

இந்நிறுவனம், தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திட்டச் செலவில் ரூ. 3 இலட்சம் உயரளவாகக் கொண்டு 20 சதவிகித அளவுக்குத் தொடக்க நிதியுதவி வழங்கி வருகிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் திட்டச் செலவில் எஞ்சியுள்ள தொகையை வங்கிகளிடமிருந்தும், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டும். இந் நிறுவனம் இதுவரை 45 தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 15.98 இலட்சம் வரை தொடக்க நிதியுதவி அனுமதித்துள்ளது.

இந்நிறுவனம் தன் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி பிற்படுத்தப்பட்டோர், மிக்ப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெருமளவில் பயன் பெறும் வகையில், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கைவினைஞர்களுக்கென்று கைவினைத் தொழில் வளாகங்களை ஏற்படுத்துதல், கரும்பு பயிரிடும் பகுதிகளில் டயர் வண்டிகள் வாங்குவதற்காக கடன் வழங்குதல், தனிப்பட்டவர்களுக்குக் கடன் வழங்குதல், போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், தேயிலை, தீப்பெட்டி, அச்சு, செங்கல் மற்றும் ஓடு, தையல், தோல், டாக்சி மற்றும் ஆட்டோ, சவ்வரிசி போன்ற பல்வேறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடக்க நிதி உதவி அளித்து, அம்மாதிரியான சங்கங்களின் வளர்ச்சியில் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியுடன்இணைந்து ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

<u>இதர திட்டங்கள்:</u>

மத்திய அரசால் சமீபத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களுக்கேற்ப தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தில் தேவையான மாறுதல்களைச் செய்து சீரமைக்கவும், விரிவாக்கம் செய்யவுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைத்தறித் துறை, கதர் மற்றும் கிராமத் தொழில் துறை, மீன்வளர்ச்சித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, தொழில் துறை போன்ற அரசுத் துறைகளில் பல்வேறு நலத் திட்டங்களினால் பயன் பெறுவோருள் பெரும்பாலோர் பிற்படுத்தப்பட்டோரே ஆவர். எனினும் அரசுத் துறைகளின் நலத் திட்டங்களினால் இதுவரை எந்தவிதப் பயனும் அடையாத இனத்தவர் பிற்படுத்தப்பட்டோரிலும், மிகப் பிற்படுத்தப்பட்டோரிலும் உண்டு. அம்மாதிரி இனத்தவரை அடையாளங்காண விரிவானதொரு ஆய்வு இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகிறது. ஆய்வு முடிந்ததும் அவ்வினத்தவர் பயன்பெற சிறப்புத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திட அரசு எண்ணியுள்ளது.

அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் பயனடைந்து வரும் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்



சீர்மரபினர் எண்ணிக்கையைப் பற்றிய சரியான புள்ளி விவரங்கள் இல்லை. எனவே இந்த அடிப்படைப் புள்ளி விவரங்களைத் திரட்டும் எண்ணத்துடன் திட்டம் தொடர்புடைய விண்ணப்பப்படிவங்களில் பயனாளிகளின் இனம் பற்றிய விவரங்களைக் கண்டறிய உதவும் வகையில் தேவையான மாறுதல்களைச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

<u>அனைத்து இந்தியப்பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டங்கள்:</u>

அனைத்து இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதும் மாணவ, மாணவியருக்குப் பயிற்சியளிக்க சிறப்புப் பயிற்சி மையம் ஒன்றை இத்துறை நடத்தி வருகின்றது. இந்த மையத்தின் சாதனைத் திறனை மேம்படுத்துவதற்காக ஆரம்பத் தேர்வுக்குப் பயிற்சியளிக்கவும், பிரதம தேர்வினை எழுதவும் உதவும் வகையில் பயிற்சிக் கால அளவை ஐந்து திங்களிலிருந்து எட்டு திங்களுக்கு உயர்த்தி உள்ளது. மத்திய அரசுத் தேர்வாணையத் தேர்விற்குரிய பாடத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு ஆனால், பட்ட மேற்படிப்பில் அம்மாணவர்கள் பாடமாக எடுத்துப் படிக்காத பாடங்களில் அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். அனைத்து இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதும் 25 மகளிருக்குப் பயிற்சியளிப்பதற்காகத் தனியாகக் கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் பயிற்சி மையம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. அத்துடன் இந்தத் தேர்வுகளை எழுதக் கருதும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மாணவ, மாணவியருக்குப் பயிற்சியளிப்பதற்காக் அரசு கீழ்க்கண்ட நான்கு மையங்களை ஏற்படுத்தியுள்ளது.

1. அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி.
2. அண்ணாமலைக் பல்கலைக் கழகம், சிதம்பரம்.
3. காந்தி கிராமம் ஊரக பல்கலைக் கழகம், காந்தி கிராமம்.
4. தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு 250 ரூபாய்க்கு மேற்படாத வகையில் உணவுக் கட்டணமும், இலவச தங்குமிட வசதியும் அளிக்க அரசு வகை செய்துள்ளது. இந்தத் தேர்வுகள் தவிர, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணித் தேர்வு வாரியம், இரயில்வே பணித் தேர்வு வாரியம் முதலியவை நடத்தும் தேர்வுகளை எழுதும் மாணவ, மாணவியருக்குச் சிறப்புப் பயிற்சி மையங்கள் மூலமாகப் பயிற்சியளிக்க அரசு வகை செய்துள்ளது.

<u>இந்த மையங்கள் அதன் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள 1992-93 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 16.55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.</u>

பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் ஆகிய கல்லூரிகளுக்கான நுழைவுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிப்பதற்காக சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு மையங்களில் ஒவ்வோர் ஆண்டும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கும், பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு தேர்வு எழுதுவோருக்கு துறை நடத்தும் கல்லூரி மாணவ, மாணவியர் இல்லங்களில் 15 நாட்களுக்கு இலவசமாகத் தங்க அனுமதி வழங்கப்படுகின்றது. இத்தகைய பயிற்சி பெற தகுதியுடைய மாணவ, மாணவியர் தம் பெற்றோர் ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பு 12,000 ரூபாயாகும். பயிற்சிக் கால அளவு 15 நாட்களாகும். இத்தகைய பயிற்சியின் மூலம் மாணவ, மாணவியர் பயன் பெறுவதற்கென 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ. 3.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள தனிப்பயிற்சி நிலையத்திற்கென் சொந்தக் கட்டிடம் ஏதும் கிடையாது. இந்த நிதியாண்டில் இந்தப் பயிற்சி நிலையத்தின் செயல் திறனை முழு அளவில் உயர்த்தவும், வாடகைக் கட்டிடத்தில் இருந்து அந்நிலையத்தை அரசுக்குச் சொந்தமான புதிய வளாகம் ஒன்றில் அமைக்கவும் முடிவு செய்து, இதற்காக வரும் நிதியாண்டில் ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் படிப்பில் சிறந்த மாணவர்கள் இறுதி சுற்றுத் தேர்வுக்கு உரியவாறு பயிற்சி பெற ஏற்ற வகையில், தொடக்கநிலைத் தேர்வில் சிறப்பிடம் பெற்றுள்ள எல்லா மாணவர்க்கும் கடைசி சுற்றுத் தேர்வில் தேர்ச்சி பெற, தனியாரால் நடத்தப்படும் தனிப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான முழுச் செலவினையும் அரசு ஏற்கும்.

சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் :

இருபது சட்டப் பட்டதாரிகள் நீதித்துறையில் அனுபவம் பெறும்வகையில் முதுநிலை வழக்கறிஞர்களிடம் 3 ஆண்டுகள் பயிற்சிபெறும் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. பயிற்சிக்காலத்தில் பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படும். இதற்கான வருமான உச்சவரம்பு ரூ. 12,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிற்றுவிக்கும் முதுநிலை வழக்கறிஞருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும்.



இத்திட்டத்திற்காக 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ. 5.04 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைத் தொழில் பயிற்சி மையங்கள் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்கானூரணியிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் வீரகேரளம்புதூரிலும் மூன்று பொதுநோக்கு பொறியியற் பட்டறைகள் இத்துறையின் நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. இவை 1984-ஆம் ஆண்டு ஜுலை மாதத்திலிருந்து தொழில்பயிற்சி நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டு தற்போது, சென்னையில் உள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 208 நபர்கள் பயன்பெறும் வகையில் இப்பட்டறைகளில் பொருத்துதல், பற்றவைத்தல், இரும்புத தகடு செய்தல் ஆகியவற்றில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1992-93-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 19.43 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மகளிர் 220 பேர் பயன்பெறும் வகையில் ஏழு தையல் பயிற்சி மையங்களையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறையில் நாரிழை தயாரிப்புப் பிரிவு ஒன்றையும் அரசு நடத்துகின்றது. இதற்காக 1992-93ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 5.53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பணி சார்ந்த பயிற்சி வகுப்புகள் :

கல்வி நிறுவனங்கள், தொழிற் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியருக்கு அரசு பல சலுகைகளையும் வசதிகளையும் செய்து கொடுத்து வருகிறது. அத்துடன், பணி சார்ந்த பயிற்சிக்கு (Job oriented Training) ஏற்பாடுகள் செய்து உதவுவதன்மூலம் பிற்படுத்தப்பட்டோரைப் பெரும் அளவில் பணியமர்த்த முடியும். ஆனால் பணி சார்ந்த பயிற்சிக்கான வசதிகள் முழுமையான அளவில் அரசு நிறுவனங்களில் இல்லை. எனவே தட்டெழுத்து - சுருக்கெழுத்துப் பயிற்சி, கணிப் பொறிப் பயிற்சி மற்றும் கனரக வாகனம் ஓட்டுனர் பயிற்சி தனியார் நிறுவனங்களில் அளிக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் பயிற்சி பெற உதவித் தொகை அரசால் அளிக்கப்படுகிறது. 1991-92-ஆம் ஆண்டில் 8.97 இலட்சம் ரூபாய் செலவில் 450 மாணவ மாணவியர்க்கு தட்டச்சு-சுருக்கெழுத்துப் பயிற்சியும், 50 பேருக்கு கணிப்பொறி பயிற்சியும், 50 பேருக்கு கனரக மோட்டார் ஓட்டும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 1992-93ஆம் ஆண்டில் ரூ. 13.43 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது இவ்வகைப் பயிற்சிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. எனவே வரும் ஆண்டுகளில் பயன் பெறுவோர் எண்ணிக்கையை உயர்த்திட அரசு கருதியுள்ளது.

மாநிலச் சிறுபான்மையினர் நல ஆணையம் :

மாநிலச் சிறுபான்மையினர் நல ஆணையத்தை அரசு அமைத்துள்ளது. அதன் அலுவல்கள் வருமாறு :—

(1) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும், மாநில சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டங்களிலும் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்புகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது பற்றி மதிப்பீடு செய்தல் ;

(2) எல்லாப் பாதுகாப்புத் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கும், செவ்வனே நிறைவேற்றுவதற்கும் வேண்டிய பரிந்துரைகள் செய்தல் ;

(3) சிறுபான்மையினருக்கென அரசால் நிறைவேற்றப்பட்ட கொள்கைகளும் திட்டங்களும் செயல்படுத்தப்படுவது குறித்து ஆய்வு செய்தல்;

(4) சிறுபான்மையினருக்கு எதிரான வேறுபாடுகளைக் களைய ஆய்வுகள், ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளுதல்;

(5) சிறுபான்மையினர் நலன் குறித்து எடுக்கப்படும் சட்டப்படியான நடவடிக்கைகள் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் பற்றி மாநில அரசுக்கு ஆலோசனைகள் தெரிவித்தல்; மற்றும்

(6) மாநில அரசுக்குக் குறித்த காலத்திற்கு ஒரு முறை ஆணையத்தின் நடவடிக்கைகள் பற்றி அறிக்கை அனுப்புதல்.

அரசு, மாநிலச் சிறுபான்மையினர் நல ஆணையத்தை 24—7—1991 அன்று திருத்தி அமைத்துள்ளது. சிறுபான்மையினருக்குள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து சிறுபான்மையினர் நலன் குறித்து உரிய பரிந்துரைகள் செய்யும் நோக்குடன் இவ்வாணையம் மாவட்டங்களுக்குச் சென்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிறுபான்மையினருடன் கலந்துரையாடக் கருதியுள்ளது.

இந்த ஆணையத்தின் நிர்வாகச் செலவிற்காக 1992–93ஆம் ஆண்டு வரவு—செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ. 5.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களில் முகமதியர்களும், கிருத்துவர்களும் பெரும் பகுதியாவார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குரிய எல்லா சலுகைகளையும் பெற்று வருகின்றனர். இம்மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பைப் பெருக்கும் நோக்கோடு மைய அரசு நிதி உதவி மூலம் சில தனியார் கல்லூரிகளின் வழியாக சிறப்புப் பயிற்சித் திட்டங்களைப் பல்வேறு மாநிலங்கள் நடத்தி வருகின்றன. இம்மாநிலத்தில் வாழும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் இவ்வரசு மைய அரசினை அணுகி தனிப்பயிற்சி நிலையங்கள் அமைந்திட வழிவகுத்துள்ளது. சென்னை புதுக் கல்லூரியிலும், ஜஸ்டிஸ் பஷீர் அகமது சையத் பெண்கள் கல்லூரியிலும் தனிப்பயிற்சி மையங்கள் 6.90 இலட்சம் ரூபாய் மைய அரசின் மானிய உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளன.



மண்டல் குழுவின் பரிந்துரைகள் :

மண்டல் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், சமுதாய நிலையிலும், கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசு நிறுவனங்கள் உட்பட மத்திய அரசுப் பணிகளில் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென மத்திய அரசு, 1990 ஆகஸ்டு 13-ம் நாள் ஆணை பிறப்பித்துள்ளது. ஆயினும், மத்திய அரசு பிறப்பித்துள்ள இந்த ஆணைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத்தடை ஆணை பிறப்பித்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட இவ்வரசு, உச்ச நீதிமன்றத்தில் தடை ஆணையை நீக்க மத்திய அரசோடு இணைந்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனை உயர்த்த வேண்டும் என்பதில், உறுதியான கொள்கையைக் கொண்டுள்ள இவ்வரசு, மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் வேளையில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலை வாய்ப்புகளில் மட்டுமின்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் இந்திய அரசை வலியுறுத்தும் வகையில் இப்பேரவையில் 30–9–1991 அன்று ஒருமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானத்தின் நகல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்திய பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் சார்பில் திருத்திய எதிர்மனு ஒன்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்

டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் தடையாணையை நீக்கக் கோரும் ரிட் மனுவின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நமது அரசின் உறுதியான நிலைப்பாட்டினை உச்ச நீதி மன்றத்தில் உரிய வகையில் எடுத்துரைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

## 1992—93ஆம் ஆண்டு புதிய திட்டங்கள்.

1992—93 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை அரசு செயல்படுத்தக் கருதியுள்ளது :—

(1) பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின மாணவியர்க்கென்றே ரூ. 23.68 இலட்சம் செலவில் 13 இடங்களில் புதிய விடுதிகள் தொடங்கப்படும்;

(2) பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, மற்றும் சீர்மரபின மாணவியர்க்கென்று தற்போது வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் விடுதிகளில் ஆறு விடுதிகளுக்கு ரூ. 57.84 இலட்சம் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்;

(3) ஐந்து நடுநிலைப்பள்ளிகள் ரூ. 6.10 இலட்சம் செலவில் உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்படும்;

(4) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் உள்ள மாணவர் விடுதிகளில் 205 மாணவர் விடுதிகளுக்கு சுமார் ரூ. 10 இலட்சம் செலவில் பிரஷர் குக்கர்களும் 80 மாவரைக்கும் இயந்திரங்களும் வழங்கப்படும்;

(5) அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளிலும் ரூ. 15 இலட்சம் செலவில் சிறிய நூலகங்கள் அமைக்கவும், 400 மாணவர் விடுதிகளுக்கு ரூ. 5.60 இலட்சம் செலவில் செய்தித் தாள்கள் வழங்கவும் வகை செய்யப்படும்;

(6) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியில் உள்ள அரசு சீர்மரபினர் பள்ளிக்கு ரூபாய் 50 ஆயிரம் செலவில் கழிப்பறை கட்டித்தரப்படும்;



(7) 100 குயவர்களுக்கு ரூபாய் 5 இலட்சம் செலவில் மண்பாண்டம் தயாரிப்பதற்கு மின் விசையில் இயங்கும் 100 சக்கரங்கள் வழங்கப்படும்;

(8) சென்னையில் உள்ள அனைத்து இந்தியப்பணிகளுக்கான சிறப்புப்பயிற்சி நடத்தப்படும் தனிப் பயிற்சி நிலையத்திற்கு ரூ. 35 இலட்சம் செலவில் புதிய வளாகம் கட்டப்படும்.

## முடிவுரை :

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் கல்வி, பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், இவ்வரசு, பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களையும், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது. சமுதாய நிலையிலும், கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றம் அடைந்து தலைநிமிர்ந்து வாழ்ந்திட இவ்வரசு தொடர்ந்து பாடுபடும்.

## இணைப்பு.

1992-93 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு.

| | | |
|---|---|---|
| நிர்வாகம் .. .. | பி.வ. .. .. | 15,484 |
| | சி.பா.ந. .. | 588 |
| | மி.பி.வ. .. .. | 2,988 |
| ஒட்டு மொத்த ஒதுக்கீடு | பி.வ. .. .. | 9,180 |
| | மி.பி.வ. .. | 4,590 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | பி.வ. .. .. | 856 |
| | மி.பி.வ. .. | 1,254 |

மொத்த ஒதுக்கீடு:— (ரூபாய் ஆயிரத்தில்)

| | | | |
|---|---|---|---|
| பி.வ. | 154,471 | 155,059 | 3,69,361 |
| சி.பா.ந. | 588 | | |
| மி.பி.வ. | 214,302 | | |

| தொடர் எண்ணும் திட்டப் பணிகள் விவரமும். | திட்டப் பணிகள். | | | திட்டத்தில் சேராதவை. | | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | பி.வ. | மி.பி.வ. மற்றும் சீ.ம. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 படிப்புதவித் தொகை | 1,505 | 889 | 419 | 45,482 | 16,492 | 4,335 | 46,987 | 22,135 |
| 2 இலவசக் கல்வி .. | 9,423 | 33,800 | .. | .. | .. | .. | 9,423 | 33,800 |
| 3 பள்ளிகள் .. | .. | .. | 1,974 | .. | .. | 55,731 | .. | 57,705 |
| 4 புத்தகங்களும் எழுது பலகைகளும். | .. | .. | 922 | .. | .. | 1,524 | .. | 2,446 |
| 5 உடைகள் .. | 893 | 612 | 3,088 | 450 | 365 | 613 | 1,343 | 4,678 |
| 6 உணவு மான்யம் .. | 145 | 46 | .. | 772 | 426 | 6 | 917 | 478 |
| 7 விடுதிகள் .. | 17,347 | 10,459 | 4,945 | 47,446 | 24,723 | 16,866 | 64,793 | 56,993 |
| 8 பல்கலைக் கழகத்திற்கு இழப்பீடு. | .. | .. | .. | 27 | 13 | .. | 27 | 13 |
| 9 ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | .. | 15 | .. | .. | .. | .. | 15 |
| 10 வேளாண்மை .. | .. | .. | .. | .. | .. | 75 | .. | 75 |
| 11 பலநோக்கு பொறியியல் பட்டறைகள். | .. | .. | 50 | .. | .. | 1,893 | .. | 1,943 |
| 12 குடிசைத் தொழில்கள் | .. | .. | .. | 436 | .. | 117 | 436 | 117 |
| 13 இலவசக் கருவிகள் | .. | 5,100 | .. | .. | 203 | .. | .. | 5,303 |
| 14 குடிநீர்க் கிணறுகள் | .. | .. | .. | .. | .. | 10 | .. | 10 |
| 15 சலவைத் துறை .. | .. | 230 | .. | .. | .. | .. | .. | 230 |
| 16 சிறப்புத் தனி பயிற்சி நிலையம் | 654 | .. | .. | 1,001 | .. | .. | 1,655 | .. |
| 17 வீட்டுமனை கையகப் படுத்துதல். | .. | 10,000 | .. | .. | 175 | .. | .. | 10,175 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18 சீர்மரபினருக்கு வீட்டுவசதி | .. | .. | 1 | .. | .. | .. | .. | 1 |
| 19 மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி. | .. | 329 | .. | 41 | .. | .. | 41 | 329 |
| 20 பட்டய கணக்கர் படிப்பு | .. | .. | .. | 3 | 2 | .. | 3 | 2 |
| 21 பரிசுகள் வழங்குதல் | 1,085 | .. | .. | .. | .. | .. | 1,085 | .. |
| 22 வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்ட மாணவரில்லம். | 1,071 | .. | .. | .. | .. | .. | 1,071 | .. |
| 23 பணிசார்ந்த பயிற்சி (சுருக்கெழுத்து, கனரக ஓட்டுநர் பயிற்சி, கணிப்பொறி பயிற்சி). | 466 | 877 | .. | .. | .. | .. | 466 | 877 |
| 24 சட்டப் பட்டதாரி களுக்குப் பயிற்சி. | 504 | .. | .. | .. | .. | .. | 504 | .. |
| 25 பள்ளிகள், மாணவரில்லங் கள் கட்டுதல் (பழுதுபார்த்தல்) | .. | 10 | .. | .. | .. | .. | .. | 10 |
| 26 மோட்டார் வாகன ஒதுக்கீடு. | .. | .. | .. | 200 | .. | .. | 200 | .. |
| 27 சத்துணவு | .. | .. | 3,135 | .. | .. | .. | .. | 3,135 |
| 28 சிறுபாசனக் கிணறு | .. | 5,000 | .. | .. | .. | .. | .. | 5,000 |
| மொத்தம் .. | 33,093 | 67,352 | 14,549 | 95,858 | 42,399 | 81,170 | 128,951 | 205,479 |

மொத்தம்—1991–92

| | | |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை .. | 1,42,134 | 3,55,770 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை .. | 2,13,636 | |

மொத்தம்—1992–93

| | | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர்மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 1,54,471 | 1,55,059 | 3,69,361 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் .. .. | 588 | | |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சீர்மரபினர் நலத்துறை | | 2,14,302 | |

164970
சென்னை-600 003.
D
V2 11,3.1992
N12.19.3